விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு + II
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 04 புதன்கிழமை (19.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 182

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே



வடக்கு மார்க்கத்துக்கான

## 4 ரயில் சேவைகள் நாளை இரத்து

(கொழும்பு)

வடக்கு மார்க்கத்திலான 4 ரயில் சேவைகளை நாளை 20ஆம் திகதி இரத்து செய்வதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு ரயில் மார்க்கத்தில் பொல் கஹவெலயில் இருந்து பொத்து ஹெர வரையிலான மார்க்கத்தில் இடம்பெறவுள்ள மார்க்க ▶23

நுவரெலியா, அம்பாந்தோட்டையில்

## சஹறான் தீவிரவாத செயற்பாட்டை முன்னெடுத்தார்

### காத்தான்குடி ஓ.ஐ.சி தகவல்

(கொழும்பு)

சஹறான் உள்ளிட்ட தீவிரவாத குழுவினர் நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பகுதி களில் வைத்தே தீவிரவாத செயற் பாடுகளில் ஈடுபட்டதாக காத் தான்குடி பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி கஸ்தூரியாராச்சி ▶23

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில்

## எந்தக் கருத்தையும் தெரிவிக்க வேண்டாம்

### ஐ.தே.கவினருக்கு ரணில் உத்தரவு



(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்க வேண்டாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய ▶23

கல்முனை போராட்டம்

## இன்று மதியம் வரை அவகாசம்

(கல்முனை)

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு கோரி, நடைபெறும் உண்ணா விரத போராட்டத்தை கைவிடும்படி அம்பாறை அரச அதிபர் விடுத்த கோரிக்கையை போராட் ▶23

## தரம் 5

புலமைப்பரிசில் பரீட்சை மேல்மாகாண மாதிரி வினாத்தாள் உள்ளே...

புதன், வெள்ளி தொடர்ந்து வெளிவரும்

பௌத்த கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட

# அரச கொள்கையையே நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும்



### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்த கோட்பாடுகளை அடிப்படையாக கொண்ட அரச கொள்கையையே நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

பாராளுமன்ற தெரிவுக்குழு விவகாரம்

## நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரி மௌனம்

(கொழும்பு)

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் பாராளுமன்ற தெரிவுக் குழு விவகாரம் உள்ளிட்ட சர்ச் சைக் குரிய விடயங்கள் தொடர் பான எந்தவொரு கருத்தையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைக்கவில்லை என்றும், இதனால் அமைதியான முறையில் கூட்டம் நடந்ததாகவும், அமைச் சர்கள் தெரிவித்துள்ளனர். ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர் ▶24

## பதவிகளை மீளப்பெறுவது தொடர்பான கலந்துரையாடல் இணக்கப்பாடின்றி நிறைவு

(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகிய முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் பதவிகளை ஏற்பது தொடர் பான கலந்துரையாடல் இணக்கப் பாடின்றி நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பதவி விலகிய முஸ்லிம் அமைச் சர்கள், பிரதி அமைச்சர்கள் மற் றும் இராஜாங்க அமைச்சர்கள் நேற்று ஒன்றுகூடி இது தொடர்பில் கலந்தாலோசித்த போதி ▶24

## 60 கிலோ கேரளக்கஞ்சா கெருடாவில் பகுதியில் மீட்பு

### சந்தேகத்தில் ஒருவர் கைது



(கரணவாய்)

வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக் கையில் 60 கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன், அது தொடர் பில் சந்தேக நபர் ஒருவர் ▶23

## விமல் வீரவன்சவை பரிசோதிக்குக

### சபையில் ரிஷாட்

(கொழும்பு)

விமல்வீரவன்சவின் மூளையை பரிசோதிக்க வேண்டும் என பாராளு மன்றத்தில் ரிஷாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று ▶23

எதிர்க்கட்சி தலைவருக்கு வழங்கப்பட்ட

## வீடு, வாகனத்தை சம்பந்தன் எடுத்துவிட்டார் - மகிந்த



(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவருக்கு வழங்கப்பட்ட வாகனம் மற்றும் வீட்டை முன்னர், எதிர்க் கட்சி தலைவராக இருந்த இரா.சம்பந்தன் எடுத்துவிட்டார் என்று தற்போதைய ▶24

## முஸ்லிம் பின்னணியில் அமெரிக்க நிகழ்ச்சி நிரல்

### பாராளுமன்றில் விமல் வீரவன்ச

(கொழும்பு)

அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு இணங்கவே முஸ்லிம் அடிப்படைவாதம் இன்று நாட்டில் செயற்பட்டு வருவ தாக மகிந்த ஆதரவு பாராளு மன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித் ▶23

## வடக்கில் வறட்சியால் ஒரு இலட்சம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

வட மாகாணத்தில் நில வும் வறட்சி காரணமாக, 1,90,244 பேர் பாதிக்கப்பட் டுள்ளதாக, அனர்த்த முகா மைத்துவ நிலையம் தெரி வித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் சுமார் 21 ஆயிரம் குடும்பங் களும் மன்னாரில் சுமார் 18 ஆயிரம் குடும்பங்களும் பாதிக் கப்பட்டுள்ள அதே ▶23

## இராணுவ தலைமை அதிகாரி
# சவேந்திர சில்வாவுக்கு
## ஜனாதிபதியால் சேவை நீடிப்பு



(கொழும்பு)

இராணுவத் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சேவை நீடிப்பு வழங்கியுள்ளார்.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் பதவிக்காலம் வரும் ஜூன் 21ஆம் திகதியுடன் முடிவடையவிருந்தது.

இந்த நிலையிலேயே அவருக்கு ஜூன் 22ஆம் திகதியிலிருந்து, 2019 டிசம்பர் 31ஆம் திகதிவரை சேவை நீடிப்பு வழங்கி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தர விட்டுள்ளார் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார். (ம)

## நான்கு அரசாங்கங்கள்
# தற்போது ஆட்சியில்
## தயாசிறி ஜயசேகர

(கொழும்பு)

எமது நாட்டில் நான்கு அரசாங்கங்கள் தற்போது ஆட்சியில் உள்ளனவெனத் தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர, அவற்றைப் பட்டியலிட்டுக் காட்டினார்.

இதற்கமைய நாட்டில் ஜனாதிபதியின் ஆட்சியும் பிரதமரின் ஆட்சியும் சபாநாயகரின் ஆட்சியும் எதிர்க்கட்சித் தலைவரின் ஆட்சியும் காணப்படுவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்துரைத்த அவர், சபாநாயகர் கரு ஜயசூரிய, கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி சம்பவத்துக்குப் பின்னர் இருந்தே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவது குறித்த தயார்படுத்தல்களை முன்னெடுத்து வருகிறார் எனவும் தெரிவித்தார். (ம)

## லலித், குகன் வழக்கு
# கோத்தபாய வெள்ளியன்று
## யாழ்.நீதிமன்றில் ஆஜராவார்?

முன்னிலை சோசலிச கட்சியின் செயற்பாட்டாளர்களான லலித், குகன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆஜராகுமாறு கட்டளை பிறப்பித்த வழக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் இடம்பெறவுள்ளது.

யாழில் 2011ஆம் ஆண்டு கட்சியின் செயற்பாட்டாளர்களான குறித்த இருவரும் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு கடந்த 3ஆம் திகதி யாழ்.நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றது.

அன்றைய வழக்கில் முன்னாள் அரச ஊடகப் பேச்சாளரான ஹெகலிய ரம்புக்வெல அக்காலப் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்ட குறித்த முன்னிலை சோசலிசக் கட்சியின் இரு உறுப்பினர்கள் பற்றித் தெரிவித்த கருத்துத் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச்



செயலாளரை ஆஜராகுமாறு ஏற்கெனவே மன்று கட்டளையிட்டது.

இந்நிலையில் குறித்த திகதியில் ஆஜராகாத முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் நாளை மறுதினம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்றில் முன்னிலையாவார் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் வழக்கு இடம்பெறவுள்ளது. (ம-10)

## இலங்கைப் பணியாளர்களுக்கு
# ஜப்பானில் வேலைவாய்ப்பு

இலங்கைப் பணியாளர்களுக்கு ஜப்பானில் 14 துறைகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவுள்ளது

இதுதொடர்பான ஒப்பந்தம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் ஜப்பானின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்குமிடையில் ஜப்பானில் இன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

தாதியர், கட்டடங்களை பராமரித்தல், இயந்திர தொழிற்றுறை, இலத்திரனியல் துறை, தொடர்பாடல் துறை, கட்டுமாணம், போக்குவரத்து மற்றும் பராமரிப்பு, மின்னணுத்துறை, கப்பற்றுறை, விமானத்துறை, விவசாயம், மீன்பிடித்துறை, உணவுப் பொருட்கள் உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் இலங்கையர்களுக்கு ஜப்பானில் தொழில் வாய்ப்பு கிடைக்கவுள்ளது . (ம)

# வயது வந்த ஆணுடன்
# 15 வயது பெண் தலைமறைவு
## இருவரும் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

வயது வந்த ஆண் ஒருவருடன் தலைமறைவாகியிருந்த பதினைந்து வயதுடைய பெண்ணையும் குறித்த ஆணையும் கிளிநொச்சிப் பொலிஸார் ஊர்காவற்றுறையில் கைது செய்தனர்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

கிளிநொச்சிப் பகுதியை வதிவிடமாகக் கொண்ட இருவரும் கடந்த வாரம் குறித்த பகுதியை விட்டு தலைமறைவாகி இருந்த னர்.

இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

முறைப்பாட்டை அடுத்து துரித விசாரணையை மேற்கொண்ட கிளிநொச்சிப் பொலிஸார், யாழ்.ஊர்காவற்றுறைப் பகுதியில் குறித்த இருவரையும் கைது செய்தனர்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தரிடம் தொடர்பு கொண்டபோது, குறித்த சம்பவம் உண்மை என்று தெரிவித்ததோடு கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுப்பதாகத் தெரிவித்தார். (ம-10)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-6583)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# முஸ்லிம் அமைச்சர்களின் பிரச்சினையை தீர்க்க முன் மக்களின் பிரச்சினையை தீர்க்குக
## பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**
**வணிகத்தில் இரண்டாம் தேர்வு (வெளிவாரி) - 2016**
**இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை**


மேற்படி பரீட்சையானது எதிர்வரும் ஆடி மாதம் 06ம் திகதி தொடக்கம் 20ம் திகதி ஆடி மாதம் வரை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் தங்களது பரீட்சை அனுமதி அட்டையினை 02.07.2019 ம் திகதியிலிருந்து 05.07.2[illegible]ம் திகதி வரை அலுவலக நேரத்தில் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணினூடாக தொடர்புகொள்ள முடியும்.

**பதிவாளர்**
**17.06.2019**
(C-6726)

(கொழும்பு)

முஸ்லிம் அமைச்சர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் முன்னர் நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.



எத்துல்கோட்டே விக்கிரமசிங்க பிளேஸ் பகுதியில் அமைந்துள்ள அரசசார்பற்ற உயர் கல்விப் பிரிவுக்கு நேற்று விஜயம் செய்த பின்னர், செய்தியாளர்களிடம் பேசும் போதே ரத்ன தேரர் இதனைக் கூறியுள்ளார்.

பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்கள் கூறுவது போல், அவர்களின் பிரச்சினைக்கு இரண்டு மாதங்களில் பதிலளிக்க எந்த தரப்பும் கடமைப்பட்டிருக்கவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்து சுமார் இரண்டு மாதங்கள் ஆகின்றது. எனினும் அதில் சிக்கியவர்களுக்கு இன்னும் தீர்வு வழங்கப்படவில்லை.


தமது பிரச்சினைகளுக்கு தீர்வைத் தேடாமல், நாட்டிற்குள் நடந்த பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அத்துரலியே ரதன தேரர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலால்

# பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவாத அரசு

# மகிந்தவுக்காக வாகனக் கொள்வனவு

## ஜே.வி.பி. பகிரங்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்ட ஈட்டை வழங்காத இந்த அரசாங்கம் மகிந்த ராஜபக்ஷவுக்கு அதிசொகுசு வாகனங்களைக் கொள்வனவு செய்வதாக ஜே.வி.பி. பகிரங்கமாக குற்றம்சாட்டியது.**

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இந்தத் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

குறிப்பாக உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இந்த அரசாங்கம் நட்ட ஈடடை முழுமையாக வழங்கவில்லை.

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவருக்கு வாகனங்களைக் கொள்வனவு செய்ய பல இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது என்று அவர் குற்றம் சாட்டினார்.

இதற்கு பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல எதிர்க்கட்சித் தலைவருக்கு வாகனம் வழங்குவதற்கு எதிர்க்கட்சி உறுப் பினர்களே எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை என்றும் தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி போட்டியிடுவதை தடுக்க முடியாது

### தயாசிறி உறுதி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேட்பாளராகப் போட்டியிடுவதை தடுக்க முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 50 இலட்சம் வாக்குகளை பெற்றது. ஐக்கிய தேசியகட்சி 36 இலட்சம் வாக்குகளைப் பெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 14 இலட்சம் வாக்குகளைப் பெற்றது.

இதனால், பொதுஜன பெரமுனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து போட்டியிட்டால் மாத்திரமே 65 இலட்சம் வாக்குகளை ஜனாதிபதித் தேர்தலில் பெற்று வெற்றி பெற முடியும். பொதுஜன பெரமுன தனித்து போட்டியிட்டால். அவர்கள் 14 இலட்சம் வாக்குகளை பெற்றுக் கொள்ள வேறு வழியை நாட வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் 2018 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலுக்கு அமைய நடைபெறும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராகவும் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராகவும் போட்டியிட வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்பது எனது நம்பிக்கை. மைத்திரிபால சிறிசேனவுக்கு சிறுபான்மை மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார். (இ-7)


## சுற்றுவட்டப்பாதையில் இணைந்த 'ராவணா 1'

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது செயற்கை கோளான 'ராவணா 1' நேற்று முன்தினம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து சுற்றுவட்டப்பாதைக்குள் ஏவப்பட்டது.

இந்த செயற்கைக்கோள் செலுத்தும் நிகழ்வை ஜப்பானின் வான்வெளி ஆய்வுப் பயண முகவர் நிலையம் யூடியூப்பில் ஒளிபரப்பியது. ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதரகத்திலுள்ள அதிகாரிகள் இந்த நிகழ்வைக் கண்டுகளித்தனர்.

இந்தச் செயற்கைகோள் கடந்த ஏப்ரல் மாதம் நாசாவின் வேர்ஜினியா கிழக்கு கரையோரத்தில் உள்ள நிலையத்தில் இருந்து விண்ணில் செலுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.



இலங்கையில் மொறட்டுவையில் உள்ள ஆர்தர் சி. கிளார்க் நிறுவனத்தைச் சேர்ந்த தரிந்து தயாரட்ன மற்றும் துலானி சாமிக்க ஆகிய ஆராய்ச்சி பொறியியலாளர்களால் ஜப்பானில் உள்ள FAR தொழில்நுட்ப நிலையத்தில் வைத்து வடிவமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கையாலாகாதவர்களாக தமிழ்த் தலைமைகள்

### பிக்குகளை மக்கள் நாட இதுவே காரணம்



(ஏறாவூர்)

தமிழ்த் தலைமைகள் கையாலாகாதவர்களாக இருக்கின்றமையினாலேயே கிழக்கு தமிழ் மக்கள் பௌத்த பிக்குகளை நாடிச் செல்கின்ற சூழல் உருவாகியிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மக்கள் போராட்டங்களில் பிக்குகளின் பிரசன்னம் அதிகரித்து வருவது தொடர்பாக வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தமிழ் மக்களின் பிரச்சினைகளில் தமிழ்த் தலைமைகள் கையாலாகாதவர்களாகவும் வினைத்திறன் அற்றவர்களாகவும் இருக்கின்றமையால் தமிழ் மக்கள் பௌத்த மதகுருமாரை நாடிச் செல்கின்றனர்.

அதேபோன்று அரசியல் தலைமைகள் தயக்கம் காட் டுகின்ற தமிழ் மக்களுடைய பிரச்சினைகளில் பௌத்த மத குருமார் வலுச்சேர்த்து வருகின்றனர்.

குறிப்பாக மீராவோடை காணிப் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகளில் தமிழ்த் தலைமைகள் நல்லிணக்கம் என்று கூறிக்கொண்டு ஒளிந்திருக்கையில் பௌத்த மதகுருமார் தமிழ் மக்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டனர்.

ஆகவே, தமிழ்த் தலைமைகள் சரியாகச் செயற்பட்டால் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை சரியாக அணுகினால் தமிழ் மக்கள் பிக்குகளை நாடிச் செல்ல வேண்டிய தேவையில்லை" என்று விளக்கமளித்தார். (இ-7)

## கோத்தபாய முன்வைத்த மனுக்கள் விசாரணையின்றி தள்ளுபடி!

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ முன்வைத்த இரண்டு மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விசாரணையின்றி தள் ளுபடி செய்யப்பட்டது.

டி.ஏ ராஜபக்ஷ நூதனசாலை நிர்மாணிப்பு தொடர்பில் விசேட நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படும் வழக்கில் முன்வைக்கப்பட்ட ஆரம்பகட்ட ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இரண்டு மனுக்களே இவ்வாறு தள்ளுபடிசெய்யப்பட்டன.

மேன்முறையீட்டு நீதிபதிகளான அசல வெங்கப்புலி, அர்ஜுன் ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் குறித்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. குறித்த மனுக்கள் தொடர்பில் சட்ட நிலைமைகள் இல்லை என தெரிவித்து இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இருபாலையில் இளம்பெண் கழுத்தறுப்பு சிறிய தந்தைக்கு 14 நாட்கள் மறியல்

### நீதவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

காணிப் பிணக்குக் காரணமாக இளம் பெண்ணைக் கொலை செய்த சிறிய தந்தையை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் அந்தோனிப்பிள்ளை பீற்றர் போல் உத்தரவிட்டார்.

காணிப் பிணக்குக் காரணமாக சிறியதந்தை பெறாமகன் உறவு முறையான ஆண் ஒருவரை கத்தியால் குத்திவிட்டு அவ் வீதியால் வந்த பெறாமகளையும் கத்தியால் வெட்டுப் படுகொலை செய்தார்.

குறித்த கொலையைப் புரிந்த சிறிய தந்தை கத்தியுடன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில் கோப்பாய் பொலிஸார் யாழ்.நீதவான் வாசஸ்தலத்திற்குக் கொண்டு சென்ற போது குறித்த உத்தரவைப் பிறப்பித்தார். (இ-10)




# ‘சிக்கர்’ மோர்கன் ‘நூறு’ இங்கிலாந்து ‘ஜோரு’

## ஆப்கானை வீழ்த்தி இமாலய வெற்றி

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான உலக கிண்ணலீக்போட்டியில்இங்கிலாந்து அணி 150 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது. சிக்சர் மழை பொழிந்த அணித் தலைவர் மோர்கன் 71 பந்துகளில் 148 ஓட்டங்களை விளாசினார்.

இங்கிலாந்தில் 12 வது உலக கிண்ணத் தொடர் நடக்கிறது. மாஸ்செஸ்டரில் நடந்த லீக் போட்டியில் இங்கிலாந்து, ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி அணித் தலைவர் மோர்கன், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**மோர்கன் ‘வேகம்’**

இங்கிலாந்து அணிக்கு பேர்ஸ்டோவ், ஜேம்ஸ் வின்ஸ் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. 31 பந்துகளில் 26 ஓட்டங்கள் எடுத்த போது வின்ஸ், தவ்லத் பந்தில் ஆட்டமிழந்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக 140 ஓட்டங்கள் எடுத்த போது, பேர்ஸ்டோவ் (90) அவுட்டாகினார். ஜோ ரூட், நான்காவது அரைசதம் அடித்தார். வந்த வேகத்தில் இருந்து சிக்சர் மழை பொழிந்தார் அணித் தலைவர் மோர்கன்.

இத்தொடரில் உள்ள மற்றவற்றை விட சிறிய மைதானமான இங்கு, ஆப்கானிஸ்தான் பந்துவீச்சாளர்களும் சுமாராக செயற்பட, மோர்கன் 57ஆவது பந்தில் சதம் விளாசினார். ஒருநாள் அரங்கில் இது இவரது 13வது சதம். 3வது விக்கெட்டுக்காக 189 ஓட்டங்கள் சேர்த்த போது, குல்பதீன் ஓவரில் ஜோ ரூட் (88) ஆட்டமிழந்தார்.

இதே ஓவரின் கடைசி பந்தில் மோர்கனும் (148 ஓட்., 71 பந்து) வீழ்ந்தார். பட்லர், ஸ்ரோக்ஸ் தலா 2 ஓட்டங்கள் எடுத்தனர். மொயீன் அலி (31), வோக்ஸ் (1) ஆட்ட மிழக்காமல் இருந்தனர். இங்கிலாந்து அணி 50 ஓவரில் 6 விக்கெட்டுக்களை இழந்து 397 ஓட்டங்களைக் குவித்தது.

**ஹஸ்மதுல்லா ஆறுதல்**

இமாலய இலக்கைத் துரத்திய ஆப்கானிஸ்தான் அணிக்கு நூர் அலி, குல்பதீன் ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது. ஓட்டக்க கணக்கை ஆரம்பிக்காத நூர் அலி, ஆர்ச்சர் பந்தில் போல்டானார். கேப்டன் குல்பதீன் 37 ஓட்டங்கள் எடுத்தார். ரஹ்மத் 46, அஸ்கர் 44 ஓட்டங்கள் எடுக்க, மொஹமட் நபி 9 ஓட்டங்கள் எடுத்தார்.

சற்று தாக்குப்பிடித்த ஹஸ்மதுல்லா 76 ஓட்டங்கள் எடுத்து திரும்பினார். நஜிபுல்லா (15) நிலைக்கவில்லை.ஆப்கானிஸ்தான் அணி 50ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. 1975க்குப் (202 ஓட்., எதிர் இந்தியா) பின் உலக கிண்ணத் தொடரில் தொடரில் இங்கிலாந்து அணி இமாலாய வெற்றியை பதிவு செய்தது. இதுவரை களமிறங்கிய 5 போட்டிகளிலும் தோற்ற ஆப்கானிஸ்தான் அணி அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

**1** உலக கிண்ண அரங்கில்வேகமாக சதம் அடித்த முதல் இங்கிலாந்து வீரர் ஆனார்மோர்கன். இவர் 57வது பந்தில் சதம் எட்டினார்.

◆ சர்வதேச அளவில் நான்காவது வீரர் ஆனார் மோர்கன். முதல் மூன்று இடத்தில் அயர்லாந்தின் கெவின் ஓ பிரையன் (50 பந்து, 2011, இங்கிலாந்து), அவுஸ்திரேலியாவின் மக்ஸ்வெல் (51 பந்து, 2015, இலங்கை), தென்னாபிரிக்காவின் டி வில்லியர்ஸ் (52 பந்து, 2015, மே. தீவுகள்) உள்ளனர்.

**17** ஒருநாள் போட்டியில் ஒரு இன்னிங்சில் அதிக சிக்சர் அடித்த முதல் வீரர் என்ற புதிய சாதனை படைத்தார் இங்கிலாந்தின் மார்கன். இவர் நேற்று 17 சிக்சர் அடித்தார். இதற்கு முன் ரோகித் சர்மா (இந்தியா), டி வில்லியர்ஸ் (தெ.ஆப்.,), கெய்ல் (விண்டீஸ்) ஒரு போட்டியில் தலா 16 சிக்சர் அடித்து இருந்தனர்.


மின்னல் வேகத்தில் சதம் அடித்த மகிழ்ச்சியில் இங்கிலாந்து அணித் தலைவர் ஒய்ன் மோர்கன்


**ரஷிட் கான் சோகம்**

ஒருநாள் அரங்கில் ஒரு போட்டியில் அதிக ஓட்டங்களை விட்டுக்கொடுத்த பந்து வீச்சாளர்களில் ரஷிட் கான் (110 ஓட்., 9 ஓவர்) 3வது இடம் பிடித்தார். முதல் இரு இடத்தில் மைக்கல் லீவிஸ் (ஆஸி., 113 ஓட்., எதிர் தெ.ஆப்., 2006), வகாப் ரியாஸ் (பாக்., 100 ஓட்., எதிர் இங்கிலாந்து, 2016) உள்ளனர்.

◈ ஒரே போட்டியில் அதிக சிக்சர் (11) விட்டுக் கொடுத்த பந்துவீச்சாளர்களில் முதலிடம் பெற்றார் ரஷிட் கான்.

# சானியா மிர்சா ‘ஆவேசம்’


வீணா மலிக்


சானியா மிர்சா

“பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் என்ன சாப்பிட வேண்டும் என உத்தரவு போடுவதற்கு, நான் அணியின் 'டயட்டீசியன்' கிடையாது,” என டென்னிஸ் வீராங்கனை சானியா ஆவேசமாக தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து மண்ணில்நடக்கும் உலக கிண்ண லீக் போட்டியில் இந்திய அணியிடம் பாகிஸ்தான் வீழ்ந்தது. இது, பாகிஸ்தான் முன்னாள் வீரர்கள், ரசிகர்கள் இடையே கோபத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்தியாவுக்கு எதிரான போட்டிக்கு முன், சோயப் மலிக் உள்ளிட்ட சில பாகிஸ்தான் வீரர்கள் இரவு நேரத்தில் மான்செஸ்டரில் உள்ள 'ஷிஷா கபே'வுக்கு சென்றதாக புகார் கிளம்பி உள்ளது.

இவர்களுடன் மலிக் மனைவியும், இந்திய டென்னிஸ் வீராங்கனையான சானியாவும் இருந்தார். இந்த 'வீடியோ' சமூகவலைளத்தில் வெளியாகி உள்ளன. இப்படி பொறுப்பில்லாமல், பாகிஸ்தான் வீரர்கள் செயற்பட்டதாக, அந்நாட்டு நடிகை வீணா மலிக் புகார் கூறி இருந்தார்.

**இடைவெளி அவசியம்**

சானியா 'டுவிட்டரில்' வெளியிட்ட செய்தியில்,' விளையாட்டு வீராங்கனையான எனக்கு, 'பர்கர்' உள்ளிட்ட உணவு வகை சாப்பிடுவது கெடுதல் என தெரியாதா என வீணா கேள்வி கேட்டுள்ளார். பாகிஸ்தான் அணியினர் என்ன சாப்பிட வேண்டும் என உத்தரவு போடுவதற்கு, நான் அந்த அணியின் 'டயட்டீசியன்' கிடையாது,' என, தெரிவித்துள்ளார்.

**மாற்றம் ஏற்பட்டால்...**

பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பராஸ் அகமது கூறுகையில்,“ உலக கிண்ணத் தொடரில் நடந்த மோசமான சம்பவங்களை மறந்துவிட வேண்டும். வீரர்கள் ஒன்றிணைந்து சிறப்பாக செயற்படுவது அவசியம். மீதமுள்ள போட்டிகளில் சாதிப்பது கட்டாயம். இதில் மாற்றம் ஏற்பட்டால், நான் மட்டும் பாகிஸ்தானுக்கு விரைவில் திரும்ப செல்ல மாட்டேன். சக வீரர்களும் என்னுடன் சேர்ந்துதான் வர வேண்டும். அப்போது, பாகிஸ்தான் மக்களின் கடுமையான கோபத்தை எதிர்கொள்ள தயாராக இருப்பது அவசியம்," என்றார்.

**எல்லை மீற வேண்டாம்**

இந்தியாவுக்கு எதிரான தோல்வியை அடுத்து பாகிஸ்தான் வீரர்களை சமூக வலைதளத்தில் அந்நாட்டு ரசிகர்கள் திட்டி தீர்க்கின்றனர். இது குறித்து பாகிஸ்தான் வேகப் பந்துவீச்சாளர் ஆமிர் 'டுவிட்டரில்' வெளியிட்ட செய்தியில்,' எங்களின் செயற்பாட்டை ரசிகர்கள் விமர்சனம் செய்யலாம். இதற்காக, மோசமான வார்த்தையில் திட்ட வேண்டாம். உங்கள் ஆதரவு இருந்தால், விரைவில் மீண்டு வருவோம்,' என, தெரிவித்துள்ளார்.




# சிலி அசத்தல் வெற்றி

ஜப்பான் அணிக்கு எதிரான கோபா அமெரிக்கா கால்பந்து லீக் போட்டியில் சிலி அணி 4-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

தென் அமெரிக்க அணிகளுக்கு இடையே கோபா அமெரிக்க கால்பந்து தொடர் நடத்தப்படுகிறது. இதன் 46வது சீசன் பிரேசிலில் நடக்கிறது. வெனிசுலா, ஆர்ஜென்ரீனா உள்ளிட்ட 12 அணிகள் பங்கேற்கின்றன. இதன் 'சி' பிரிவு லீக் போட்டியில் ஜப்பான், 'நடப்பு சம்பியன்' சிலி அணிகள் மோதின.

தரவரிசையில் ஜப்பானை (28) விட முன்னிலையில் இருந்த சிலி (16) அணி மிரட்டியது. போட்டியின் 41வது நிமிடத்தில் சிலி அணிக்காக எரிக் முதல் கோல் அடித்தார். எடுர்டோ (54) கைகொடுக்க, சிலி எண்ணிக்கை இரட்டிப்பானது.

கடைசி கட்டத்தில் சிலி வீரர் அலெக்சிஸ் (82) வலைக்குள் பந்தை அனுப்பினார். மீண்டும் எடுர்டோ (83) அசத்தினார். எதிரணியின் எந்த முயற்சிக்கும் பலன் கிடைக்கவில்லை. முடிவில், சிலி அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.


இரட்டைக் கோல்களை அடித்த சிலியின் எடுர்டோ மகிழ்ச்சியின் உச்சத்தில்

# பெறுகை அறிவித்தல்

## காரைநகர் பிரதேச சபை, காரைநகர் மூலோபாய திட்டங்கள் நிதி - 2019

01. தலைவர், பெறுகைக்குழு, காரைநகர் பிரதேச சபை, காரைநகர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவேலைக்காக கோரப்படுகின்றது.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

1. கேள்விதாரர் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையில் **(Sri Lanka Sustainable Energy Authority) Solar System** வழங்குநராக பதிவு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.
2. கேள்விதாரர் சூரியகலத் தொகுதிசார்பாக பின்வரும் விடயங்களை **(design, Planning, Supplying, testing, Commissioning and maintenance)** மேற்கொள்வதில் குறைந்தது 02 வருடஅனுபவம் உடைய கம்பனியாக இருத்தல் வேண்டும்.
3. வழங்குநர் முழு சூரியகல அமைப்பினையும் பராமரிக்கக்கூடிய உள்நாட்டு முகவரை கொண்டிருப்பதுடன் இரு வார காலத்தினுள் உதிரிப்பாகங்களைவழங்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
4. இலங்கையில் சூரியகல உற்பத்தி மற்றும் அதுசார்ந்த உதிரிப்பாகங்கள் வழங்குதல் தொடர்பான திருப்திகர சேவைப்பதிவை கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள வழங்குநர்கள் வலந்தலை, காரைநகரில் அமைந்துள்ள காரைநகர் பிரதேச சபை (தொலைபேசி: 021 225 2102, தொலைநகல்: 021 225 1735, **Email: karainagarps@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 9.00 மணிமுதல் பி.ப 16.00 மணிவரை 19.06.2019ஆம் திகதியிலிருந்து 02.07.2019 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

05. ஆர்வமுள்ள வழங்குநர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் காரைநகர் பிரதேச சபையில் 19.06.2019 ஆம் திகதியிலிருந்து 02.07.2019 ஆம் திகதிவரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை, மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/- (வற் தவிர்ந்து) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர்,காரைநகர் பிரதேச சபை, வலந்தலை, காரைநகர் என்னும் முகவரிக்கு 03.07.2019 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

07. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியில் இருந்து 49 (நாற்பத்தொன்பது நாட்கள் - 20.08.2019) வரையும் செல்லுபடியாகும்.

08. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | வேலை விபரம் | ஒப்பந்த இல | மதிப்பீட்டு தொகை (மில்.ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை - பிணை வைப்பு | கேள்விப் பிணை - செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | Supply, Installation Commissioning and maintenance of 5kw Grid Connected Solar PV system at Karainagar Pradeshiya Sabha | NP/14/41(08)/02/Solar panel/2019 | 0.870 | 01 மாதம் | இலங்கை மின்சார சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 10,000.00 | 03.09.2019 |

09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 25.06.2019 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) பி.ப 2.30 மணிக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ளலாம்.

தலைவர்,பெறுகைக் குழு
காரைநகர் பிரதேச சபை,
காரைநகர்.

(C-6717)

# மின்சார சபை இலாபமடைய உலகை வெற்றி கொள்ளவேண்டும்

## ரவி அறிவுரை

(கொழும்பு)

அதிக செலவை ஏற்படுத்தும் மின் உற்பத்தி நிலையங்கள் ஒன்றரை வருடத்தில் முழுமையாக நிறுத்தப்படுமென மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

அதேபோல், மேலும் சில மாதங்களில் இலங்கை மின்சார சபை வெளிநாடுகளிலும் ஒப்பந்த அடிப்படையில் வேலைகளை ஆரம்பிக்க வேண்டுமென அவர் தெரிவித்தார். மின்சார சபை இலாபமடைய வேண்டுமானால் உலகை வெற்றி கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு மின்சார சபையிடம் இருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எப்போதும் பாவனையாளர்களுக்கு முக்கியத்துவம் அளித்துச் செயற்பட இலங்கை மின்சார சபை மாற்றம் காண வேண்டும்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவத்தில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

வெசாக் மற்றும் பொசன் பண்டிகைக் காலத்தில் நாடு இருளில் இருப்பதைக் காண்பதில் மகிழ்ச்சியடைய முயற்சித்த எதிரணிகளின் கனவை சீர்குலைக்க அரசாங்கத்தால் முடிந்திருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (7)

## போலி நாணயத்தாள்களுடன் இருவர் கைதானர்

போலி நாணயத்தாள்களை வைத்திருந்த இரண்டு பேர் ஹசலக, உடுதக பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். ஹசலக பொலிஸ் அதிகாரிகளால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து போலி 1000 ரூபா நாணயத்தாள்கள் மூன்று மீட்கப்பட்டுள்ளன.

ஹசலக பிரதேசத்தைச் சேர்ந்த 26 மற்றும் 27 வயதுடைய இரண்டு இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளதுடன், மகியங்கனை நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (7)

# இராசி பலன்

**மீனம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, காரிய சித்தியுண்டு.

**மேடம்:** உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** சிரித்துப் பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், அலங்காரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**கும்பம்:** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், அந்நிய தேசத்து தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்:** உறவினர்களின் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** பயணத்தால் பலனுண்டு, உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சுப விரயங்கள் கூடும் நாள்.

**சிம்மம்:** அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பில் பெருமையடைவீர்கள்; தாழ்ந்த சுபாவமுண்டு, சிறப்பான நாள்.

**தனுசு:** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு, எதிர்பாராத காரியமொன்று நடைபெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.

**விருச்சிகம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ்கூடும் நாள்.

**கன்னி:** பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாகன யோகத்தால் வளம் காணும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

கிரகநிலை: சுக் | செவ்.புத ராகு, சூரி | சனி,சந் கேது | குரு

சந்திராஷ்டமம் மிருகசீரிடம், திருவாதிரை

**19.06.2019**

ஆனி 04, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.06 மணிக்கு

துதியை பிற்பகல் 4.08மணிவரை

பூராடம் பிற்பகல் 2.17 மணிவரை

சுபநேரம் 4.24-5.54 மணிவரை

இராகுகாலம் 11.54-1.24 மணிவரை

வளவன்

# சேவைக்காலம் சேர்க்கப்படாத ஆசிரியர்கள் விஜயகலாவிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நியமனம் வழங்கப்பட்டுச் தாம் சேவையாற்றிய 3 வருட சேவைக்காலத்தை தமது சேவைக் காலம் கணிக்கும் போது சேர்த்துக்கொள்ளாது கணிக்கப்பட்டுள்ளமையால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் யாழ்ப்பாண அலுவலகத்திற்குச் சென்ற மூன்று வருட சேவைக்காலம் சேர்க்கப்படாதமையால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் பிரதிநிதிகள் அமைச்சருக்கான தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளித்துள்ளனர்.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கையடங்கிய விடயங்கள் வருமாறு, "வட மாகாணத்தில் கடந்த 01.07.2013 இல் ஆசிரியர் நியமனம் கிடைத்து ஆசிரியர் சேவைக்குள் இணைத்துக்கொள்ளப்பட்ட எமது சேவைக் காலத்தை 01.08.2016 இல் இருந்து தற்போது கணிக்கப்பட்டுள்ளது. இதனால் எமது சேவைக் காலம் மூன்று வருடங்களால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக எமது பதவி உயர்வு, சம்பள ஏற்றம் போன்றவற்றில் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

கடந்த யுத்தகாலம் உள்ளடங்கலாக, கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, வடமராட்சி கிழக்கு, மடு போன்ற கல்வி வலயங்களின் கீழ் உள்ள பாடசாலைகளில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக கடந்த 15 வருடத்திற்கும் மேலாக எவ்வித கொடுப்பனவுமற்ற நிலையில் தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றிய எமக்கான நிரந்தர ஆசிரியர் நியமனம் அரச கட்டுப்பாடற்ற பகுதியில் வசித்தோம் என்ற காரணத்தாலும், அரசியல் காரணங்களாலும் அப்போது வழங்கப்படாது நாம் மட்டுமே புறக்கணிக்கப்பட்டிருந்தோம்.

நிரந்தர நியமனத்தில் நாம் தொடர்ந்தும் திட்டமிட்டுப் புறக்கணித்து ஒதுக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி எமக்கான நியமனத்தை வலியுறுத்தி நாம் தொடர்ச்சியாக மேற்கொண்ட போராட்டம் காரணமாக கடந்த 01.07.2013 இல் எமக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதாகக் கூறி வடமாகாணக் கல்வி அமைச்சால் ஆசிரிய உதவியாளர் என்னும் நியமனம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பயிற்சிகளையும் முடித்து பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக வெளியேறியுள்ளோம்.

முன்னைய காலங்களிலும், தற்போதும் தொண்டர் ஆசிரியர் களுக்கு ஆசிரியர் சேவை தரம் 3-II என்ற நியமனமே வழங் கப்பட்டுள்ளது. ஆனால் எமக்கு மட்டுமே ஆசிரிய உதவியாளர் என்ற நியமனம் வழங்கப்பட்டு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

எனவே எமது சேவைக் காலம், வயது என்பவற்றினைக் கருத்திற்கொண்டு எமக்கு வடமாகாணக் கல்வி அமைச்சால் நியமனம் வழங்கப்பட்ட 01.07.2013 இல் இருந்து எமது சேவைக் காலத்தை ஆசிரியர் சேவை தரம் 3-II ஆகக் கணித்து விடுபட்டுள்ள எமது சேவைக் காலமும் சேர்க்கப்பட ஆவன செய்யுமாறு தங்களை நம்பிக்கையோடு மிகவும் பணி வாகக் கேட்டுக் கொள்கின்றோம்" என மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

# வட இலங்கைச் சங்கீத சபையின் அறிமுகப் பரீட்சை பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கைச் சங்கீத சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான அறிமுகப் பரீட்சைகள் 08.06.2019 (சனிக்கிழமை), 09.06.2019 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரு தினங்களும் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இப் பரீட்சைகள்முன்னைய நேரசூசிக்கு அமைவாக 29.06.2019 (சனிக்கிழமை) 30.06.2019 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரு தினங்களிலும் நடைபெறும் என வட இலங்கைச் சங்கீத சபையின் செயலாளர் பி.என்.சுதர்சன் அறிவித்தார். (இ)

# தனியார் பயணிகள் பேருந்தில் 70 ஆயிரம் பெறுமதியான மதுபானம்



(யாழ்ப்பாணம்)

யாழ் ஊர்காவற்றுறை இடையே பயணிகள் போக்குவரத்திலீடுபடுகின்ற தனியார் பேருந்தில் 70 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மதுபானப் போத்தல்கள் மண்டைதீவு பொலிஸ் காவலரண் பொலிஸ உத்தியோகத்தர் விவேகானந்தராஜ் தலைமையிலான குழுவால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக பேருந்து சாரதியும், நடத்துநரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வேலணையைச் சேர்ந்த நபர் ஒருவரே இவற்றை யாழ். நகரில் கொள்வனவு செய்து அல்லைப்பிட்டியிலுள்ள நபருக்கு பேருந்து ஊடாக அனுப்பிவைத்ததாக நடத்துநர் வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

இதனடிப்படையில் குறித்த நபரை கைதுசெய்யும் நடவடிக்கையில் ஊர்காவற்றுறை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற இவ்வாறான சில பேருந்துகளில் தொடர்ச்சியாக சட்ட விரோத செயற்பாடுகள் இடம் பெற்று வருவதாகவும் பேரு ந்து நடத்துநர் வாக்குமூலம் அளித்துள்ளார். (5-101)

# தென்மராட்சியில் மேலும் 4731 வீடுகள் தேவை

## பிரதேச செயலர் தேவந்தினி

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் மேலும் 4 ஆயிரத்து 731 வீடுகள் தேவைப்படுவதாக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தெரிவித்தார். அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதனைத் தெரிவித்திருந்தார். மேலும் அவர் தென்மராட்சியின் நிலவரம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

தென்மராட்சி மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள். இன்றும் வறுமை காணப்படுகிறது. இவ் வருடம் தென்மராட்சியில் 311 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

கோவிற்குடியிருப்பு-மகிழங்கேணிப் பகுதியில் 51 வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராமமும்,கைதடி-இராஜபுரியில் 36 வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராமமும் மற்றும் கைதடி-நாவற்குழியில் 81 வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராமமும் அமையப்பெறவுள்ளன.

இவற்றுக்கு மேலாக இன்னும் 4ஆயிரத்து 731 வீடுகள் தென்மராட்சியில் தேவைப்படுகின்றன.அதனை விட இவ்வாண்டு கம்பரெலியத் திட்டத்தில் இரண்டாம் கட்ட நிதியாக தென்மராட்சிக்கு 239.7மில்லியன் ரூபாய் கிடைக்கப்பெற்றது.

இந் நிதியின் மூலம் 272 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. கம்பரெலிய திட்டத்தின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் 180.2 மில்லியன் ரூபாவை 224 வேலைத்திட்டங்களிற்கும்.கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா 50மில்லியன் ரூபாவை 38 வேலைத்திட்டங்களிற்கும், பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் 9.5மில்லியன் ரூபாவை 10 வேலைத்திட்டங்களுக்குமாக ஒதுக்கியுள்ளனர்.

மொத்தமாக 239.7 மில்லியனில் 272 வேலைத்திட்டங்கள் தென்மராட்சியில் இடம்பெறவுள்ளன. மேலும் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியில் தென்மராட்சிக்கு 26.6 மில்லியன் ரூபாவை 31 வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கியுள்ளார். மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியாக 180 திட்டங்களுக்கு 9.27மில்லியன் ரூபாய் கிடைக்கப்பெற்றன. இவற்றுக்கு மேலாக இவ்வருடம் புதிதாக ஆயிரத்து 435 சமுர்த்திப் பயனாளிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.(5-30)

# யாழில் காணாமல் ஆக்கப்பட்ட பாதை தேடிச் சென்ற மாநகரசபை உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குட்பட்ட ஜும்மா பள்ளிவாசலில் இருந்து கிரான்ட் பஷாருக்குச் செல்லும் வீதியின் அருகே உள்ள கிளை வீதி பல வருடங்களாக வர்த்தகர் ஒருவரால் மூடப்பட்டதா? என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ். மாநகரசபை உறுப்பினர் வ. பார்த்தீபன் நேற்றைய தினம் குறித்த பகுதிக்குச் சென்றார். 1996 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த பாதை பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட போது வர்த்தகர் ஒருவரால் குறித்த பாதை வியாபாரம் சார்ந்த நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்ததாக அறியக் கிடைத்ததாகத் தெரிவித்தார்.

குறித்த பாதை கே.கே.எஸ் வீதி சிங்கம் புடைவையகம் மற்றும் காயத்திரி சென்ரர் ஆகியவற்றுக்கிடையில் பிரதான வீதியைச் சந்திக்கிற நிலையில் குறித்த பகுதியைப் பார்வையிடுவதற்காக மாநகர சபை உறுப்பினருடன் சென்ற ஊடகவியலாளர்களை மிரட்டும் வகையில் நபர் ஒருவர் வீடியோ எடுத்ததும் அவதானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.


இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாநகர சபை உறுப்பினர் பார்த்தீபன், மக்களுக்குச் சொந்தமான வீதியை அபகரிக்க யாரையும் அனுமதிக்க முடியாதென்றும் குறித்த வீதி தொடர்பில் இனிவரும் வாரங்களில் தீர்க்கமான முடிவெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-10)




நல்லூர் பிரதேச சபை உறுப்பினரும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட தொழில்நுட்பவியலாளருமான, கு.மதுசுதன் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற **International Global Peace University** இன் கௌரவ பட்டம் வழங்கும் நிகழ்வில் **A.P.J.**அப்துல்கலாம் நினைவான உயரிய விருதான சமூக ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர் யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானமாணி பட்டதாரியும், பேராதனை பல்கலைக்கழகத்தின் முது விஞ்ஞானமாணி பட்டதாரியும் ஆவார்.



சமூக விஞ்ஞானப் படிப்ப வட்டத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் தேசிய கலை இலக்கிய பேரவையில் இந்தியத் தேர்தல் முடிவும் தெற்காசிய அரசியலில் அதன் தாக்கமும் கலந்துரையாடல் இடம் பெற்றது.



# இராணுவத்தில் 99 வீதமானோர் சிங்கள பௌத்தர்கள்-தளபதி தகவல்

## 200 பேர் இந்துக்கள்

(கொழும்பு)

இரண்டு இலட்சம் பேரைக் கொண்ட இலங்கை இராணு வத்தில், 2500 பேரைத் தவிர ஏனையோர் அனைவரும் சிங் கள பௌத்தர்களே என்று இல ங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.

"இலங்கை இராணுவ த்தில் உள்ளவர்களில் 99 வீதமானோர் சிங்கள பௌத் தர்களேயாவர்.

இரண்டு இலட்சம் பேர் இரா ணுவத்தில் உள்ளனர். இவர் களில், 1600 கிறிஸ்தவர்க ளும், 700 முஸ்லிம்களும் இருக் கின்றனர்.

இந்துக்கள் வெறும் 200 பேரே உள்ளனர்.

எனினும், இராணுவத்துக் குள், இன, மத, சாதி பேதங்கள் எது வும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)


யாழ்ப்பாண மக்களுக்கு இனி மகிழ்ச்சியே நிரந்தரம்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

வெற்றி நிச்சயம்

எமது அன்பான உறவுகளே!

இதுவரை நீங்கள் பட்டுவந்த அஸ்தைகள் புற்றுநோய், ஆஸ்துமா, சக்கரை வியாதி, நாரிப்பிடிப்பு, மூட்டுவலி, கழுத்துவலி, முட்டுத்தேய்மானம், சொறி சிரங்கு, வெரிக்கோஸ் எந்த வியாதியானாலும் ஒரே மருத்துவத்தால் இயற் கையான மூலிகை உணவு முறையால் குணமாக்க வந்திருக்கின்றார்.

Dr. கருணாசாகர நரசிம்மதாஸ்

புலம்பெயர் வாழ்வில் இதுவரை பல ஆயிரக்கணக்கான மாணவர்களை கிருஸ்ணா யோகா நிலையத்தின் மூலம் உருவாக்கியவர். தனது சுகங்களை எதிர்பார்க்காமல் எமக்காக தமது வாழ்வை அர்ப்பணித்து இங்கு வந்து "ஈஸ்வரி இராசயோக சிகிச்சா நிலையத்தை" ஆரம்பித்து பல நோயாளிகளை குணப்படுத்தி வருகின்றார். அத்தோடு " அன்புக்கே வெற்றி நிச்சயம் என்னும் அவரது மூன்றாவது வெளியீட்டையும் வெளியீடு செய்துள்ளார். நேரில் வந்து சந்தித்து ஆலோசனை பெறலாம்.



Dr. நாகலிங்கம் குலசிங்கம் (அஷ்டாங்க யோகி)

இடம்: ஈஸ்வரி இர்ராசயோக சிகிச்சா நிலையம்.

பாலாவோடை சந்தி, இணுவில் வீதி, மானிப்பாய்.

(ஞான லிங்கேஸ்சுரர் கோவில் அண்மையில்)

தொ.இல: 077 5577517, 076 2723319

(9197)



வேலையாள் தேவை

பாலாவோடை சந்தி இணுவில் வீதி மானிப்பாயில் அமைந்துள்ள ஈஸ்வரி இராசயோக சிகிச்சா நிலையம் ஒன்றுக்கு உதவியாளர் தேவை.

தொடர்புக்கு: 077 557 7517

(9198)



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603,

021 567 1532



மூலிகை தேவை

கிளிநொச்சியில் இயங்கும் மூலிகைகளுடன் தொடர்புடைய நிறுவனத்திற்கு சிறு குறிஞ்சா இலை, கீழ்காய்நெல்லி, நாவல் விதை, மூக்கிரட்டை, மல்லிகைப் பூ, சங்குப் பூ, கற்பூரவள்ளி ஆகிய மூலிகைகள் தொகையாகத் தேவைப்படுகின்றது. நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும். இதே நிறுவனத்திற்கு யாழ்ப்பா ணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட ங்களுக்கு விற்பனையாளர்களும் விநியோகஸ்தர்களும் தேவைப் படுகின்றனர். பொருத்தமானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 076 938 6017, 021 228 3369

(கிழமை நாட்களில் 9.00-4.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.)

(C-6724)



வயோதிப குடும்பத்தினருக்கு

நவீன வசதி கொண்ட தங்குமிட வசதி

- உணவு, மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.
- வயோதிப குடும்பஸ்தர்களுக்கு நவீன வசதி கொண்ட தனிப்பட்ட அறை வசதிகள் உண்டு.
- தனிப்பட்ட பிரத்தியேக அறைகளுக்கு கட்டணம் செலுத்தப்பட்டல் வேண்டும்.
- ஆதரவற்ற ஆண்,பெண், வயோதிபர்களுக்கு இலவச பொது மண்டப வசதிகளும் உண்டு.

(C-6714)

தங்கம்மா முதியோர் இல்லம்

புதுக்குளம், கனகராயன்குளம் (A9,வீதிக்கு அருகாமையில்)

Dr.மு.குணசிங்கம் 076 248 2766

தவம் (முகாமையாளர்) 077 449 9619



பாராட்டி வாழ்த்துகின்றோம்

பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய செங்கைப்புரவோன்

உயர்திரு. இராசையா குவேந்திரநாதன் அவர்களின் தன்னலங்கருதாச் சேவையினைப் பாராட்டி

12.05.2019 அன்று கனடா இ குருவி அமைப்பினால் "புதிய வெளிச்சம்" எனும் விருதினை கனடாவில் பெற்றுக்கொண்டமைக்கும்



19.05.2019 அன்று யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் (கனடா) குமரன் விளையாட்டுக் கழகம் கனடாக் கிளையும் இணைந்து வழங்கிய "கொடை மதி" எனும் பட்டத்தினை கனடாவில் பெற்றுக்கொண்டமைக்கும்



16.06.2019 அன்று தெல்லிப்பளை இராஜேஸ்வரி மண்டபத்தில் இந்தியாவின் குளோபல் பீஸ் யுனிவெசிற்றியினால் சிறந்த சமூக சேவைக்கான கௌரவ "கலாநிதி" பட்டம் பெற்றுக்கொண்டமைக்கும்




அவர்களைப் பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை உளமாற வாழ்த்துகின்றோம்.

(9199)

உரிமையாளரும், ஊழியர்களும்-விஸ்ராவிசன், யாழ்ப்பாணம்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# முகத்தில் பருக்கள், கரும்புள்ளிகள், வெண்படை

# முக வரட்சிக்கும் முக அழகிற்கும் மூலிகைப் பாவனை



M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்றவார தொடர்ச்சி...)


உடலின் மிகப்பெரிய உறுப்பு தோல். இது உள்ளுறுப்புகளை காக்கும் கவசமாக விளங்குகிறது. நமது உடலை சீதோஷ்ண நிலைகளிலிருந்தும் நச்சுக் கிருமிகள் புகா வண்ணம் பாதுகாப்பது சருமம் தான். உடலின் உட்புறம் நிகழும் மாறுதல்களையும் நோய்களையும் வெளிக்காட்டும் கண்ணாடியாக சருமம் விளங்குகிறது.

**சருமநோய் தொல்லைகள் அகல**

இனி அழகைக்கெடுக்கும் சரும நோய்களைப் பார்ப்போம். சரும நோய்கள் எண்ணற்றவை. இருந்தாலும் தேமல், தோல் வரட்சி, கரப்பான், படர்தாமரை மற்றும் வேர்க்குரு போன்றவை தான் அதிகமாக சரும அழகைக் கெடுக்கக்கூடிய நோய்களாகும். அவை ஒவ்வொன்றின் தன்மை மற்றும் அவற்றிற்கான தீர்வை இப்போது காணலாம்.

**தேமல்**

இது தோலில் புள்ளி புள்ளியாகவோ படர்ந்தோ காணப்படும். அரிப்பு ஏற்படுத்தும் வியர்வை





பட்டால் எரிச்சலும் கொடுக்கும். இது ஒரு பூஞ்சணத் (Fungus) தொற்று ஆகும். சத்துக்குறைபாட்டாலும் உண்டாகலாம். தேமல். தோலின் இயற்கைத் தன்மையை கெடுத்து அழகைக் கெடுக்கும் தன்மையுடையது. இதை எளிய முறைகளில் தீர்க்கலாம்.

கருஞ்சீரகத்தை கொஞ்சம் எடுத்து வல்லாரைச்சாற்றில் அரைத்து இரவு மேனின்மீது பூசி, காலையில் பாசிப்பயிற்றம் மாவு தேய்த்து குளிக்க தேமல் மறையும்.

சரங்கொன்றைப்பூவை தேவையான அளவு எடுத்து எலுமிச்சம்பழம் சாறு விட்டு அரைத்து, நாள்தோறும் தேய்த்துக் குளித்து வர தேமல் மறையும்.

சீமை அகத்தி இலையை விளக்கெண்ணெய் விட்டு வெண்ணெய் போல் அரைத்து காலை மாலை பூசிக்குளிக்க தேமல் மறையும்.

தேவையான அளவு துளசிச் சாறு, எலுமிச்சம்புளிச்சாறு சமமாக எடுத்து அதில் சிறிது கற்பூரத்தை தூள் செய்து கலந்து, தோலின் மீது பூசிவர தேமல் குறையும்.

**கரப்பான்**

நீடித்த ஒவ்வாமை உடலிலிருந்தால் அது சருமத்தில் கரப்பானை (ECCEMA) உண்டாக்கும். மூதாதையர்கள் ஒவ்வாமை, தும்மல், சளி, ஆஸ்துமா, நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும் சிறு வயதில் மருந்துகளால் ஆஸ்துமா



நோய் அழுத்தப்பட்டிருந்தாலும் (Suppression) கரப்பான் வர வாய்ப்புண்டு. ஆரம்பத்தில் அரிப்பு, தடிப்புடன் கூடிய சிறு கொப்பளங்களாக தோன்றி நாளடைவில் அக்கொப்பளங்கள் உடைந்து சருமத்தினுள் நுண்கிருமி ஊடுருவி சீழ்ப்பிடித்தல், நீர் வடிதல் உண்டாகி தொல்லை தரும் சில சமயம் அந்நீர் பட்ட இடமெல்லாம் கொப்பளங்கள் உண்டாகலாம். இதனால் சரும அழகு கெட்டு வடுவை உண்டாக்கும். இக் கரப்பானுக்கான சிகிச்சை சிலவற்றை அறிவோம்.

கரப்பான் பூண்டு, பொடுதலைச் சாறு ஒவ்வொன்றும் 100ml எடுத்து, 1/4l தேங்காய் எண்ணெயில் கலந்து நீர்வற்றும் வரை காய்ச்சி வடிகட்டி கரப்பான் மீது பூசி வர குணமாகும்.


வசம்பு-3துண்டு, கடுக்காய் - 3, நீரடிமுத்து -5, கருஞ்சீரகம் - 2ஸ்பூன், வெற்றிலை-4, களிப்பாக்கு - 8, மாசிக்காய் - 2ஆகிய அனைத்தையும் பசும்பால் விட்டரைத்து பசும்பாலில் கலந்து குழம்பு போலாக்கி கோழி இறகால் தொட்டு கரப்பான் மீது பூசி வர தீரும்.

நீரடிமுத்து - 25g, கார்போகரிசி - 25g, கசகசா - 25g, சுருள்பட்டை - 25g, பழுப்பு கந்தகம் - 25g, பூவரசம் பட்டை - 25g, பூண்டு - 25g, இவற்றை எடுத்து தூளாக்கி அத்தூளை 1/2l தேங்காய் எண்ணெயில் கலந்து சூரிய ஒளியில் வைக்கவும். தினமும் கலக்கிக் காலக்கி வைக்க வேண்டும். 1 வாரம் இப்படி செய்து கரப்பான் மீது தடவி வர குணமாகும்.

**படர்தாமரை**

இது கோடைகாலத்தில் அதிகமாக ஏற்படும். படர்தாமரையில் மூன்று வகையுண்டு. அவை ஒருவருடமிருந்து மற்றவருக்கு தொற்றுவது, விலங்கின் மூலம் தொற்றுவது மண்ணின் மூலம் தொற்றுவது. இது வட்ட வட்டமாகவும் திட்டுத் திட்டாகவும் இடுப்புப் பகுதி, கை,கால்கள், முகம் ஆகியவைகளில் காணப்படும் இறுக்கமாக உள்ளாடைகள் அணிவதாலும் படர்தாமரை வரலாம்.

வெள்ளைப்பூண்டு சாறும் ஒலிவ் எண்ணெயும் சம அளவு கலந்து படர்தாமரையின் மீது இரவில் பூசி காலையில் கலந்து படர்தாமரையின் மீது இரவில் பூசி, காலையில் சோப்புப் போடாமல் குளிக்க. குணமாகும் மறையும்வரை தொடர்ந்து செய்து வரலாம். ஒலிவ் எண்ணெய் என்பது ஆழி விதையின் எண்ணெய் ஆகும்.



* தும்பை இலையையோ, திருநீற்றுப் பச்சிலை இலையையோ மஞ்சள் தூள் சேர்த்து அரைத்து படர்தாமரை மீது போட்டு வர இந்நோய் கட்டுப்படும்.

**அரிப்பு**

அரிப்பு என்பது ஒரு நோயின் அறிகுறி எனலாம். இது தூங்கும் போதும் வேலை செய்யும் போதும் வியர்த்துக்கொட்டும் போதும் அதிசயமாக தொந்தரவைத் தரக்கூடியது. அரிப்பு எவ்வாறு உண்டாகிறது என்பதற்கு சரியான விளக்கம் இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை. எனினும் இது Histamine எனும் வேதியற் பொருளாலே ஏற்படுத்தப்படுகிறது. தோல்நோய் அனைத்திலும் அரிப்பு தவிர்க்க முடியாத பிரச்சினையாக உள்ளது.

எனவே தோல்நோய் சிகிச்சைகளை மேற்கொண்டு கூடவே கீழ் கொடுக்கப்பட்ட சில சிகிச்சைகளையும் மேற்கொண்டால் அரிப்புக்கு தீர்வு கிடைக்கும். குளியல் பொடி அரிப்புக்கு சிறந்த தீர்வாக அமையும். அதற்கான சிகிச்சை சிலவற்றை காணலாம்.

கீழ்க்காய்நெல்லி இலையை போதுமான அளவு அரைத்து உடலில் தேய்த்து குளிக்க அரிப்பு நீங்கும். நீரடிமுத்து, கசகசா, பிரமதண்டு விதை, கொப்பறா தேங்காய், காட்டுச்சீரகம், கருஞ்சீரகம், கார்போகரிசி இவற்றை சம அளவு எடுத்து காடி நீர் விட்டு அரைத்து உடம்பெங்கும் பூசி 3 மணிநேரம் ஊறிய பின் குளிக்க எல்லாவகை அரிப்பும் தீரும்.

சாதாரன உப்பைத் தூள் செய்து மேனியெங்கும் நீர்கலந்து பூசி சிறிய நேரம் கழித்து குளிக்க அரிப்பு நீங்கும். அதே சமயம் மணத்தக்காளி கீரையை சமைத்து சாப்பிட்டு வர விரைவில் குணமாகும்.

நீண்ட முற்றிய புடலங்காயை வாங்கி அதை 15cm அளவுள்ள துண்டுகளாக வெட்டவும். உள்ளே இருக்கும் விதைகளை மட்டும் நீக்கி விடவும். மூங்கில் குழல் போல் உள்ள இதில் சீகைக்காயை நன்கு அரைத்து நிரப்பவும். இரண்டு பக்க வாயையும் களிமண் கொண்டு அடைத்து வெயிலில் காயவைக்கவும். காலை முதல் மாலை வரை காய்ந்த பின் இரு பக்கமும் உள்ள களிமண்ணை நீக்கி விட்டு புடலங்காயையும் சீகைக்காயையும் சேர்த்து அரைத்து பூசி 1/2 மணி நேரம் கழித்து இளம் வெந்நீரில் குளிக்க அரிப்பு குணமாகும்.

**வியர்வை நாற்றம் நீங்க**

அகத்தோலில் எண்ணற்ற வியர்வைச் சுரப்பிகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளது. அவ்வியர்வைச் சுரப்பிகளின் நாளங்கள் புறத்தோலில் வந்து முடிவடைகிறது. கோடை காலத்திலும் கடின உழைப்பாலும் உடற்பயிற்சி செய்வதாலும் வெயிலில் அலைந்து திரிவதாலும் உடல் உஷ்ணமடைகிறது. அப்போது தோலுக்கு அருகிலுள்ள இரத்த நாளங்கள் விரிவடைகின்றன.

இரத்தத்திலிருந்து கடன் வாங்கப்பட்ட நீர்மத்தால் வியர்வை சுரப்பிகள் தூண்டப்பட்டு வியர்வையை சேகரித்து வெளிப்படுத்துகிறது. வெளியேறிய வியர்வை தோலின் உஷ்ணத்தால் ஆவியாகி உடலின் வெப்பம் சமநிலைப்படுத்தப்படுகிறது.

வெளிவரும் வியர்வை சில தாது உப்புக்களுடனும் மேல்தோலில் படிந்திருக்கும் பக்றீரியாவுடன் கலந்து அணிந்திருக்கும் ஆடைகளை நனைத்து, ஊறி, ஒருவித கெட்ட வாடையை சிலருக்கு உண்டாக்கி விடுகிறது. அக்குள், தொடையிடுக்கு இப்பகுதிகளிலிருந்து தான் அருவருப்பான வியர்வை நாற்றம் ஏற்படுகிறது. அதற்கான தீர்வுக்களாக பின் வருவனவற்றை செய்யலாம்.

ஆவாரம் பூவை உலர்த்தி சமஅளவு பயிற்றம்மா கலந்து அரைத்து தினமும் தேய்த்து குளித்து வர வியர்வை நாற்றம் அகலும்.

கண்டங்கத்திரி இலைச்சாற்றுடன் சம அளவு நல்லெண்ணெய் கூட்டிக் கலந்து காய்ச்சி சாறு வற்றியதும் வடிகட்டி அக்குள், தொடை இடுக்குகளில் இரவில் பூசி காலையில் குளிக்க நாற்றம் அகலும்.

சந்தனக்கட்டையை சுத்தமான பன்னீர் விட்டு அரைத்து அந்த விழுதை பூசி ஊறவைத்து இளம் வெந்நீரில் குளிக்க வியர்வை நாற்றம் நீங்கும்.


தேவையான அளவு பயிற்றம் மாவையும் ஊற வைத்த வெந்தயத்தையும் கலந்து அரைக்கவும். அத்தோடு கொஞ்சம் வேப்பங் கொழுந்து, துளசி, திருநீற்று பச்சை இவற்றை சேர்த்து அரைத்து உடலில் பூசி குளிக்க நாற்றம் அகலும்.

மருதோன்றி இலை - 100g, மருதோன்றி பூ - 100g, கஸ்தூரி மஞ்சள் - 40g, தூளாக்கி வெந் நீரில் குழம்பு போல் கரைத்து உடலில் பூசி குளிக்க நாற்றம் அகலும். உலர்ந்த ரோஜா மொட்டு, மகிழம்பூ, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், பூலாங்கிழங்கு, நந்தனக் கட்டை இவற்றை சம அளவு எடுத்து தூள் செய்து உடலில் பூசி 15 நிமிடம் ஊறவைத்து குளிக்க நாற்றம் அகலும்.

(முற்றும்)

# சஹ்ரானுடன் முஸ்லிம் காங்கிரஸ் ஒப்பந்தம் செய்து கொண்டதா?

## மகிந்த அணி விடாப்பிடி



(கொழும்பு)

தற்கொலைக் குண்டுதாரி சஹ்ரானுடன் முஸ்லிம் காங்கிரஸ் ஒப்பந்தம் செய்து கொண்டதாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் குறிப்பிட்ட போது தெரிவுக் குழுவின் உறுப்பினர்கள் எவரும் கேள்வியெழுப்பவில்லை.

எனவே இவ்விடயம் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெளிவுபடுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் ஒருதலைப் பட்சமானது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

தெரிவுக் குழுவில் சாட்சியமளிப்பவர்களிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மையப்படுத்தியே கேள்விகள் கேட்கப்படுகின்றன.

அரசாங்கத்திற்கு எதிராகக் குறிப்பிடப்படுகின்ற குற்றச்சாட்டுக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி அவை விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

கடந்த பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் சாட்சியமளித்த முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா பல விடயங்களைக் குறிப்பிட்டார்.

மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதலை நடத்திய தற்கொலைக் குண்டுதாரிகளில் முக்கிய சூத்திரதாரியான பயங்கரவாதி சஹ்ரானுடன் முஸ்லிம் காங்கிரஸ் ஒப்பந்தம் செய்து கொண்டது என்று குறிப்பிட்டார்.

ஆகவே பயங்கரவாதி சஹ்ரானுடன் முஸ்லிம் காங்கிரஸ் என்ன ஒப்பந்தம் செய்து கொண்டது என்பதை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கத்திறன் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆன்மீகம் மற்றும் பண்பாட்டு அடிப்படையிலான ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்யும் நோக்கோடு ஆக்கத்திறன் நிகழ்வுகள் ஐந்தாவது வருடமாக நடத்தப்படவுள்ளன.

மதிப்பெண்களை விட மனிதப் பண்புகளே முக்கியமானது என்னும் நோக்கில், மனிதனைப் புத்திசாலியாக்கும் உலகக் கல்வியோடு அவனைப் பூரணத்துவம் உள்ளவனாக்கும் அறநெறிக் கல்விக்கும் முக்கியத்துவம் வழங்கி இளம் இந்துச் சிறார்களின் இதயங்களில் உள்ள தெய்வீகத் தாமரையை மலரச் செய்து அவர்களின் ஆளுமையையும் திறமைகளையும் மலர்ந்து விரிவடைய வைக்கும் கல்வியை வழங்கி, சிறந்த குறிக்கோளையும் இலட்சியத்தையும் அடைய வகைசெய்வதாய் உள்ளவையே அறநெறிப் பாடசாலைகள்.

அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் இளஞ்சிறார்களுக்கு இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த ஆளுமைத் தன்மையை முழுமையாக வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு அவர்களுக்குள் கண்காணாது அரும்பாகிக் கிடக்கும் ஆக்கத்திறன்களை மலரச்செய்யும் வகையில் வருடந்தோறும் முன்னெடுக்கப்படும் தேசிய ஆக்கத்திறன் விருதுக்கான, ஆக்கத்திறன் வெளிக்கொணர்வு நிகழ்வுப் போட்டிகள் ஐந்தாவது வருடமாக வெகு சிறப்பாகப் புதிய தனி ஆளுமை, ஒருங்கிணைந்த ஆளுமை வெளிக்கொணர்வுப் போட்டிகளையும் உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்படவுள்ளன.

அறநெறிப் பாடசாலை ரீதியிலான பிரதேச ரீதியிலான மாவட்ட ரீதியிலான, தேசிய ரீதியிலான வகையில் இப்போட்டி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வருடத்திற்கான ஆக்கத்திறன் ஆளுமை வெளிக்கொணர்வுப் போட்டி நிகழ்வுகளாக எழுத்தாற்றல், பேச்சாற்றல் கதாப்பிரசங்கம், சித்திரம் மற்றும் நீதி நூல் ஒப்புவித்தல் (நீதி நூல் மனனம்) முதலான தனி ஆளுமையை வெளிக்கொணரும் போட்டிகளும் ஒருங்கிணைந்த ஆளுமைகளை வெளிப்படுத்தும் குழுநிலை ஆக்கத்திறன் வெளிக்கொணர்வு நிகழ்வுகளாக வில்லுப்பாட்டு, பண்ணிசை, பரத நாட்டியம், நாடகம் மற்றும் சொல்லாடற் திறன் (கருத்தாடற் திறன்) முதலான போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

மாவட்ட நிலையில் முதலிடம் பெற்றவர்கள், தேசிய மட்ட ஆக்கத்திறன் போட்டிக்குத் தெரிவாகி தேசிய ரீதியில் நடத்தப்படும் போட்டியில் மிகச்சிறந்த ஆக்கத்திறன் ஆளுமையை வெளிக்காட்டும் அறநெறிப் பாடசாலை மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் "தேசிய ஆக்கத்திறன் விருதுகள்", பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பெறுமதியான பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

மேலும் தேசிய ரீதியிலான போட்டிக்கு முகங்கொடுத்து அறுபது வீதத்திற்கும் மேலான புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கும் அவர்களது எதிர்கால நலன்களைக் கருத்திற்கொண்டு தேசிய தரச் சான்றிதழ் வழங்கிப் பாராட்டி ஊக்கப்படுத்துவதும் கடந்த வருடம்தொடக்கம் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

"தேசிய ஆக்கத்திறன் விருது-2019" இற்கான விண்ணப்பப் படிவங்கள் அனைத்து அறநெறிப் பாடசாலைகளிற்கும் அனுப்பப்பட்டுள்ளதுடன் மேலதிக விபரங்களை www.hindudept.gov.lk எனும் திணைக்கள இணையத் தளத்திலும் நேரடியாகத் திணைக்களத் திலும் மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமும் பெற் றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்கள் அறநெறிப் பாடசாலைகளால் 31.07.2019 ஆம் திகதிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாகக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மொஹமட் பவாஸின் விளக்க மறியல் நீடிப்பு

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் மொஹமட் பவாஸ்ஸிற்கு தொடர்ந்தும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணை கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவரை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் கடந்த ஏப்ரல் மாத இறுதியில் வாழைத்தோட்டம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் ஸ்டிக்கர்கள், ஒளிப்படங்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான காணொளிகள் தொலைபேசியில் வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து அவரை தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்ததுடன், பின்னர் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# குறை'களை' பதிகம் 45

## தவில் நாதஸ்வரத்தில் பட்டப்படிப்புத் தேவை

மேளம் நாதஸ்வரம்
மிகு சல்லாரி சுருதி
ஒன்றாய்க்கூடி முழங்க
ஊர் திரண்டு கூடிய கூட்டம்
தாமும் தாளம் போட்டு
இரசித்தகாலம் அப்போ

இப்போ,
காரைநகர் தனவந்தர் மட்டுமே
ஏறுபடி மேளம்பிடித்து
பொன்னாடை போர்த்தி
பல இலட்சம் ரூபாய்களை
பொட்டலம் கட்டிக் கொடுக்கலாமென்றாயிற்று

ஆலடி வைரவர்
அரசடிப் பிள்ளையார்
வயல்வெளி முருகன்
இவர்க்கெல்லாம்
ஐம்பது ரூபாய் இறுவெட்டில்
மன்னார்க்குடியின்
தவில் நாதமே தஞ்சமாம்
என்ன செய்வது
ஒரு வருடத்து ஊதியத்தை
ஒரு நாளுக்குக் கேட்டால்
தவில் எதற்கு தக்க நாதஸ்வரம் எதற்கு

விலைபட்டுப் போகும் கலைகளில்
அடுத்த இடம் தவில் நாதஸ்வரத்துக்கே
தடுப்பது தேவையென்றால்
தவில் நாதஸ்வரத்தில் பட்டப்படிப்பு
யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையில்
தொடக்கி வைத்தல் வேண்டுமாம்

பள்ளி மேசைகளில் தாளம் தட்டிய படிப்பும்
பூவரசம் இலையில் செய்து
நாதஸ்வரக்குழல் ஊதிய பட்டறிவும்
இயல்பாய் எங்கள் பிள்ளைகளிடம்
ஆதலால்
தவில் நாதஸ்வர இசையில் பட்டப்படிப்பு
பலரும் கற்க வழிதரும்
குறைந்த கட்டணத்தில்
எங்கும் மங்கள வாத்தியம் முழங்க
இசையில் மயங்கிய இறைவன்
எங்களோடு இருப்பான் என்றும்

கூத்தனார்

அன்பு வாசகர்களே!

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# கிரியெல்லவின் அலுவலக அதிகாரிகளுக்கு பிணை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிரான 600 கடிதங்களுடன் கைதான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவின் அலுவலக அதிகாரிகள் மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரையும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பெயரைக் குறிப்பிட்டு இன முறுகலை ஏற்படுத்தக் கூடிய சொற்கள் அடங்கிய 600 கடிதங்களுடன் மூவர் கொழும்பு மத்திய அஞ்சல் நிலையத்தில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவின் அலுவலக பணியாளர்கள் என தெரிவிக்கப்பட்டதோடு, அதனை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவும் ஒப்புக் கொண்டார்.

எனினும் இச்சம்பவம் தொடர்பாக தான் எதனையும் அறிந்திருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# கிளிநொச்சியில் இடம்பெற்ற சமுர்த்தி வழங்கும் ஆடம்பர நிகழ்வுக்கு பயனாளிகளிடமிருந்து 500 ரூபாய் அறவீடு

(பரந்தன்)

புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள சமுர்த்தி பயனாளிகளிடம் இருந்து தலா ஐநூறு ரூபா அறவிட்டு அத் தொகைக்குரிய காசோலையினை மாவட்டச் சமுர்த்தி பொது வைப்புக் கணக்கில் வரவு வைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சியில் அனைத்து சமுர்த்தி வங்கி முகாமையாளர்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தினை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் திருமதி ஆ.தவபாலன் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளரின் சுற்றுநிருபத்திற்கு அமைய இந் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும், புதிய சமுர்த்தி பயனாளிகளின் உரித்து பத்திரம் இடும் உறைகள், மேடை தயாரித்தல் அலங்கரித்தல், கதிரைகள் மற்றும் ஏனைய உபரணங்கள், உபசரிப்புக்கள், நான்கு நடன குழுவிற்கான செலவுகள், புதிதாக சிந்திப்போம் ஊக்கத்தில் எழுவோம் எனும் தலைப்பிலான பிரசாரம் செய்தல், ரீ சேட்கள் போன்ற செலவுகளுக்கே இந்த நிதியை அறவிடுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய சமுர்த்தி பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் இன்னமும் கிடைக்கப்பெறாத நிலையில் ஏற்கனவே வங்கியில் உள்ள நிதியிலிருந்து மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு வங்கிகளும் தலா ஐநூறு ரூபா வீதம் எடுக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், புதிய சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவு கிடைக்கின்ற போது அச் சந்தர்ப்பத்தில் அறவிடப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 13078 புதிய சமுர்த்தி பயனாளிகளும் 65,39000 ரூபா பணம் சமுர்த்தி வங்கிகளிடமிருந்து மாவட்ட சமுர்த்தி பொது வைப்புக் கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (9-312)




# வெடிபொருட்களை விரைவில் அகற்றி மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தவும்

## முகமாலை பகுதி மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி முகமாலைப் பிரதேசத்தில் வெடிபொருள் அகற்றும் பணிகளை துரிதப்படுத்தி தமது காணிகளில் மீள்குடியேற அனுமதிக்குமாறு முகமாலைப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி போன்ற பகுதிகளில் வெடிபொருள் அகற்றுவதில் ஏற்படுகின்ற தாமதங்களால் இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடந்த 19 வருடங்களாக வெளிமாவட்டங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வாழ்ந்து வரும் தங்களை சொந்த நிலத்தில் குடியேற்றுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதாவது, முகமாலை அம்பளாவளை, இத்தாவில் மேற்கு, வேம்பொடுகேணி, இந்திராபுரம் ஆகிய பிரதேசங்கள் பகுதியளவில் வெடிபொருள் ஆபத்தான பகுதிகளாக காணப்படுகின்றன.

இதேவேளை கடந்த மாதம் 25ஆம் திகதி இந்தப் பிரதேசங்களில் வெடிபொருள் அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்ட ஒருபகுதியில் 49 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-315)

# முள்ளிவாய்க்கால் கடற்பரப்பில் அதிகரித்துள்ள சட்டவிரோத மீன்பிடி தொழில்களால் அப்பகுதி மீனவர்கள் உயிரை மாய்க்கும் நிலை



(கண்டாவளை)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மீன்பிடி தொழில்களால் தமது தொழில்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக இப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளில் உள்ள கடற்றொழிலை நம்பி சுமார் 4500 க்குமேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் வகையில் பல்வேறு வகையான சட்டவிரோத தொழில்களும் நிபந்தனை மீறிய தொழில்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் கடற்றொழிலை நம்பிய மீனவக்குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

அதாவது, முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் வளர்மதி கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச்சங்கத்தின் கீழ் சுமார் 175 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் உள்ளனர் எனத் தெரிவித்த கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் வே. திசைவீரசிங்கம் தற்போதைய வரட்சி காரணமாக நந்திக்கடல் நீர்மட்டம் குறைவடைந்து சிறுகடற்றொழிலாளர்களின் தொழில்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஆழ்கடல்பகுதிகளில் சுருக்கு வலை பயன்படுத்துதல், வெளிச்சம் பாய்ச்சுதல் நிபந்தனைகளை மீறிய வகையில் இரவுகளில் கரைவலை இழுத்தல் போன்ற தொழில்கள் அதிகளவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனால் கடற்றொழில் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையாலும் யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்ட மீனவ சங்கத்தின் பிரச்சினைகள் தொடர்பில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் பாராமுகமாகவே இருந்து வருகின்றனர்.

இதனால் தொழில் வாய்ப்பு முழுமையாக இழக்கப்பட்ட நிலையில் மீனவர்கள் தற்கொலைக்கு செல்லும் நிலை காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-315)

# மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற கள்ளப்பாடு உதயம் இளைஞர் கழக நெய்தல் இயற்கை உரம்




தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொணரும் முகமாக மேற்கொண்டு வருகின்ற youth with talent வேலைத் திட்டத்தின் கீழ் கிராம அபிவிருத்தி வேலைத் திட்டங்களை வருடா வருடம் மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் கடந்த வருடம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 21 திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் 6 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் இந்த திட்டங்களில் மாவட்ட ரீதியிலான வெற்றி பெற்ற திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. இருபத்தொரு திட்டங்களிலும் இளைஞர்களின் பூரண பங்களிப்போடு மக்களுக்கும் இளைஞர்களுக்கும் பலனளிக்கக் கூடிய மிகச் சிறந்த திட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு தெற்கு கிராமத்தில் இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட நெய்தல் இயற்கை உர தயாரிப்புத் திட்டம் வெற்றி பெற்றது.

அதன் அடிப்படையில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற குறித்த திட்டத்தை தேசிய ரீதியில் தெரிவு செய்யும் நோக்கில் நேற்று முன்தினம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமை காரியாலயத்தில் இருந்து அதிகாரிகள் குழு ஒன்று கள்ளப்பாடு கிராம திட்டத்தை பார்வையிடுவதற்காக வருகை தந்திருந்தனர்.

இந்த குழுவில் இளைஞர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அபிவிருத்தி பிரிவு பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினுடைய விஷேட கருத்திட்டங்கள் பிரிவின் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண பணிப்பாளர் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

கரைதுறைப்பற்று பிரதேச இளைஞர் சேவை அதிகாரி இ. ரதீசனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி பணிப்பாளர் முல்லைத்தீவு மாவ ட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி, கரைதுறைப்பற்று பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், கிராம அலு வலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு இந்த திட்டத்தின் செயற் பாடுகள் தொடர்பாக விரிவாக விளக்கமளித்தனர். (9-281)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் தரம் 6 மாணவர்களுக்கான தொழில்நுட்ப பாடத்திட்டத்திற்கமைவாக செய்முறைச் செயற்பாட்டிற்கான மாதிரிச்சந்தை கடந்த திங்கட்கிழமை பாட ஆசிரியர் திருமதி பா.ரஜிதா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு சந்தையை பார்வையிட்டனர்.

# இரணைமடு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்பயிர்கள் அழிவடையும் அபாயம்

## விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக செய்கைக்கான உரிய நீர் விநியோகம் இன்றி பெருமளவான நெற் பயிர்கள் அழிவடையும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளமான இரணை மடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு 16100 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச்செய்கை மேற் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்கான பயிர்ச் செய்கைக்கூட்டம் கடந்த மார்ச் மாதம் 12 ஆம் திகதி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்று சிறு போக செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிறு போக கூட்டத்தீர்மானத்திற்கு மாறாக அத்துமீறிய விதைப்புக்களும் மேல திக விதைப்புக்களும் அதிகளவில் மேற் கொள்ளப்பட்டிருப்பதனால் உரிய முறை யில் பயிர்ச்செய்கை மேற்கொண்ட அதிக ளவான விவசாயிகள் பாதிக்கப்படும் அபாய நிலை காணப்படுகின்றது.

அதாவது குளத்தின் நீர்மட்டம் மிக வேகமாக குறைவடைந்து வரும் நிலை யில் பயிர்ச் செய்கைக்கான நீர் விநியோக



த்தினை சம்பந்தப்பட்ட கமக்கார அமைப் புக்கள் சீராக நீர் முகாமைத்துவத்தை பின்பற்றாத நிலையில் விவசாயிகளுக்கான நீர் விநியோகம் இன்றி பெருமளவான நெற்பயிர்கள் அழிவடையும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. (9-315)

# காயமடைந்த யானை சிகிச்சையின் பின்னர் காட்டுக்குள் அனுப்பிவைப்பு

வவுனியா பாலமோட்டைப்பகுதியில் கடந்த ஐந்து தினங்களாக காலில் காயமடைந்த நிலையில் நின்ற யானை நேற்று சிகிச்சை யின் பின்னர் காட்டிற்குள் அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

வவுனியா பாலமோட்டை குளத்திற்கு அருகே கடந்த ஐந்து தினங்களாக நடக்க முடியா மலிருந்த காட்டு யானை ஒன்றை அவதானித்த அப்பகுதி கிராம மக்கள் கடந்த சனிக்கிழமை ஓமந்தை பொலிஸாருக்கு தகவல் வழங்கி யிருந்தனர். இந் நிலையில் அங்கு சென்ற பொலிஸார் வனஜீவராசிகள் திணைக்களத் தின் உத்தியோகத்தர்களின் உதவியுடன் யானையை பரிசோதித்தனர் இதையடுத்து நேற்றுக்காலை வடபிராந்திய வனஜீவராசிகள் திணை க்களத்தின் கால் நடை வைத்திய அதிகாரி அப்பகுதிக்குச் சென்று யானைக்கு சிகிச்சையளித்ததுடன் பாதுகாப்பாக காட்டுப் பகுதிக்குள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (9)

# வவுனியாவிலுள்ள 80 பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் அமைப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் 80 பாட சாலைகளில் சிறுவர் பாதுகாப்பு குழுக்கள் செயற்பட்டு வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வவுனியா மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் செ. நந்தசீலன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் சிறுவர் பாது காப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு வரு கின்றன. சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டு வரும் இப் பாதுகாப்பு குழுக்கள் பாடசாலை மட்டத்தில் தற்போது ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

வவுனியா மாவட்டத்தில் 80 பாடசா லைகளில் அது செயற்பட்டு வரும் நிலையில் மாணவர்களுடன் ஆசிரி யர்கள், பெற்றோரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

மாணவர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ள சிறுவர் பாதுகாப்பு குழுக் களூடாக பல்வேறு நன்மைகள் தற்போது இடம்பெற்று வரும் நிலையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான முறை ப்பாடுகளும் கிடைக்கப்பெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (9)

# வீட்டுத்திட்டம் கோரி ஆர்ப்பாட்டம்

வவுனியா நகர் இலுப்பைக் குளத்தைச் சேர்ந்த மக்கள் தமக்கு வீட்டுத் திட்டம் வழங்கக் கோரி வவுனியா தேசிய வீடமைப்பு அதிகார சபை அலுவலக முன்றலில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,நாகர் இலுப்பைக்குளம் கிராமத்தில் வாழும் சுமார் 34 குடும்பங்களுக்கு நீண்ட காலமாக வீடுகள் வழங்கப்படாமல் உள்ளது. இது தொடர்பில் நாம் பல தடவைகள் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கும் தெரிவித்துள்ளோம். ஆனால் எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை எனத் தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வவுனியா மாவட்ட முகாமையாளர் திருமதி வி.எம்.வி. குரூஸிடம் கேட்டபோது, மாதிரி வீட்டுத்திட்டத்தில் ஆகக்குறைந்தது 15 வீடுகளாவது அமைந்திருக்க வேண்டும். அதன் அடி ப்படையில் மாதிரி வீடமைப்புத் திட்டத்திற்கு மிக அண்மையில் உள்ள இடங்களுக்கு அனு மதி வழங்கப்பட்ட போதினும் பரவலாக உள்ள வீடுகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

எனவே வவுனியா மாவட்டத்தில் 142 மாதிரி வீடமைப்பு கிராமங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு வீட்டுத்திட்டம் செயற் படுத்தப்பட்டு வருகின்றது. பயனாளிகள் விபரம் பிரதேச செயலகத்தினாலேயே தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது. நாகர் இலுப்பைக்குளத்தை சேர்ந்தவர்களுக்கும் இயலுமானவரை வீட்டுத் திட்டத்தை வழங்க முயற்சிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (9)

### இந்திய மாதிரி வீட்டுத்திட்டத்தில்

# சேதமடைந்த வீடுகளுக்கு பதிலாக புதிய வீடுகள்

## துணுக்காயில் 28 பயனாளிகள் தெரிவு



(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் உயிலங்குளம் பகுதியில் உள்ள இந்திய மாதிரி வீட்டுத்திட்டத்தில் சேதமடைந்த வீடுகளுக்கு பதி லாக புதிய வீடுகள் வழங்கப்பட் டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட உயிலங் குளம் பகுதியில் கடந்த 2012 ஆம் ஆண்டு இந்திய அரசின் நிதியுத வியுடன் அமைக்கப்பட்ட 50 வீட் டுத்திட்டத்தில் உள்ள வீடுகள் உரிய முறையில் அமை க்கப் படாத நிலையில் வீடுகள் குறிப் பிட்ட காலத்திற்குள் சேத மடை ந்து மக்கள் குடியிருக்க முடியாத நிலையில் காணப்படுகின்றன.


அதாவது மீள்குடியேற்றத்தின் பின்னர் பிரதேசத்தில் காணிகள் இன்றிக் காணப்பட்ட பெண் தலை மைத்துவக்குடும்பங்கள், மாற் றுத்திறனாளிகளை கொண்ட குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு தலா 10 இலட்சம் ரூபா செலவில் நிர்மானிக்கப்பட்ட குறித்த வீடு களில் குடியேற்றப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த வீடுகள் உரிய முறையில் அமைக்கப் படாமையினால் வீட்டின் சுவர் களில் வெடிப்புக்கள் ஏற்பட்டும் கூரைகள் சேதமடைந்தும் ஆபத் தான நிலையில் காணப்பட்டன.

இவ்வாறு சேதமடைந்த வீடு கள் தொடர்பில் பல்வேறு தரப் பினரும் கோரிக்கை விடுத் திருந்தனர். தற்போது குறித்த குடியிருப்பில் சேதமடைந்த வீடு களுக்கு பதிலாக புதிய வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் துணுக்காய் பிரதேச செயலரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது உயிலங் குளம் இந்திய மாதிரி வீட்டுத் திட்டம் தொடர்பில் மாவட்ட செயலகத்தில் இருந்து வருகை தந்த குழுவினரால் பார்வையிட்டு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டி ருந்தன.

தற்போது தேசிய வீடமைப்பு அதிகார சபையில் வீட்டுத் திட்டத் தில் இந்த பிரதேசத்தில் 28 பய னாளிகள் தெரிவு செய்யப்பட்டு சேதமடைந்த வீடுகளுக்கு பதி லாக புதிய வீடுகள் வழங்கப் பட் டுள்ளதாக அவர் மேலும் தெரி வித்தார். (9-315)



### இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமில்லை

# சிவமோகன் எம்.பி



இலங்கையில் இனப்பிரச்சி னைக்கான தீர்வு விடயம் இனி மேல் சாத்தியப்படப் போவதி ல்லை என வன்னி பாராளும ன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவ ரது அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள் என பரவலாக உங்களினுடைய கட்சி உறுப்பி னர்களே தெரிவித்திருக்கின்ற நிலைப்பாடு, அதனடிப்படையில் தமிழ் மக்களினுடைய உரி மையை அல்லது அரசியலைப் பெற்றுக்கொள்ள இது தான் சந்தர் ப்பமாக கருதப்படுகிறது என ஏனைய அரசியல்வாதிகளும் அதனை கூறியிருக்கிறார்கள். ஆகவே இந்த சந்தர்ப்பத்தை நீங்கள் நழுவவிட்டால் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் தமிழ் மக்களின் உரிமைகளையும் தீர்வையும் பெற்றுக் கொள்வதற்கு கிடைக் குமா.? என ஊடகவியலாளர் களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்படி தெரிவித்தார். மேலும் தெரிவிக் கையில்,

எமது கட்சியாக இருக்கட்டும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக இருக்கட்டும் நாங்கள் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருக்கின்றோம் என்பது நூறு வீதம் தவறான ஒரு கருத்து. இரண்டாவது நீங்கள் சொன்ன விடயம் இனப்பிரச்சி னைக்கான தீர்வு. இந்த தீர்வு விடயம் முடக்கப்பட்டுவிட்டது. இனிமேல் அது சாத்தியப்படப் போவதில்லை என்பது வெளிப் படையான ஒரு விடயமாகி விட்டது.

இது எப்படி முடக்கப்பட்டது என்றால் மெல்ல மெல்ல இன வாதிகளால் இது தள்ளி தள்ளி கொண்டு செல்லப்பட்டு இறுதி யாக இனவாதிகளுடன் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன ஒன்றுசேர்ந்து தமிழர்களின் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி யாக வந்து தமிழ் மக்களுக்கும் துரோகம் செய்து அந்த அரங்கை நிறைவேற்றி முடித்துவிட்டார்.

எனவே இங்கு அது அல்ல பிரச்சினை. நான் கூறுகிறேன் இந்த அரசுக்கு நாங்கள் ஆதர வானவர்களல்ல. ஆனால் எமது தமிழ் மக்களுக்கு அநியாயம் செய்தவர்கள் எதிரானவர்கள் இன்னும்இன்னும்எத்தனையோ அராஜகங்களை செய்ய துடிப்பவர் களை இங்கு அரசாங்கத்தை கொண்டு வரவிடாமல்தடுப்பதற்கான எமது நட வடிக்கையாகத் தான் இது இரு க்குமென மேலும் தெரிவித்தார்.(9)

# மன்.சாந்திபுரம் சௌத்பார் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(மன்னார்)

மன்னார் சாந்திபுரம் சௌத் பார் பிரதான வீதி பல வருடங் களாக புனரமைக்கப்படாது குன் றும் குழியுமாக இருப்பதால் போக்குவரத்து செய்வதில் பாரிய அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரி வித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் பிரதான புகையிரத நிலையத் திற்கு செல்லும் சௌத்பார் வீதியே மேற்படி குன்றும் குழி யுமாக பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றது.

குறித்த பாதையின் ஊடாக மழைநீர் கடலுடன் கலக்கின் றமையினால் சிறு பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இருப்பி னும் குறித்த வீதியானது முழு மையாக சீரமைக்கப்பட்ட வில்லை என மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும் கண் துடைப்புக்காக குழிகளை அடைக்கும் பணி களே வருடாவருடம் இடம் பெறு கின்றது எனவும் தெரிவித்தனர்.

எனவே மக்களின் நலன் கருதி குறித்த வீதியை முழு மையாக சீரமைத்து தருமாறு சாந்திபுரம் மற்றும் சௌத்பார் பகுதிகளை சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.(9-285)

பாரதம்

# அணு ஆயுதங்களை தயாரிப்பதில் சீனா - பாகிஸ்தான் மும்முரம்

## இந்தியா பின்னடைவு



(சென்னை)

சீனா- பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் அணு ஆயுதங்களை அதிகரித்து வருகின்ற நிலையில் இந்தியா கடந்த ஒரு வருட காலமாக அணு ஆயுதங்களை அதிகரிக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கவில்லையென தகவல் வெளியாகியுள்ளது.

சுவீடனைச் சேர்ந்த 'த ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம்' 2019ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை வெளியிட்டுள்ளது. அதிலேயே இவ்விடயம் கூறப்பட்டுள்ளது.

குறித்த ஆய்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, பாகிஸ்தானும் சீனாவும் அணு ஆயுதங்களை தயாரித்து வருகின்றமையால் இருநாடுகளிலும் அணு ஆயுத கையிருப்பு அதிகரித்துள்ளது.


2019ஆம் ஆண்டு தொடக்கத்தில் சீனா 280 அணு குண்டுகளை வைத்திருந்தது. தற்போது அதனை 290ஆக அதிகரித்துள்ளது. பாகிஸ்தானும் தனது அணு ஆயுத கையிருப்பை 140-150 என்ற எண்ணிக்கையில் இருந்து 150- 160 என்ற எண்ணிக்கைக்கு உயர்த்தியுள்ளது.

இதேபோன்று இஸ்ரேல் 80 யில் இருந்து 90க்கும், வட கொரியா 10- 20யில் இருந்து 20-30ஆகவும் அணு ஆயுதங்களை உயர்த்தியுள்ளன

ஆனால், இந்தியாவின் அணு ஆயுதங்கள் தயாரிக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளமையினால் 130-140 என்ற எண்ணிக்கையிலேயே இருக்கின்றன.

இதேவேளை எதிர்வரும் 10 ஆண்டுகளில் அணு ஆயுத இருப்பை அதிகரிக்கும் வகையில் அணுப்பிளவு பொருள் உற்பத்தி திறன்களை இந்தியாவும், பாகிஸ்தானும் விரிவுபடுத்தி வருவ தாக அணு ஆயுத குறைப்பு, ஆயுத கட்டுப்பாடு மற்றும் பரவல் அல்லாத திட்டத்தின் இயக்குனர் ஷானன் கெயில் தெரிவித்துள்ளார் என அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (7)

# தமிழகத்திலும் நிபா வைரஸ்!



(சென்னை)

தமிழகத்தில் நிபா வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகிய ஒருவர் இனங்காணப்பட்டதை தொடர்ந்து ஏனைய மக்களும் அச்சம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

கடலூரைச் சேர்ந்த இராமலிங்கம் என்பவருக்கே நிபா வைரஸ் அறிகுறி கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் கேரளாவில் பணிபுரிந்துவிட்டு கடலூர்க்கு திரும்பி வந்த நிலையில் நிபா வைரஸ் அறிகுறி இருப்பது கண்டறியப் பட்டது.

இந்நிலையில் அவருக்கு புதுச்சேரி ஜிப்மர் வைத்தியசாலையில் தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கேரளாவில் கடந்த வருடம் 17 பேர் உயிரிழந்தனர். பின்னர் குறித்த வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. ஆனாலும் இந்தாண்டு மீண்டும் கேரளாவில் நிபா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு பலர் உயிரிழந்துள்ளமைக் குறிப்பிடத்தக்கது. (7)

# கைதிகள் மோதல் 10பேர் உயிரிழப்பு

## 10 பேர் படுகாயம்

(அசுன்சியன்)

பராகுவே நாட்டின் சான் பெட்ரோ நகரத்தில் உள்ள சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையே ஏற்பட்ட திடீர் மோதல் சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பராகுவேவில் மத்திய பகுதியில் உள்ள சான் பெட்ரோ நகரில் சிறைச்சாலையொன்று உள்ளது. அங்கு நூற்றுக்கணக்கான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுமுன் தினம் மாலை கைதிகளில் இரு தரப்பினரிடையே திடீர் மோதல் ஏற்பட்டது. கூர்மையான ஆயுதங்களைக் கொண்டு கைதிகள் ஒருவரை ஒருவர் சரமாரியாக தாக்கிக்கொண்டதால், அங்கு பெரும் கலவரமாக மாறியது.

சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாக இந்த கலவரம் நீடித்தது. இதில் 5 கைதிகள் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டனர். மேலும் 5 பேர் தீவைத்து எரித்து கொல்லப்பட்டனர். இது தவிர மேலும் 10 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குகளுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

இதையடுத்து கலவர தடுப்பு பொலிஸார் வரவழைக்கப்பட்டு, நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இந்த சம்பவம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (7)

# நைஜீரியாவில் தற்கொ

## காற்பந்து ரசிகர்கள் 30

(நைரோபி)

**நைஜீரியாவில் போகோஹறாம் தீவிர வாதிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் காற்பந்து ரசிகர்கள் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.**

போகோஹறாம் தீவிரவாதிகளுக்கும் நைஜீரிய அரச படைகளுக்கும் இடையே நீண்ட நாட்களாக மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் நைஜீரியாவின் போர்னோ மாநிலத்தில் உள்ள 'கொண்

# கார்-மினிப

## 24 பேர் உ

(ஜோகன்னஸ்போர்க்)

தென்னாபிரிக்காவில் இடம் பெற்ற விபத்தில் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

மப்பாலே பிரதான வீதியில் கார் ஒன்றும், மினி பஸ் ஒன்றும் மோதிக்கொண்டதனாலேயே கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது காயமடைந்த சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று



# கூட்டுப்படைகள் வா

## 16 ஐ.எஸ்.பயங்கரவ

(பக்தாத்)

ஈராக் நாட்டின் நினேவே மாகாணத்தில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் நடத்திய வான்வழி தாக்குதலில் 16 ஐ.எஸ். பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

சிரியா மற்றும் ஈராக் நாடுகளின் பல முக்கிய நகரங்களை முன்னர் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்திவந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் அரசுப்படைகள் நடத்திய ஆவேசத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். பலர் உயிர் பயத்தில் பாலைவனப்பகுதிகளை நோக்கி ஓட்டம் பிடித்தனர்.

அவர்களில் சிலர் யூப்ரெட்டஸ் நதிக்கரையோரம் அமைந்துள்ள புறநகர் பகுதிகளில் பதுங்கியுள்ளனர். அங்கிருந்தவாறு அவ்வப்போது கொரில்லா போர்முறை பாணியில் அதிரடியாக பயங்கரவாத தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், ஈராக் நாட்டின் நினேவே மாகாணத்தில் உள்ள வாடி அல்-கிஸ்ஸாப் என்ற இடத்தில் சில பயங்கரவாதிகள் பூமிக்கு அடியில் சுரங்கம் அமைத்து பதுங்கி இருப்பதாக ஈராக் உளவுத்துறையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் அப்பகுதியில் நடத்திய வான்வழி தாக்குதலில் 16 ஐ.எஸ். பயங்கரவாதிகள்

# வெளிநாடு

## காலைத் தாக்குதல் 30 பேர் உயிரிழப்பு!

டுகா' பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை காற்பந்து ரசிகர்கள் சிலர் ஒன்று கூடி போட்டியை தொலைக் காட்சியில் பார்த்துக்கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு கூட்டத்திற்குள் 4 தற்கொலைப்படை தீவிரவாதிகள் புகுந் துள்ளனர். அவர்களில் 3 பேர் பெண் கள் என்றும் ஒருவர் ஆண் எனவும் கூறப்படுகிறது.

சிறிது நேரத்தில் அந்த தீவிரவா திகள் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர். இந்த தாக்குதலில் 30 பேர் உயிரிழந்ததுடன், மேலும் 40 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலுக்கு போகோ ஹராம் இயக்கம் பொறுப்பேற் றுள்ளது. இதில் ஒரு பெண்தீவிர வாதி கொண்டுவந்த வெடி குண்டு வெடிக்கவில்லை. இதனைய டுத்து அவரை பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண் டுள்ளனர். (7)

## பஸ் மோதல் உயிரிழப்பு




வருவதாக தெரிவிக்கப்படுகின் றது.

இந்த விபத்து காரணமாக குறித்த வீதி ஊடான போக்கு வரத்து சிறிது நேரம் பாதிக் கப்பட்டிருந்ததாகவும் தென்னா பிரிக்க ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

விபத்து குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடு த்து வருகின்றனர். (7)

## ...ான்வழித்தாக்குதல் ...வாதிகள் உயிரிழப்பு



கொல்லப்பட்டதாக ஈராக் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

## சீனாவில் பாரிய இரு நிலநடுக்கம் 11 பேர் பலி; 122 பேர் படுகாயம்

(பீஜிங்)

சீனாவில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளதோடு, பலர் காயமடைந்துள்ளனர்.

சீனாவின் சிசுவான் மாகா ணத்தில் அடுத்தடுத்து சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட் டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு முதல் நிலநடுக்கம் 5.9 ரிக்டர் அளவுகோலில் பதிவாகியது.

இந்நிலையில் இரண்டாவது நிலநடுக்கம் நேற்று காலை 5.2 ரிக்டர் ஆக பதிவாகியுள்ளது.

குறித்த நிலநடுக்கத்தில் கட் டடங்கள் உடைந்து விழுந்ததில்



இடிபாடுகளுக்குள் சிக்கி இது வரையில் 11 பேர் உயிரிழந் துள்ளதோடு, 122 பேர் படுகாயங் களுக்குள்ளாகி வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர். (7)

## ஹொங்கொங் போராட்டத்தில் ஓர் நெகிழ்ச்சியான சம்பவம்



(ஹொங்கொங்)

ஹொங்காங்கில் 20 இலட் சம் பேர் கலந்து கொண்ட போராட்டத்தில் நெகிழ்ச்சியான சம்பவம் ஒன்று அரங்கேறியுள் ளது.

சீனாவின் ஆதரவு பெற்ற ஹொங்கொங் ஜனாதிபதி கேரி லாம், இவர் குற்றம் சாட்டப் பட்டவர்களை சீனாவிற்கு நாடு கடத்தி விசாரிக்கும் மசோதா வுக்கு ஆதரவளித்திருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், அவரைப் பதவி விலகக் கோரி யும் தொடர்ந்து போராட்டம் நடந்து வருகிறது. இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று சுமார் 20 இலட்சம் பேர் ஒன்று கூடினர்.

போராட்டம் நடத்துவதற்கான மிகப்பெரிய பனர்களை உய ரத்தில் கட்டச் சென்றவர் கீழே விழுந்தார்.

காயமடைந்த அவரை அழை த்துச் செல்வதற்காக அம்புலன் ஸ்க்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அங்கு விரைந்த அம்புலன்ஸ், காயமடைந்தவரை ஏற்றிக் கொண்டு செல்லும் அந்த நொடிப் பொழுதில் கடல் அலை ஒதுங்கி மீண்டும் கூடுவது போல், 20 இலட்சம் பேரும் ஒதுங்கி அம்பு லன்சுக்கு வழி விட்டனர். இந்த நெகிழ்ச்சியான சம்பவம் அரங் கேறிய காணொலி சமூக வலைத் தளங்களில் வைரலாகி வருகி றது. (7)

## எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி மயங்கி விழுந்து மரணம்!

எகிப்தின் முன்னாள் ஜனா திபதியான மொஹமட் மோர்ஸி நேற்று முன்தினம் உயிரிழந் துள்ளார். 67வயதான மொஹ மட் மோர்ஸி மீது உளவு பார்த்த தாக, குற்றச்சாட்டுகள் முன்வைக் கப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் நடை பெற்ற நீதிமன்ற விசாரணையில் அவர் மயக்கமடைந்து உயிரிழந் தார்.

எகிப்தில் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது ஜனாதிபதியாக பதவியேற்ற அவர் ஒருவருடத்தின் பின்னர் அங்கு நடைபெற்ற வெகுஜன ஆர்ப்பாட் டங்களைத் தொடர்ந்து இராணு வத்தால் அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. (7)



## நியூசிலாந்து துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டவருக்கு சிறை

(வெலிங்டன்:)

நியூசிலாந்து துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தை சமூக வலைத் தளத் தில் பகிர்ந்த நபருக்கு நீதி மன்றம் 21 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச்சி லுள்ள இருவேறு மசூதிகளில் கட ந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதி துப்பாக்கி ஏந்திய நபர் கண் மூடித்தனமான தாக்குதல் நடத்தி னார். இந்த துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதலில் 51 பேர் உயிரிழந் தனர். பலர் காயமடைந்தனர். மேலும் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை அந்த நபர் சமூக வலைத்தளத்தில் நேரடியாக ஒளிபரப்பு செய்தார். இறுதியில், இந்த கொடூர தாக்குதலுக்கு கார ணமான பிரெண்டன் டாரன்ட் என் னும் 28 வயதான அவுஸ் திரேலி யர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு நியூசிலாந்து துப் பாக்கிச் சூட்டு தாக்குதலை சமூக வலைத்தளத்தில் அதிகம் பகிர் ந்ததாக கிறிஸ்ட்சர்ச் பகுதியை சேர் ந்த பிலிப் ஆர்ப்ஸ் என்ற தொழிலதிபர் கைது செய்யப் பட்டார்.

இத்தகைய இரக்கமற்ற செயலை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்து அதனை மிகவும் அருமையான காட்சி என வர்ணித்துள்ளார். இது மிகப்பெரிய குற்றம் ஆகை யால், குற்றம் சாட்டப்பட்ட பிலிப் ஆர்ப்ஸ்க்கு 21 மாதங்கள் சிறை தண்டனை விதிக்கிறேன் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (7)

## அடிப்படைவாத மத்ரஸாக்களுக்கு எப்போது தடை?

# மற்றுமொரு சஹ்ரான் தாக்குதல் நடத்தும் வரை பொறுமை காத்துக் கொண்டிருக்கின்றீர்களா?

## அதிகாரிகள் மீது பொதுபலசேனா பாய்ச்சல்

(கொழும்பு)

இஸ்லாமிய நாடான பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பர்வேஸ் முஷாரப் உள்ளிட்டோர் தமது நாடுகளில் தடை செய்த பாரம்பரியமற்ற அடிப்படைவாத மத்ரஸாக்களை இலங்கையில் எப்போது தடை செய்யப் போகின்றார்கள்? அவ்வாறு தடை செய்யாமல் மற்றுமொரு சஹ்ரான் நாட்டில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தும் வரை பொறுமை காத்துக்கொண்டிருக்கிறார்களா? என்று பொதுபல சேனா கேள்வி எழுப்பியது.

பொதுபல சேனா நேற்று முன்தினம் வெளியிட்ட விசேட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கேள்வியெழுப்பியது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தான் மக்தப் குர்-ஆனை போதிக்கும் அடிப்படைவாதக் கல்வியை மீண்டும் இன்றைய தினத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அமைப்பின் தலைவர் ரிஸ்வி முப்தி தீர்மானித்திருப்பதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

அத்தோடு மக்தப் மத்ராஸா பாடசாலைகளுக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள அராபிய ஆடையான கறுப்பு, வெள்ளை நீண்ட சட்டை அணிவதை மீண்டும் அறிவிக்கும் வரை தவிர்த்துவிட்டு, சாதாரண ஆடையணிந்து மக்தப் மத்ரஸா பாடசாலைக்கு வருமாறு கூறப்பட்டுள்ளமை, இரகசிய செயற்பாடுகள் ஆரம்பமாவதை உணர்த்துகிறது.

இந்நாட்டில் அராபிய கலாசாரத்தை நிலைநாட்டுவதற்கு முயற்சிப்பதுடன், பாரம்பரிய முஸ்லிம்களை சமூகத்திலிருந்து பிரித்து சமூகப் பிளவை ஏற்படுத்த முயற்சிக்கும் உலமா அமைப்பிடம், நாட்டிற்குள் தேவையற்ற சிக்கல்களைத் தோற்றுவிக்காமல் உடனடியாக மக்தப் மத்ரஸா பாடசாலை செயற்பாடுகளை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம்.

அத்தோடு உலமா அமைப்பின் தலைவர் தாம் உள்ளிட்ட பல முஸ்லிம்களும் கற்றுக் கொண்ட தாலிமூல் குர்-ஆன் பாடநெறியை மீண்டும் வலுப்படுத்தி, நாட்டிற்குள் வஹாபிஸ பரவுகைக்கு எதிரான நிலைப்பாட்டையே உலமா அமைப்பு கொண்டுள்ளது என்பதை நிரூபிக்க வேண்டும்.

பாரம்பரிய முஸ்லிம் பள்ளிவாசல்களில் எத்தகைய ஆடையை வேண்டுமானாலும் அணிந்து, இலவசமாகக் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த தாலிமூல் குர்-ஆன் கல்வி முறையை உலமா சபையின் தலைவர் தடைசெய்ததுடன், கட்டணம் அறவீடு செய்து, அடிப்படைவாதத்தைப் போதிக்கும் மக்தப் குர்-ஆன் மத்ரஸா பாடசாலைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாடளாவிய ரீதியில் ஆயிரத்திற்கும் அதிகமான மக்தப் மத்ரஸா பாடசாலைகள் இயங்கி வருவதுடன், அப்பாடசாலைகள் ஒரு மாணவனிடமிருந்து 1000 ரூபாவை அண்மித்த தொகையை அனுமதிக் கட்டணமாக அறவிடுகின்றது.

அதுமாத்திரமன்றி ஒவ்வொரு மாணவனிடமும் மாதாந்தம் 500 ரூபா வீதம் அறவிடப்படுகின்றது. இதன் மூலமாக உலமா அமைப்பிற்கு மாதாந்தம் மில்லியன் கணக்கான நிதி வருமானமாகப் பெறப்படுவதுடன், அந்நிதி எதற்காக உபயோகப்படுத்தப்படுகிறது என்ற பாரிய சந்தேகம் சமுதாயத்தின் மத்தியில் எழுந்துள்ளது.

ஒரு இஸ்லாமிய நாடான பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பர்வேஸ் முஷாரப் உள்ளிட்டோர் தமது நாடுகளில் தடை செய்த பாரம்பரியமற்ற அடிப்படைவாத மத்ரஸாக்களை இலங்கையில் எப்போது தடை செய்யப் போகின்றீர்கள் என்று உரிய அதிகாரிகளிடம் கேள்வி எழுப்ப விரும்புகின்றோம்.

அவ்வாறு தடை செய்யாமல் மற்றுமொரு சஹ்ரான் நாட்டில் தற்கொலைக் குண்டுத்தாக்குதலைநடத்தும்வரைபொறுமை காத்துக் கொண்டிருக்கிறீர்களா? என்றும் அவர்களிடம் கேட்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மக்களின் கருத்திற்கு மதிப்பளித்து அரசு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துமா?

## பொதுஜன பெரமுன கேள்வி

(கொழும்பு)

பொதுத்தேர்தலுக்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்த அரசாங்கம் முயற்சிப்பது பயனற்றது. எவ்வாறு இருப்பினும் பெரும்பாலான மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக கடுமையான அதிருப்தியையே வெளிப்படுத்துவார்கள்.

இதன்போது அரசாங்கம் மக்களின் கருத்திற்கு மதிப்பளித்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துமா? என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கேள்வியெழுப்பினார்.

பொதுஜனபெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் இடம் பெறுவதற்கு முன்னர் பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதாக அரசாங்கம் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் கருத்துக்களை குறிப்பிட்டுள்ளது.



பொதுத்தேர்தலை நடத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப்பை கோருவதற்கு எவ்வித அவசியமும் கிடையாது.

அரசாங்கம் குறிப்பிடுவதை போன்று சர்வஜன வாக்கெடுப்பை கோரினால் பெரும்பாலான மக்கள் அரசாங்கத்திற்கு எதிராகவே தமது தீர்மானங்களை முன்வைப்பார்கள்.

இத் தீர்மானங்களை கொண்டு எவ்வித சட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது. 19ஆவது அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடிய தினத்தில் இருந்து நான்கரை வருடம் பதவி வகிக்க வேண்டும்.

இடைக்காலத்தில் பாராளுமன்றத்தை கலைக்க வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினை பெற வேண்டும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு தற்போதைய நிலையில் கிடைக்கப் பெறும் என்பது சாத்தியமற்றது. இந்த ஒரு வழியின் ஊடாகவே பாராளுமன்றத்தை கலைக்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பாட்டும் பரிசும்

அந்தக் காலத்தில் மன்னர்களுக்கெல்லாம் மிகவும் தாராளமான மனசு சேர்! என்றார் ஒருவர். எப்படி சேர் சொல்றீங்க? என்று கேட்டேன். ''சும்மா ஒரு பாட்டு எழுதிக் கொண்டு போய் படித்துக் காட்டினால் கூட பொன்னும் பொருளுமாக வாரி குடுத்திருக்காங்க... பட்டம் கொடுக்கின்றார்கள்... சேர்!'' என்றார். இப்பவும் கூட கவிதை எழுதுபவர்க்கு பொற்கிழி வழங்குகின்றார்கள்... பட்டம் கொடுக்கிறாங்க.. எல்லாம் செய்யிறாங்களே!...'' என்றேன்.

எல்லாம் செய்கின்றார்கள் சரி! ஆனா எனக்கு யாரும் செய்ய மாட்டேன் என்கிறார்கள்! அப்படி என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டார் அவர். கவலைப்படாதீர்கள்! உங்களுக்கும் ஒரு காலம் வரும்! என்று அவருக்கு ஆறுதல் சொன்னேன்.

அவரை உட்கார வைத்து எனக்குத் தெரிந்த பழைய கதை ஒன்றை சொன்னேன். அந்தக் காலத்தில் ஒரு ராஜா இருந்தார். அரசு கட்டிலில் உட்கார்ந்திருந்தார். அந்த சமயத்துல ஒரு கவிஞர் அவரைத் தேடி வந்தார். மன்னரைப் புகழ்ந்து பாட ஆரம்பித்தார்.

ஒரே ஒரு பாட்டுத்தான் பாடினார். அதைக் கேட்ட உடனே அந்த ராஜா எழுந்து தெற்கு முகமாக திரும்பி உட்கார்ந்திருந்தார்.

அதைப் பார்த்தவுடன் பாட்டுப்பாடிய கவிஞருக்கு கொஞ்சம் வருத்தமா போச்சி!என்ன இது.. பாட்டைக் கேட்டவுடன் கிழக்கு முகமா உட்கார்ந்திருந்த ராஜா முகத்தைத் திருப்பிக்கொண்டு தெற்கே பார்த்து உட்காந்துகிட்டாரே! என்று நினைத்தார். இருந்தாலும் அந்த கவிஞர் விடலே! இவரும் சுத்திக்கிட்டுப் போயி மறுபடியும் அவர் முன்னாடி நின்னார்!

அங்கே போயி நின்னு இன்னொரு பாட்டை பாடினார். ராஜா பார்த்தார். பேசாமல் மறுபடியும் எழுந்திருச்சு மேற்குப் புறமா திரும்பி உட்கார்ந்திட்டார். இந்தப் புலவர் விடுவது மாதிரி இல்லை! மறுபடியும் சுத்திக்கிட்டு அவரு முன்னாடி போயி நின்றார். இன்னொரு பாட்டைப் பாடினார். இதுக்காவது ஏதாவது பரிசு கிடைக்காதா? என்கின்ற நினைப்பிலே!

ராஜா பார்த்தார் எழுந்திருச்சு உள்ளே போயிட்டார். சபையை கலைத்துவிட்டு! ராஜாவே எழுந்திருச்சு உள்ளே போனதுக்கப்புறம் மற்றவங்களுக்கு அங்கே என்ன வேலை! எல்லோரும் போய் விட்டார்கள்! புலவர் மட்டும் நின்னுகிட்டிருந்தார். அவருக்கு ரொம்பவும் ஏமாற்றமா போயிட்டுது! முகத்தைத் தொங்கப் போட்டுக்கிட்டே அரண்மனையை விட்டு வெளியே வந்தார்.

அந்த சமயத்துல எங்கேயோ போயிருந்த அமைச்சர் உள்ளே வந்துகிட்டிருக்கார். வாசல்லே புலவரைப் பார்த்தார்.

என்ன கவிஞரே! எனக்குக் கொஞ்சம் வெளியில வேலை இருந்தது... அதனால் அரச சபைக்கு இன்றைக்கு வர முடியலே! உங்க பாட்டையும் கேட்க முடியவில்லை! அது சரி... ராஜா என்ன பரிசு குடுத்தார்? என்று கேட்டார். நடந்ததை அப்படியே சொல்லி முடிச்சார் புலவர்.

அமைச்சர் அதைக் கவனமாக கேட்டுக் கொண்டார். சரி புலவரே! அரசர் உமக்குக் குடுத்ததை இப்ப நான் விலை கொடுத்து வாங்கிக்கிறேன். இந்தாங்க ஆயிரம் பொன்! அப்படி என்றார். புலவருக்கு ஒன்றும் புரியவில்லை! இந்த அமைச்சருக்கு புத்தி சுவாதீனம் சரியா இல்லை போல இருக்கு என்று முடிவு செய்து விட்டார்.

சரி... வருவதை எதுக்கு விடுவானேன்! என்று நினைத்து அவருக்குக் கொடுத்த ஆயிரம் பொன்னை வாங்கிக் கொண்டு வேகமா அந்த இடத்தை காலி செய்தார்.. அவருக்கு புத்தி தெளிஞ்சி மறுபடியும் திருப்பி வாங்கிகிட்டா என்ன பண்றதுன்னு பயம்! இது இப்படி இருக்க அந்தப்புரத்திலே ராஜா சோர்வா இருந்தார். ராணி வந்து என்ன விடயம்னு விசாரிச்சாங்க. அதுக்கு ராஜா சொன்னார்.

இன்னைக்கு அரச சபைக்கு ஒரு பெரிய கவிஞர் வந்தார். நான் கிழக்கு முகமா உட்கார்ந்திருந்தேன். என்னைப் பார்த்து ஒரு கவி பாடினார். மிகவும் உயர்ந்த கவிதையாக இருந்தது... அதனாலே கிழக்குத் திசையிலே உள்ள ராஜ்ஜியம் பூராவும் குடுத்திட்டேன். அவருக்குன்னு குடுத்த ராஜ்யத்தை இனிமே நான் பாக்கக்கூடாது ன்னு நினைச்சி தெற்கே திரும்பி உட்கார்ந்தேன். அங்கேயும் வந்து பாடினார். அதையும் கொடுத்துவிட்டேன். இப்படி எல்லா ராஜ்ஜியத்தையும் அவருக்கு தானம் செய்துவிட்டேன். இனிமேல் நாங்கள் இங்கு இருப்பது சரியில்லே! புறப்படு... தபோவனத்துக்கு போயிடுவோம்! என்றார் ராஜா.


ராணியும் புறப்பட ஆரம்பித்தார்கள். அந்த சமயத்துலே அமைச்சர் அங்கே வந்தார். அரசே... இந்த சாம்ராஜ்ய பொறுப்பு உங்கள விட்டுப் போயிடலே! நீங்க அந்தப் புலவருக்குக் குடுத்ததை நான் ஆயிரம் பொன் விலை குடுத்து நமக்கே திரும்பி வாங்கி விட்டேன் என விபரத்தைச் சொன்னார். அதுக்கப்புறம் அந்த ராஜா மறுபடியும் சிறப்பாக ஆட்சி செய்தார். அப்படி என்று இந்தக் கதையை என் முன்னாடி உட்காந்திருக்கிற இந்தக்கால கவிஞரிடம் சொன்னேன். இதைக் கேட்டவுடனே அவர் துள்ளிக்குதிச்சார். இப்பதான் சார் எனக்கு விவரம் புரியுது என்றார்.

என்ன விடயம்? என்று விசாரித்தேன். அதுக்கு அவர்... சேர்.. நான் நேற்றைக்கு நான் ஒரு சினிமா இசை அமைப்பாளர்கிட்டே போய் நான் எழுதின பாட்டை படித்துக் காட்டினேன். அவரும் இப்படித்தான் சேர் முதல்லே கிழக்கு முகமா உட்காந்து ஆர்மோனியம் வாசித்துக் கொண்டிருந்தார். என் பாட்டைக் கேட்டவுடனே கிழக்கு முகமா திரும்பி உட்காந்திட்டார். இதுக்கு என்ன அர்த்தமா இருக்கும்? என்றார்.

அதுக்கு என்ன அர்த்தம்? என்று நானே இந்த இசை அமைப்பாளர்கிட்டே கேட்டுச்சொல்கிறேன். கவலைப்படாதீர்கள்! அப்படி என்று சொல்லிவிட்டு நானே புறப்பட்டுப்போனேன். அந்த இசை அமைப்பாளரைப் பார்த்தேன். ஆர்மோனியமும் கையுமா உட்கார்ந்திருந்தார். சேர்... உங்களிடம் அந்த கவிஞர் வந்து தன்னுடைய பாட்டைப் படித்து காட்டிய போது நீங்க பின்புறமா முகத்தை திருப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்திருந்தீங்களாமே! அது க்கு என்ன சேர் அர்த்தம்? என்றேன். அவரு கோபமா என்னை முறைச்சுப் பார்த்திட்டு...அந்த ஆளு முகத்தில மறுபடியும் நான் முழிப்பதற்கு ஆசைப் படவில்லை என்று அர்த்தம்! என்றார்.

# ஆனி மாத இராசி பலன்கள்

## 16.06.2019- 16.07.2019



விகாரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் வக்கிர இயக்கத்தில் 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமான குரு பகவான் 12இல் மறையும் பொழுது, மிகுந்த நன்மைகளை வழங்கும். குறிப்பாக இதுவரை தாமதப்பட்டு வந்த காரியங்கள் இனி தடையின்றி நடைபெறும். சேமிப்பு உயரும். செல்வாக்கு அதிகரிக்கும். சாமிகளின் துணையும், ஆசாமிகளின் துணையும் சமவிகிதத்தில் கிடைக்கும். உங்களுக்கு பூமியால் யோகம், பிள்ளைகளால் பெருமை, புதிய பாதையில் பயணிக்கும் வாய்ப்பு அனைத்தும் கைகூடப்போகிறது.

இராசியிலேயே தன, சகாய ஸ்தானாதிபதியான சனி பகவான் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். அவரோடு ஞானகாரகன் கேதுவும் இருக்கிறார். எனவே ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சியிலும் அனுகூலம் கிடைக்கும். வழக்குகள் சாதகமான நிலையை நோக்கிச் செல்லும். வளர்ச்சிக்கு வித்திடும் விதத்தில் உறவினர்களும் நண்பர்களும் உதவிக்கரம் நீட்டுவர். முன்னோர் செய்த ஆன்மீகப் பணிகளையும் ஆலயத் திருப்பணிகளையும் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். சனீஸ்வரர் வழிபாடு சங்கடங்களை தீர்க்கும்.

சப்தம ஸ்தானத்தில் சூரியன், புதன், செவ்வாய், ராகு ஆகிய நான்கு கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. இதில் புதன் சொந்த வீட்டில் இருப்பதால் மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட குழப்பம் அகலும். கல்யாண முயற்சிகள் கைகூடும். உத்தியோகம் சம்பந்தமாக வெளிநாடு செல்ல வேண்டும் என்று விரும்பியவர்களுக்கு அந்த முயற்சியும் கைகூடலாம். வெளிநாட்டில் கால் பதிக்க இயலுமா? என்று கனவு கண்டு கொண்டிருந்தவர்களுக்கு, இப்பொழுது அதற்காக வாய்ப்புகள் வந்து, உங்களின் எண்ணங்களை ஈடேறச் செய்யப் போகிறது.

ராகு- கேதுக்களின் ஆதிக்கம் உங்கள் ராசிக்கு இருப்பதால், ஒருசமயம் மகிழ்ச்சியும், ஒருசமயம் மனக் குழப்பமும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும். நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்து வருவதோடு யோகபலம் பெற்ற நாளில் நாக தெய்வ வழிபாட்டினை மேற்கொள்வதன் மூலம் நன்மைகள் கிடைக்கும். மேலும் இந்த மாதம் நடராஜர் அபிஷேகம் உத்திர நட்சத்திரமன்று நடைபெற இருக்கிறது. அதைக் கண்டு களித்து சிவபுராணம் பாடி வழிபட்டால், நல்ல வாய்ப்புகள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும்.

### கடகச் செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 24ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். கடக இராசி செவ்வாய்க்கு நீச்ச

## வசந்த காலம் உருவாகும்

வீடாகும். பஞ்சம விரயாதிபதியான செவ்வாய் நீச்சம் பெறும்பொழுது, பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. குடும்பத்தில் ஒரு சில பிரச்சினைகள் தலை தூக்கும். சொத்துக்களால் ஏற்பட்ட வழக்குகள் முடிவிற்கு வரத் தாமதமாகும். பயணங்கள் பலன் தருவதாக அமையும். உடன்பிறப்புகள் ஒருசிலர் உங்களை விட்டு விலகுவர். கடன் சுமைகுறைய ஏதேனும்

ஒரு பகுதியில் உள்ள இடத்தை விற்கும் சூழ்நிலை கூட உருவாகலாம். எந்த ஒரு காரியத்தையும் செய்யும் முன் ஒருமுறைக்கு பலமுறை யோசிப்பது அவசியம்.

### புதன் வக்கிர இயக்கம்

ஜூன் 24ஆம் திகதி மிதுன இராசியில் புதன் வக்கிரம் பெறுகிறார். ஜூலை 14ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். இதற்கிடையில் நல்ல பலன்களே உங்களுக்கு கிடைக்கும். மாமன்,




மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு ஏற்படும். அவர்களின் இல்லத் திருமண விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். கல்விக்காக எடுத்த முயற்சியில் அனுகூலம் உண்டு. தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்ற நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள முன்வருவர். அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்த படியே கிடைக்கும்.

### மிதுனச் சுக்கிரன் சஞ்சாரம்

ஜூன் 29ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள புதனோடு இணைந்து புத சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். எனவே பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்குவதில் தனிக் கவனம்செலுத்துவீர்கள். மங்கல ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த காரியம் நல்ல விதமாக முடிவடையும். அரசியல்வாதிகளால் அனுகூலம் உண்டு. அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். சுக்கிர பெயர்ச்சிக் காலம் உங்களுக்கு சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும் என்றே சொல்லலாம். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் வசதி வாய்ப்புகள் பெருகும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசு வழி ஆதாரவோடு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குடும்பத்தினர்கள் உங்கள் குணமறிந்து செயற்படுவர். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைக்குரியதாக அமையும். அவர்களின் கல்விக்கும், கல்யாண காரியங்களுக்கும் நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். வழக்குகள் சாதகமாகும். பெண்வழி பிரச்சினைகள் அகலும். மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும்.

தாய்வழி ஆதரவும், சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்பும் திருப்தி தரும். பணிபுரியும் பெண்களுக்கு பல நாட்களாக எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், மேலிடத்து ஆதரவோடு வீடு, வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். ஆதியந்தப் பிரபு வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விகாரி வருடம்,ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியைப் பொறுத்த வரை சனிபகவான் தனஸ்தானத்திற்கும் அதிபதியாவார்.

தனாதிபதியாக விளங்குபவர் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கும் பொழுது, ஒரு சில சமயங்களில் பணத்தட்டுப்பாடு ஏற்படத்தான் செய்யும். எனவே எந்தக் காரியத்தையும் செய்ய நினைத்தாலும் சிந்தித்து முடிவெடுத்துச் செய்வது நல்லது.

பொதுவாக விரய ஸ்தானம் பலம்பெற்றிருக்கும் இந்த நேரத்தில் சுப விரயங்களாக நாம் செய்து கொண்டால் வீண் விரயங்களில் இருந்து விடுபட இயலும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்குவது, வீட்டை விரிவுசெய்து கட்டுவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றிற்காக செலவிடுவதன் மூலம் நல்ல விரயமாக மாற்றிக்கொள்ள இயலும்.

12ஆம் இடம் பலம்பெற்றிருக்கும் பொழுது, இடமாற்றம், ஊர்மாற்றம் உத்தியோக மாற்றம் போன்றவை நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். வேலை வாய்ப்பிற்காக முயற்சி செய்தவர்களுக்கு திடீரென வேலைவாய்ப்புக் கிடைக்கலாம். நீண்டதூரப் பயணங்கள் நிம்மதி தரும் விதத்தில் ஒரு சிலருக்கு அமையும். வாகனங்கள் வாங்கிப் பழுதாகிப் போனதே, இனி அதை மாற்றிப் புதிதாக வாங்கலாமா? அல்லது வைத்திருக்கும் வாகனத்தையே பழுது பார்த்து ஓட்டலாமா? என்றெல்லாம் சிந்தித்தவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும் நேரம் இது.

தூர தேசத்தில் இருந்து அழைப்புகள் வரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் வெளிநாடு சென்று பணிபுரிய வேண்டுமென்ற வாய்ப்புக் கைகூடி வரவில்லையே என்ற கவலை இனி மாறும். நல்ல நிறுவனங்களில் பணிபுரிய உங்களை இப்பொழுது அழைக்கலாம். இருப்பினும் இராசிநாதன் வக்கிர இயக்கத்தில் இருப்பதால் நல்ல கம்பனி தானா? செல்லுமிடம் திருப்தியாக இருக்குமா? உழைப்பிற்கேற்ற சம்பளம் கிடைக்குமா? என்றெல்லாம் நினைப்பவர்கள், சுய ஜாதகத்தையும் ஆராய்ந்து பார்த்து முடிவெடுப்பது நல்லது.

இம்மாதம் வக்கிரச் சனியால் வளர்ச்சி கூடவும், தளர்ச்சி அகலவும் ஆதியந்தப்பிரபு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. மேலும் நடராஜர் அபிஷேகத்தன்று சிவபுராணத்தை மனமுருகிப் பாடி நடராஜப்பெருமானை வழிபடவும்.

### கடகச் செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 24ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். கடக இராசிக்கு செவ்வாய்க்கு நீச்ச வீடாகும். எனவே தாயின் உடல்நலத்தில் கொஞ்சம் கவனம் தேவை. பெற்றோர்களின் உடல்நலம் கருதி ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகும். தொழிலில் புதியவர்களை நம்பி செயற்பட வேண்டாம். உடன் பிறப்புகள் உங்களை விட்டு விலகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். பாகப்பிரிவினைகள் இழுபறி நிலையில் இருக்கும். பஞ்சாயத்துக்கள் திருப்தி அளிக்காது. உடல் நலத்தில் கூடுதல் கவனம் தேவை. வாங்கிய பூமியால் சில பிரச்சினைகள் உருவாகலாம்.

### புதன் வக்கிர இயக்கம்

ஜூன் 24ஆம் திகதி மிதுன இராசியில் புதன் வக்கிரம் பெறுகிறார். அதன்பிறகு ஜூலை 14ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். இதற்கு இடைப்பட்ட காலம் உங்களுக்கு மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரும் காலமாகும். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதி யானவர், புதன். 6ஆம்




இடத்திற்கு அதிபதி வக்கிர இயக்கத்தில் இருக்கும் பொழுது எதிரிகளின் பலம் குறையும். உதிரி வருமானங்கள் வந்து சேரும். அதிகவிலை கொடுத்து வாங்கிய பொருட்களை கையாள்வதில் கவனம் தேவை. உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் உருவாகலாம். கேட்ட இடத்திற்கு இடமாறுதல் கிடைக்கும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பும் திருப்தி தரும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை எதிர்பாராத விதத்தில் வந்து சேரும். ஒருசிலர் விருப்ப ஓய்வு பெற்று, சுய தொழில் செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

### மிதுன சுக்கிரன் சஞ்சாரம்

ஜூன் 29ஆம் திகதி மிதுனத்திற்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள புதனுடன் இணைந்து புத- சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். எனவே பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். வீடு வாங்க, விற்க வாய்ப்புகள் கைகூடிவரும். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பிற இனத்தாரின் ஒத்துழைப்புடன் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள். அதிகார பதவியில் உள்ளவர்களின் அனுகூலத்தோடு நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெற வழிபிறக்கும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வாகனம் வாங்கும் முயற்சியில் இருந்த இடையூறுகள் அகலும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவுடன் சலுகைகள் கிடைக்கும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் வரவைக் காட்டிலும் செலவு இருமடங்காகும். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது. ஊர் மாற்றச் சிந்தனை மேலோங்கும். கணவன் - மனைவிக்குள் இணக்கம் அதிகரிக்க, விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. ஒருசிலருக்கு பிள்ளைகளால் மன நிம்மதி குறையும். சொத்துக்கள் வாங்கும் முயற்சி தாமதப்பட்டாலும் கடைசி நேரத்தில் கைகூடி விடும். சுபவிரயங்கள் செய்ய உகந்த மாதம் இது. வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கலாம். பணிபுரியும்பெண்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றங்கள் வரலாம். மேலதிகாரிகளையும், சக பணியாளர்களையும் அனுசரித்துச்செல்வது நல்லது. பைரவர் வழிபாடும், ஆதியந்தப் பிரபு வழிபாடும் வளர்ச்சியைக் கூட்டும்.

## சுபச் செலவு அதிகரிக்கும்

(தொடரும்)


# உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு முன்

# சில பயங்கரவாத செயற்பாடுகள் இடம்பெற்றன

## சம்பிக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுக்கு முன்னர் பல்வேறு பிரதேசங்களில் சில பயங்கரவாதச் செயற்பாடுகள் இடம்பெற்றதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**



அத்தோடு நாட்டிற்கு பொதுவான சட்டமும் கல்விக் கொள்கையும் அவசியம் எனவும் அதற்கு அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவு அவசியமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

குருநாகல் நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற தேசிய வழிகாட்டல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கு முன்னர் பல்வேறு பிரதேசங்களில் சில பயங்கரவாதச் செயற்பாடுகள் இடம்பெற்றதாகவும் இந்த விடயம் குறித்து பொறுப்புக்கூற வேண்டிய தரப்புக்கள் உரிய முறையில் கவனம் செலுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்தார். நாட்டின் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு கூடுதலான பங்களிப்பை வெளிநாட்டவர்களே வழங்கியிருப்பதாக குறிப்பிட்ட அவர், பெருந்தொகையான பணம் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

அனைத்து இன மக்களும் நாட்டில் ஒற்றுமையாக வாழக்கூடிய சூழல் உருவாக வேண்டுமென்றும் அமைச்சர் மேலும் வலியுறுத்தினார். (7)

## எனது வாகனப்பயன்பாடு தொடர்பில் பொய்ப் பிரசாரத்தை நிறுத்துங்கள்

### தவிசாளர் நிரோஷ் கோரிக்கை


தவிசாளர் பெயர்ப்பலகையுடன் எனக்காக சபையில் சேவையிலீடுபடும் வாகனத்தை பிரத்தியேகப் பாவனைக்காக நான் தவிர்க்கமுடியாத வேலைப்பளு உள்ள வேளைகளில் பயன்படுத்தி வருகின்றேன். அதற்கான அனுமதியும் உள்ளது. அதற்காக மாவட்டத்திற்கு வெளியில் செல்லும் போது கட்டணத்தை ஏற்கனவே நான் செலுத்தியிருக்கின்றேன். மாவட்டத்திற்குள்ளான பயன்பாடுகளிலும் பிரதேச சபை உத்தியோகபூர்வமாக அறவிடுவதற்கான பொறிமுறையை ஏற்படுத்தும் போது சிட்டை வாயிலாக கட்டணம் செலுத்தப்படுவதை நான் மனப்பூர்வமாக விரும்புகின்றேன் என்றே சபை அமர்வில் கேட்கப்பட்ட வினாவிற்கு நான் பதிலளித்திருந்தேன் என வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஷ் தெரிவித்தார்.

தவிசாளருக்கு பதவிப்பெயர்ப் பலகையுடன் ஒதுக்கப்பட்டுள்ள வாகனத்தில் பிரத்தியேக வாகனப்பயன்பாடு மாகாணப் பொதுக் கணக்காய்வுக் குழுவின் NP/CS/PPAC/Aud.Report/2016 வாயிலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் எனது கடமைகளின் இடையே தவிர்க்க முடியாதவாறு அவசியமாக ஏற்படும் பிரத்தியேகத் தேவைகளுக்கு விரல் விட்டு எண்ணக் கூடிய சந்தர்ப்பத்தில் அவ் வாகனத்தைப் பயன்படுத்தியுள்ளேன். தற்போதும் பயன்படுத்தத் தேவைப் பட்டால் பயன்படுத்தும் உரிமை பெற்றுள்ளேன். இப் பிரத்தியேக வாகனப் பாவனைக்கான எரிபொருள் செலவீனம் மாவட்டத்திற்கு வெளியே ஆயின் உரிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணம் செலுத்தப்பட்டு அதற்கான சிட்டை வாகன பயன்பாட்டுப் புத்தகத்தில் அப்போதே இணைக்கப்பட்டும் உள்ளது. எனினும் மாவட்டத்திற்கு உள்ளாக எழும் பிரத்தியேக குறுந்தூர பயணங்களுக்கான உரிய பதிவளிப்பு முறை நிர்வாக ரீதியில் இல்லாமல் உள்ளது. இந் நிலையில் அதனை ஏற்படுத்துமாறு பிரதேச சபை உத்தியோகத்தர்களுக்கு பல தடவைகள் பணித்துள்ளேன். தவிசாளர்களின் பிரத்தியேக வாகனப் பாவனை தொடர்பான மாகாண கணக்காய்வுக்குழுவின் அறிவுறுத்தல் இருக்கின்றபோதும் பதிவளிப்பு தொடர்பில் போதிய விளக்கங்கள், அதற்குரிய ஆவணங்கள் இல்லை என்பதால் அதுபற்றி தாம் கூட்டங்களில் கேட்டுள்ளதாகவும் உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக ஆளுநரின் அறிவுறுத்தல் பெறப்பட்டு இவ்விடயத்தில் உரிய நடைமுறைகளை மேற்கொள்ள முடியும் எனவும் இப் பிரச்சினைகளுக்கு முன்பே அவர்கள் என்னிடம் தெரிவித்துள்ளனர். அதற்காக அவர்கள் கூட்டங்களில் பேசியுள்ளதாகவும் சபைச் செயலாளரிடம் தெரியப்படுத்தியுள்ளார். நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-7)



கனடாவில் வசிக்கின்ற அயன் தனது பிறந்த நாளையொட்டி உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை மாணவனுக்கு கிராம உத்தியோகத்தர் ஊடாக துவிச்சக்கர வண்டியை அன்பளிப்பாக வழங்கினார்.



பொசன் பண்டிகையை முன்னிட்டு சாவகச்சேரிப் பொலிஸாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பொதுமக்களுக்கு இனிப்புக் கஞ்சி வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கோணார தலைமையிலான பொலிஸ் குழுவினர் கலந்துகொண்டு இனிப்புக் கஞ்சி வழங்கினர்.

(படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 18<br>உயரம்: 5’4”<br>தகைமை/தொழில்:B.Sc, SLTES விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: A/L,பட்டதாரி (உள்நாடு)மணமகன் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/9799 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 36 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:O/L,அரசஊழியர்<br>எதிர்பார்ப்பு: சொந்ததொழில்<br>தொ.இ: G/5448 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி 4<br>கி.பா: 37.5<br>உயரம்: 5’9”<br>தகைமை/தொழில்:A/L,பூசகர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்,உள்நாடு<br>தொ.இ: B/9800 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 31<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்:BA Following<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம் (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: G/5451 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5’5”<br>தகைமை/தொழில்:O/L,முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/2919 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா:15 ½ சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5’7”<br>தகைமை/தொழில்:B.Sc,MSc,ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம் (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: G/5459 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 48 ½ செவ் 7 இல்<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்:O/L,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/2925 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 21 ¼<br>உயரம்: 5’3”<br>தகைமை/தொழில்:A/L,அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் சொந்ததொழில்<br>தொ.இ: G/5461 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




கே.எம்.டி.சில்வா

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

இதற்கு மாறாக கொழும்பு நகரிலும் கல்லோயா குடியேற்றத் திட்டத்திலும் இனக்கலவரம் பரவியது. பாராளுமன்றத்திற்கு முன்பாக நடந்த தமிழரின் சத்தியாக்கிரகத்தை இலங்கை அரசு அசட்டை செய்த அதேசமயம் பாராளுமன்றத்தின் முன்பாகவே சிங்கள அடியாட்கள் சத்தியாக்கிரகிகளைத் தாக்கினர். அந்த இடத்தில் மேலும் அவர்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய சிங்களவரின் கூட்டம் அதிகரிக்கவே சத்தியாக்கிரகப் போராட்டம் அன்றே கைவிடப்பட்டது.

சிங்களம் மட்டும் சட்டத்தை உருவாக்கிய எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் மறைவின் பின் பிரதமராக இருந்த அவரின் மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க 1961 இல் அச்சட்டத்தை தமிழ்ப் பிரதேசங்கள் உட்பட நாடு முழுவதும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தார்.

இதற்கு எதிர் நடவடிக்கையாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் சிங்களம் அமுல்படுத்தப்படுவதை எதிர்த்து வெகுசனத் தமிழரின் ஆதரவுடன் அஹிம்சைவழி சத்தியாக்கிரகப் போராட்ட நடவடிக்கையில் தமிழரசுக் கட்சி இறங்கியது.

இதன்மூலம் அரசாங்கக் கச்சேரிகளின் இயக்கத்தை முடக்குவது அதன் நோக்கமாக இருந்தது. கச்சேரியில் பணிபுரியும் அரச பணியாளர்கள் தமது அலுவலகங்களுக்குள் பிரவேசிக்க இயலாத வகையில் கச்சேரி வாசலிலேயே மறியல் சத்தியாக்கிரகப் போராட்ட வழியைப் பயன்படுத்தினர்.

தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரக மறியல் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் 1961 இல் அரசாங்கம் அவசரகால நிலையை அமுல்படுத்தியது. ஏறத்தாழ இரண்டு மாதங்களாகத் தொடர்ந்த இந்தப் போராட்ட நடவடிக்கையை அடக்க அரசாங்கம் இராணுவத்தினரைப் பயன்படுத்தி மறியல் போராட்டத்தை முன்நின்று நடத்திய தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதிகளை அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்தது.

அவர்களைக் கைது செய்த பின் இராணுவத்தினர் அஹிம்சா வழியில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அங்கிருந்து அகற்றும் முயற்சியில் கடுமையாகத் தாக்கினர்.

இந்நிலையில் அரசாங்கம் தமிழரசுக் கட்சியைத் தடை செய்ததுடன் தனது உத்தியோகபூர்வ மொழிச்சட்டத்தைத் தொடர்ந்தும் அமுல்படுத்தியது.

1957 இல் நாடெங்கிலும் தமிழரால் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம், ஒத்துழையாமைப் போராட்டம் போன்றவற்றால் நாட்டின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டபோது அவற்றால் விளையக்கூடிய ஆபத்தை உணர்ந்த பண்டாரநாயக்க செல்வநாயகத்துடன் ஜூலை 1957 இல் பண்டா- செல்வா ஒப்பந்தம் எனப் பிரபலம் பெற்ற உடன்படிக்கையைச் செய்துகொண்டார்.

இச்சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்த உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும் சிங்கள வெகுசனத்தின் தமிழின எதிர்ப்பு உணர்வுகளைத் தூண்டுவதற்காகவும் கண்டி நகருக்கு பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் பத்திரிகையிலும் துண்டுப்பிரசுரங்களிலும் பண்டார நாயக்க உடன்படிக்கையில் கையெழுத்திட்டதன் மூலம் நாட்டைத் தமிழருக்கு விற்றுவிட்டார் எனத் தீவிரமான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

1958 ஆம் ஆண்டு முற்பகுதிகளில் இலங்கை அரசு யாழ்ப்பாணத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகை பேருந்துகளை அனுப்பி வைத்தது. இவற்றின் இலக்கத் தகடுகளில் முன்பு உபயோகத்திலிருந்து ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக சிங்கள சிறீ எழுத்து புகுத்தப்பட்டிருந்தது.

சிங்களம் மட்டும் சட்டம் முழுமையாக அமுல்செய்யப்படும் என்ற தனது திடமான முடிவைத் தமிழருக்கு அறிய வைப்பதற்கு அரசினால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட முயற்சியாக இச்செயல் அமைந்திருந்தது.

ஏற்கனவே சிங்களம் மட்டும் சட்டத்தினால் அதிருப்தியினால் கொதித்துப் போயிருந்த தமிழ்த் தலைவர்களும் பொதுமக்களும் அந்த இலக்கத் தகடுகளில் உள்ள சிங்கள சிறீ எழுத்தைத் தார் பூசி அழித்ததுடன் அதற்குப் பிரதியீடாக தமிழ் சிறீ எழுத்தைப் புகுத்தினர்.

இந்த நடவடிக்கை உடனடியாகவே வடக்கு- கிழக்கு எங்கும் பரவியதுடன் தமிழ்மக்கள் அவற்றுக்குப் பேராதரவும் அளித்தனர். சந்தேகத்திற்கு இடமின்றி தமிழர் சிங்கள ஆதிக்கத்திற்கு எதிரான பாதையில் இறங்கிவிட்டனர் என்பதையே இந்நிகழ்வுகள் புலப்படுத்தின.

1958 மே மாதம் வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் பண்டா- செல்வா ஒப்பந்தம் அறவே கைவிடப்பட்ட நிலையில் எதிர்ப்பு நடவடிக்கைகளுடன் அஹிம்சை வழியிலான நேரடிப் போராட்டங்களையும் நடத்துவதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவற்றின் விளைவாக 1958 ஜூன், ஜூலை மாதங்களில் பெருமளவிலான கலவரங்களும் இரத்தக் களறியும் நிகழ்ந்தன.

தெற்கில் சிங்களப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் மேல் சிங்கள இனவெறிக் காடையரினால் இன அழிப்பு மேற்கொள்ளப்பட்டது. தமிழர் பலர் கொல்லப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர். அவர்களின் சொத்துக்களும் உடைமைகளும் கொள்ளையடிக்கப்பட்டதுடன் தீக்கிரையாக்கப்பட்டன.

இவற்றின் காரணமாக பெருமளவிலான தமிழர் தாம் ஒரு அந்நிய நாட்டில் இருப்பது போன்று உணர்ந்தவராய் இடம் பெயர்ந்து தமது பாரம்பரியத் தாயகமான வடக்கு- கிழக்கு பிரதேசங்களுக்கு பாதுகாப்பும் புகலிடமும் தேடிச் சென்றனர்.

(தொடரும்)

# அடுத்தமாதம் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கிறது ஜே.வி.பி.- லால் காந்த

(கொழும்பு)

இந்த ஆண்டு இறுதியில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், ஜே.வி.பி. தனித்து வேட்பாளரை நிறுத்தும் என்று, அந்தக் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான கே.டி.லால் காந்த தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

"ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் நிறைவேற்றுக் குழுவைச் சேர்ந்தவரே போட்டியிட வேண்டும் என்று கட்சி உறுப்பினர்கள் விரும்புகின்றனர். வேறெவரையும் நாங்கள் ஆதரிக்கப் போவதில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. சார்பில் போட்டியிடும் வேட்பாளரின் பெயர் அடுத்த மாத தொடக்கத்தில் வெளியிடப்படும்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சஹ்ரானின் முகாம்களில் பயிற்சிபெற்ற நபரை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி!

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர் என்ற சந்தேகத்தில் வெலிமடையில் கைதுசெய்யப்பட்ட நபரை தடுத்து வைத்து விசாரணைகள் மேற்கொள்ள பொலிஸாருக்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக வெலிமடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை வெலிமடை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய வெலிமடை - பதுரிய மாவத்தையைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டான். இவனை வெலிமடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பொலிஸார் சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள அனுமதி பெற்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைக்கு அமைய சந்தேக நபர் பயங்கரவாதி சஹ்ரான் ஹாசிமின் ஆயுத பயிற்சி முகாமில் பயற்சி பெற்றதாகவும். தடை செய்யப்பட்ட தேசிய தௌஹீத் ஜமாத்துடன் தொடர்பைப்பேணியுள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்தது.

சந்தேக நபர் மாதம்பை பகுதியில் அமைந்துள்ள அரபு பாடசாலையில் கல்வி கற்று வந்ததுடன், ஒரு மாதகாலமாக பாடசாலைக்கு சமுகமளிக்காததால் அவரைப் பாடசாலையிலிருந்து விலக்கியுள்ளதாகவும் மாவனெல்ல புத்தர் சிலை உடைப்பின் சந்தேக நபர்கள் இவரின் நண்பர்கள் எனவும் ஆனால் புத்தர் சிலை உடைப்பில் இவருக்குப் பங்கில்லை எனவும் பொலிஸாரின் தொடர்விசாரணைகளின் போது தெரியவந்ததாகவும் கூறினார். (இ-7)

# இலங்கைக் கடற்படையினருக்கு அமெரிக்க இராணுவ நிபுணர்கள் திருகோணமலையில் பயிற்சி





(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினருக்கு அமெரிக்க இராணுவத்தின் சிறப்பு படையைச் சேர்ந்த வான்வழி தரையிறக்க அணியினரால் திருகோணமலையில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

பலன்ஸ் ஸ்ரைல் 2019/01 திட்டத்தின் கீழ், கூட்டு ஒருங்கிணைந்த பரிமாற்ற பயிற்சி என்ற பெயரில் இந்தப் பயிற்சிகள் கடந்த 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கைக் கடற்படையின் சிறப்பு படகு அணியைச் சேர்ந்த 24 பேர் மற்றும், 4 ஆவது அதிவேக தாக்குதல் அணியைச் சேர்ந்த 12 பேர் என மொத்தம் 36 கடற்படையினர் இந்தப் பயிற்சிகளில் பங்கேற்றுள்ளனர்.


இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, அமெரிக்க இராணுவத்தின் 19 ஆவது சிறப்பு படையைச் சேர்ந்த வான்வழி தரையிறக்க அணியின் 10 பயிற்சி நிபுணர்கள் திருகோணமலைக்கு வந்துள்ளனர்.

மூன்று வாரங்களுக்கு நீடிக்கவுள்ள இந்தப் பயிற்சி, ஜூலை 5 ஆம் திகதி நிறைவடையவுள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1753

### சத்தியமூர்த்தி

உன்னுடைய கனவுகள் எல்லாமே நிறைவேறும் அதை அடைவதற்கான தைரியம் இருந்தால்...



### ஜீவா

காதலித்துப்பார் தரையில காலு நிக்காது.... மொபைல்ல சார்ஜ் நிக்காது... கல்யாணம் செய்து பார் எல்லாமே நின்று போய்விடும்- அனுபவம்



### கதிர்

நீ யாராக இருந்தாலும் உனக்கென ஒரு தன்மான திமிர் எப்போதும் வைத்துக்கொள்... யாருக்காகவும் எதற்காகவும் அதை எப்போதும் இழக்காதே!



### தனம்

மாமா நீ என்னைக் கட்டிவைச்சாலும் உன் பொண்ண சைட் அடிப்பேன்.. இதுவே என் கட்டளை... இதுவே என் சாசனம்




### மீனா

வலிகளைத் தரும் உறவுகள் வேண்டாம்... ஆறுதல் தரும் தனிமையே போதும்



### முல்லை

நல்ல யோசனை தோன்றும் போது அதை உடனே செய்துவிடுங்கள்... ஏனென்றால் காலம் உங்களுக்காக காத்திருக்காது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பிள்ளைகளின் கல்விக்காக ஏங்கிய தாய் பணத்தால் பறிபோன மூன்று உயிர்கள்!



(கொள்ளுப்பிட்டி)

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியவில்லையே என்ற ஏக்கத்தாலேயே மகள் பிள்ளைகளுடன் தற்கொலை செய்து கொண்டதாக தர்ஷினியின் தாய் மரண விசாரணையின் போது தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை தனது பிள்ளைகள் இருவருடன் தற்கொலை செய்து கொண்ட தர்ஷினி என்ற தாய் தொடர்பான மரண விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் போதே உயிரிழந்த பெண்ணின் தாய் செல்லையா ரீட்டா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது மூத்தமகளாகிய ஜெனிட்டா தர்ஷினி இராமையா அவளது முதல் மகனுக்கு 6 மாதம் இருக்கும் போது கணவருடன் வெளிநாடு சென்றார். பின் விசா பிரச்சினையின் காரணமாக அவர் பிள்ளைகள் இருவருடன் நாடு திரும்பினார். இங்கு அவர் பிள்ளைகளை பாடசாலைக்குச் சேர்ப்பதற்காக முயற்சி செய்து வந்தார்.


பிள்ளைகள் வெளிநாட்டில் ஆங்கில மொழியில் கற்றதால் இங்கு பாடசாலையில் சேர்ப்பதற்கு சிக்கலாக இருந்தது. உரிய ஆவணங்களும் இருக்கவில்லை மற்றும் பிள்ளைகள் ஆரம்பக் கல்வியை ஆங்கிலத்தில் பெற்றிருந்ததனால் சர்வதேச பாடசாலையில் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதற்காக பல சர்வதேச பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்றகாக அவர் முயற்சி செய்து வந்தார்.

சம்பவ தினத்திற்கு முன், அதாவது கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமையும் பாடசாலையொன்றில் அனுமதி கேட்பதற்குச் சென்ற போது பெருந்தொகையான பணம் கேட்கப்பட்டது. இதன் போது நான் மகளுக்கு உதவுவதாக கூறினேன். பின் மறுநாள் காலை நான் இனிமேல் உங்களுக்கு சுமையாக இருக்கமாட்டேன் அம்மா என்று மகள் கூறினார். பின்னர் பிள்ளைகளுடன் தேவாலயத்திற்குச் செல்வதாக கூறினார்.

இதன் பின்னரே பிள்ளைகளுடன் தற்கொலை செய்து கொண்டார் எனக் குறித்த தாய் தெரிவித்தார். (இ-7)

# எந்தத் தேர்தலில் போட்டியிட்டாலும் மைத்திரி வெற்றியடையமாட்டார்

## சிறிநேசன் எதிர்வுகூறல்



(ஏறாவூர்)

எந்தத் தேர்தலில் போட்டியிட்டாலும் மைத்திரிபால சிறிசேனவால் மீண்டும் வெற்றியடைய முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

அந்தோடு கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா கட்சி மாறுவதில் வரலாறு படைத்தவர் என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கொத்துக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா இடம்பெற்றது.

கம்பரெலிய திட்டத்தின் கீழ் 10 இலட்சம் ரூபாய் நிதி, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசனால் இந்த ஆலயத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதற்கமைய கொத்துக்குளம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய இராஜகோபுரத்திற்கான நிர்மாணப்பணிகள் நேற்று முன்தினம் மாலை நாடாளுமன்ற உறுப்பினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஆலய நிர்வாக சபையினர், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன், "ஜனாதிபதி மைத்திரி, தெரிவுக்குழுவை நிறுத்த வேண்டும் என்கின்றார். ஆனால், தெரிவுக்குழுவின் மூலம் பல உண்மைகள் அம்பலத்திற்கு வருகின்றன. அதனை நிறுத்த வேண்டுமென கூறுவது தவறு.

ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் விரைவில் முடிவடையவுள்ளது. இதற்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் அல்ல, வேறு எந்தத் தேர்தலில் போட்டியிட்டாலும் மைத்திரி வெற்றியடையமாட்டார்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளரை பொதுஜன பெரமுன விரைவில் அறிவிக்க வேண்டும்- வாசுதேவ

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளரின் பெயரை பொதுஜன பெரமுன விரைவில் அறிவிக்கவேண்டும். வேட்பாளரை இதுவரை அறிவிக்காமல் இருப்பது குறித்து எமக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் எமது கட்சி சமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக பிரேரித்து இருக்கின்றோம் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.



சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கோத்தபாய போட்டியிட எந்தத் தடையும் இல்லை

## கம்மன்பில கூறுகிறார்




(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடுவதற்கு, எந்தத் தடையும் இல்லை என்று, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

"கோத்தபாய ராஜபக்ஷ எந்தப் பிரச்சினையும் இன்றி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும். அமெரிக்கக் குடியுரிமையைத் துறக்கின்ற ஆவணங்களை அவர் பெற்றுக் கொண்டு விட்டார்.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அமெரிக்கக் குடியுரிமை விவகாரத்தால் எந்தப் பிரச்சினையும் வராது" என்றும் கம்மன்பில தெரிவித்தார். (இ-7)

# சிகிரியாவைப் பார்வையிட 20,000 பயணிகள் வருகை



(சிகிரியா)

சிகிரியாவை பார்வையிடுவதற்காக கடந்த 16 ஆம் திகதி மாத்திரம் சுமார் 20 ஆயிரம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

கடந்த ஆண்டு பொசன் தினத்துடன் ஒப்பிடும்போது இம்முறை சிகிரியாவுக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 300 ஆக அதிகரித்துள்ளது என சிகிரியாவின் திட்டப் பணிப்பாளர் மேஜர் அநுர நிசாந்த தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 350 | 430 | 400 |
| தக்காளி | 100 | 90 | 80 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 160 | 160 | 100 | 120 |
| கோவா | 100 | 80 | 100 | 60 | 120 |
| கரட் | 150 | 100 | 200 | 150 | 200 |
| பூசணி | 60 | 90 | 100 | 90 | 120 |
| புடோல் | 80 | 90 | 80 | 70 | 120 |
| வாழைக்காய் | 50 | 80 | 50 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 180 | 160 | 200 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 100 | 110 | 130 |
| பாகற்காய் | 250 | 200 | 200 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 70 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 200 | 80 | 70 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 80 | 70 | 80 |
| குடமிளகாய் | 180 | 200 | 200 | 90 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 160 | 150 | 200 |
| போஞ்சி | 150 | 180 | 200 | 200 | 160 |
| கத்தரிப்புள்ளா | 60 | 70 | – | 60 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 250 | 300 | 250 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 30 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 150 | 150 | 100 | 160 |
| வெங்காயப்பூ | 220 | 200 | 180 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 30 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 60 | 120 | 80 |




# அதிர்ஷ்டம் எப்படியும் வரும்



சித்தூர் என்னும் ஊரில் முனியன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு அப்பாவி குடியானவன். எது சொன்னாலும் நம்பி விடுவான். இதனால் நிறைய இடங்களில் ஏமாந்து விடுவான். அவனை பல பேர் ஏமாற்றிவிடுவர்.

முனியனுக்கு விவசாய வேலை மட்டும் தெரியும். அங்குள்ள விவசாய நிலங்களுக்கு விவசாய கூலியாகத்தான் செல்வான். கூட அவன் மனைவியும் வேலைக்குச் செல்வாள்.

அவன் மனைவிக்கு நாமும் சின்னத் தோட்டம் ஒன்று வாங்கி அதில் விவசாயம் செய்து வாழ வேண்டும் என்று நீண்ட நாள் ஆசை.

அப்பொழுது விவசாயி ஒருவர் தன் மகளுடைய திருமண செலவுகளுக்காக இருபது செண்ட் தோட்டம் ஒன்றை விற்கப்போவதாக மற்றொரு நண்பரிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

அதை கேள்விப்பட்ட முனியனின் மனைவிக்கு எப்படியாவது அதை நாம் வாங்கி விவசாயம் செய்ய வேண்டும் என்று ஆசை. அந்த விவசாயிடம் சென்று அந்த இடத்திற்கு எவ்வளவு விலை என்று கேட்டாள். அவர் சொன்ன தொகை அவளிடம் இல்லை.

இருந்தாலும் அவர்களிடம் பசு மாடு ஒன்று இருந்தது. அதில் பால் கறந்து வரும் வரும்படியை எடுத்து சேமித்து வைத்திருந்தாள். ஆனால் அந்தத் தொகை விவசாயி சொன்ன விலைக்குக் காணாது.

சரி பசு மாட்டையே விற்று விடலாம், அதன் மூலம் கிடைக்கும் பணத்துக்கு இந்த இடத்தை வாங்கி விடலாம் என்று முடிவு செய்தாள்.

முனியனிடம் பசு மாட்டைக் கொடுத்து சந்தைக்கு கொண்டு போய் விற்று வரும்படி சொன்னாள். மறுநாள் முனியனும் பசு மாட்டை ஓட்டிக்கொண்டு சந்தைக்கு கிளம்பினான். சந்தை மூன்று மைல் தூரம் இருந்தது.

இவன் பசு மாட்டை ஓட்டிச் செல்வதை பார்த்த ஒருவன், முனியனை ஏமாற்றி விடலாம் என்று முடிவு செய்தான். அவன் ஆடு ஒன்றை ஓட்டிக்கொண்டு இவன் எதிரில் வந்தான்.

என்ன முனியா வத்தலும் தொத்தலுமா இருக்கற மாட்டை ஓட்டிக்கிட்டு எங்க கிளம்பிட்டாய்?

முனியனுக்கு அதிர்ச்சியாகி விட்டது. அவன் பசு மாடு நல்ல புஷ்டியாக இருக்கும். தினமும் அவனும், அவன் மனைவியும் வேலை முடிந்து வரும்போது அங்கிருக்கும் தீவன பயிர்களை கொண்டு வந்து பசு மாட்டுக்கு போட்டு வளர்த்து வந்தனர்.

என்ன அண்ணே இப்படி சொல்றீங்க? எங்க பசு மாடு நல்லாத்தானே இருக்கு.

முனியா நல்லாப் பாரு. உன் பசு மாடு ரொம்ப மெலிஞ்சு போய் இருக்கு. பாரு கால் கூட சூம்பி போன மாதிரி இருக்கு. இதைக் கூட்டிக்கிட்டு சந்தைக்கு கொண்டு போனயின்னா ஒருத்தனும் வாங்க மாட்டான்.

முனியனுக்கு கவலையாகி விட்டது. ஐயோ என் சம்சாரம் இதை வித்துத்தானே அந்த தோட்டத்தை வாங்கிறதா சொல்லுச்சு, கவலையுடன் சொன்னான்.

நீ ஒண்ணும் கவலைப்படாதே முனியா, இந்தா இந்த ஆட்டை ஓட்டிக்கிட்டு போ, மாட்டை எங்கிட்ட கொடுத்துடு. இந்த ஆடு நல்ல விலைக்குப் போகும், கொண்டு போய் சந்தையில வித்து உன் சம்சாரத்துக்கிட்டே கொடு.

இந்த ஆடு நல்லா விலை போகுமா? கவலையுடன் கேட்ட முனியனிடம், நல்லா விலை போகும், தைரியமா வாங்கிக்கொள்.

முனியனும் அவன் சொன்னதை நம்பி தன்னுடைய பசு மாட்டை கொடுத்து விட்டு அவனுடைய ஆட்டை வாங்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

மாட்டை வாங்கியவன் மகிழ்ச்சியுடன் இவனை ஏமாற்றிவிட்ட சந்தோசத்தில் வேக வேகமாக அங்கிருந்து கிளம்பினான்.

ஒரு மைல் தூரம் முனியனும் அந்த ஆட்டுடன் நடந்திருப்பான். அப்பொழுது எதிரில் ஒருவன் ஒரு சேவலுடன் நடந்து வந்து கொண்டிருந்தான். அவனுக்கு முனியனை பற்றித் தெரியும். முனியனை ஏமாற்றி விடலாம் என்று முடிவு செய்தான்.

என்ன முனியா இவ்வளவு முத்தலான ஆட்டை புடிச்சுக்கிட்டு எங்க போறே. முத்தலான ஆடா, நல்ல இளம் ஆடுன்னுதான். யோசனையுடன் முனியன் நின்றான்.

நல்லா பாருங்க அண்ணே, அது இளம் ஆடுதான், சந்தைக்குக் கொண்டு போய்கிட்டு இருக்கேன். என் மனைவி இதை வித்துத்தான் ஒரு தோட்டம் வாங்க போறா.

அட என்ன முனியா, இவ்வளவு வயசான ஆட்டை கொண்டு போய் எப்படி வித்து உன் பொண்டாட்டிக்கு தோட்டம் வாங்க பணம் கொடுப்பே. நான் சொல்றதை கேளு, இந்த சேவலை பாரு, நல்ல கட்டு சேவல், இதை கொண்டு போனியின்னா நிறைய பணம் கிடைக்கும். அதைக் கொண்டு போய் உன் சம்சாரத்துக்கிட்டே கொடுப்பியா?

இவனின் பேச்சால் குழம்பிப் போனான் முனியன். இது வயசான ஆடா, இது தெரியாம வாங்கிட்டமே, இப்ப என்ன பண்ணுறது, பேசாம இவங்கிட்டே இந்த சேவலை வாங்கி சந்தைக்கு போய் வித்து நிறையப் பணம் வாங்கிக்கலாம் என முடிவு செய்தவன், சரிண்ணே இந்தாங்க ஆட்டை பிடிங்க என்று ஆட்டை கொடுத்து விட்டு சேவலை பெற்றுக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

இன்னைக்கு நல்ல இளிச்சவாயன் மாட்டிக்கிட்டான் என்று நினைத்துக்கொண்டு அந்த ஆட்டை ஓட்டிச் சென்றான் அந்த ஏமாற்றுக்காரன்.

சந்தைக்கு அரை மைல் தள்ளி கையில் சேவலுடன் நடந்து வந்து கொண்டிருந்தான் முனியன். இப்பொழுது எதிரில் ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவன் முனியனை பார்த்ததும் முடிவு செய்து கொண்டான். இவனை எப்படியும் ஏமாற்றி சேவலை பறித்துக்கொள்ள வேண்டும் என்று.

என்ன முனியா கையில சேவலை புடுச்சுக்கிட்டு போயிட்டிருக்கிறாய்?

ஆமாண்ணே இந்த சேவலை கொண்டு போய் சந்தையில வித்து, ஒரு தோட்டம் வாங்க என் சம்சாரத்திகிட்டே பணத்தை கொண்டு போய் கொடுக்கணும்.

என்ன முனியா சொல்றே, ஒரு சேவலை வித்து தோட்டம் வாங்க முடியுமா? அப்பொழுது தான் முனியனுக்கு உண்மை புரிகிறது...ஆமா, சேவலை வித்தா அவ்வளவு பணம் கிடைக்காதே? கவலையுடன் நின்றான் முனியன்.

ஒண்ணும் கவலைப்படாதே. உன் சேவலுக்கு பதிலா இந்த சீட்டை வச்சுக்க. இதைக்கொண்டு போய் சந்தையில இருக்கிற கடையில காண்பிச்சியின்னா வேணுங்கிற பணம் கொடுப்பாங்க, சொல்லி விட்டு தன் சட்டை பையில் வைத்திருந்த ஒரு சீட்டை கொடுத்து விட்டு சேவலை வாங்கிக்கொண்டு, அப்பா ஒரு ரூபா கொடுத்து வாங்கின சீட்டில ஒரு சேவலை ஏமாத்தி வாங்கிட்டோம், மகிழ்ச்சியுடன் நினைத்துக் கொண்டே அங்கிருந்து விறுவிறுவென நடந்து சென்று விட்டான்.

பாவம் முனியன் அந்த சீட்டை கையில் வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று பயத்துடன் சந்தைக்கு சென்று அங்கிருந்த ஒரு கடையில் காண்பித்து அண்ணே இதை காட்டினா நிறையப் பணம் கிடைக்கும்னு சொன்னாங்க. அப்பாவியாய் கேட்டான்.

அந்த சீட்டை வாங்கி பார்த்தவன் ஒரு நிமிசம் இரு என்று ஒரு பத்திரிகையை வாங்கி இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து தம்பி உன் அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கு இலட்ச ரூபாய் பரிசு விழுந்திருக்கு. வா வா என்று பக்கத்திலிருந்த வங்கிக்கு அழைத்துச் சென்றான்.

வங்கியில் அந்த சீட்டை வாங்கி பதிவு செய்து கொண்ட வங்கி அதிகாரி அதிர்ஷ்டலாபச் சீட்டில் விழுந்த பணத்தை வங்கியில் வைத்துக்கொள்வதாக தெரிவித்தவர், நாளைக்கு உங்கள் மனைவியுடன் வந்து பெற்றுக்கொள்ளுங்கள் என்று தெரிவித்தார். முனியன் கடைக்காரருக்கும் வங்கி அதிகாரிக்கும் நன்றியைத் தெரிவித்து விட்டு மீண்டும் தன்னுடைய ஊருக்கு திரும்பினான்.

வீட்டுக்கு வந்த கணவன் வெறும் கையுடன் வந்திருப்பதைக் கண்ட முனியனின் மனைவி அவனை திட்டினாலும் அவன் நடந்த விடயங்களை சொல்லி முடித்த பின்னால் மிகவும் மகிழ்ந்து, நாளைக்கே போய் கொஞ்சம் பணம் மட்டும் எடுத்து இந்த தோட்டத்தை வாங்கிக்கலாம். மிச்ச பணம் அந்த வங்கியிலேயே இருக்கட்டும். வேணுங்கிறபோது எடுத்துக்கலாம். இப்ப சாப்பிட வாங்க என்று அழைத்துச்சென்றாள்.

## வளமுடன் வாழச் சிந்தனைத்துளிகள்

வணங்கத்தக்கவர்கள் - தாயும் தந்தையும்
வந்தால் போகாதது - புகழ், பழி
போனால் வராதது - மானம், உயிர்
தானாக வருவது - இளமை, முதுமை

நம்முடன் வருவது - பாவம், புண்ணியம்
அடக்க முடியாதது - ஆசை, துக்கம்
நம்மால் பிரிக்க முடியாதது - பந்தம், பாசம்
அடக்க முடியாதது - ஆசை, துக்கம்

அழிவைத்தருவது - பொறாமை, கோபம்
எல்லோருக்கும் சமமானது - பிறப்பு, இறப்பு
கடைத்தேறவழி - உண்மையும், உழைப்பும்
ஒருவன் கெடுவது - பொய்சாட்சி, செய்நன்றி மறப்பது.

சேர்ச்சில் திருமணம் நடந்து கொண்டிருந்தது. வந்திருந்தவர்களில் ஒரு சிறுமி, தனது அம்மாவிடம் கேட்டாள்.

"அம்மா, ஏன் கல்யாணப் பொண்ணு வெள்ளைக் கலரிலே கவுன் போட்டிருக்கு?"

"வெள்ளைக் கலர் மகிழ்ச்சிக்கு அடையாளம். இன்னைக்கு அந்த பொண்ணுக்கு வாழ்க்கையிலே சந்தோசமான நாள் இல்லையா? அதனால்தான் வெள்ளைக்கலர் கவுன் போட்டிருக்கு"

"அப்ப, மாப்பிள்ளை ஏன் கறுப்புக் கலர் கோட் சூட் போட்டிருக்காரு?"

## விடுகதைகளும் விடைகளும்

• எட்டித் தொட நினைத்தேன் இடறி விழுந்தேன், குதித்து தொட நினைத்தேன் குட்டிக் கரணம் போட்டேன். அது என்ன?

வானம்

• பழகினால் மறக்காதவன், பயம் அறியாதவன். அவன் யார்?

நாய்

• காலையில் உறவாடி வருவான், மாலையில் பறந்தோடிப் போவான். அவன் யார்?

சூரியன்

• நித்திரையின் தூதுவன், நினையாமல் வருவான். அவன் யார்?

கொட்டாவி

தன் மனசாட்சிக்கு ஒப்பான் கடமையைச் செய்தாலும், சூழ்நிலையை அனுசரித்து செய். அது சிறந்து விளங்கும். - யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்.பல்கலைக்கழகத்தை தாரைவார்த்து விடாதீர்கள்

எம் தமிழினத்தின் பலயீனங்கள் பற்றி நாம் சிந்திக்காதவரை எமக்கு விமோசனம் கிடைக்கப் போவதில்லை.

மற்றவர்களைக் குறை அளக்க முன்பு நாம் எம் இனத்தைப் பற்றிச் சிந்தித்தோமா? என்பதுதான் முதற் கேள்வி.

இந்தக் கேள்விக்கான பதில் வெறும் மௌனமாகவே இருக்க முடியும்.

தமிழினத்தை நசுக்குவதும் அடக்குவதும் எங்ஙனம் என்பது பற்றியே ஏனைய இனங்கள் சிந்திக்கின்றன.

முப்பது ஆண்டு கால யுத்தத்தில் தமிழினம் சின்னாபின்னப்பட்டு சிதறுண்டு போக, அந்தக் கால இடைவெளிக்குள் தமிழர்களின் நிலத்தை, அவர்களின் வாழ்விடத்தைக் கபளீகரம் செய்கின்ற சதிவேலையில் ஏனைய இனங்கள் ஈடுபட்டன.

எங்கள் கெடு காலமும் சில நாடுகளின் சதித்தனமும் சேர்ந்து தமிழர்களின் மண் மீட்புப் போராட்டம் தோற்கடிக்கப்பட, யாருமற்ற அநாதையாய் தமிழ் மக்கள் நடுத்தெருவில் நிற்கின்ற பரிதாபத்துக்கு ஆளாகினர்.

கிழக்கில் தமிழர்களின் மண் பறிபோகிறது. வன்னியில் சட்டவிரோதச் சிங்களக் குடியேற்றம் நடந்தாகிறது.

எஞ்சி இருக்கின்ற விளைநிலங்கள் இராணுவ ஆக்கிரமிப்பில் பறிபோய்விட, இப்போது தமிழர் தாயகம் குறுகிக் கொள்கிறது.

இந்தக் கொடுமையில் இருந்து மீள முடியவில்லையே என்ற ஏக்கம் மிகுந்திருக்க; இப்போது வட மாகாணத்தில் இருக்கக்கூடிய அரச நிறுவனங்களில் சிங்கள முஸ்லிம் தரப்புக்கு நியமனம் வழங்கி அவர்களை வடக்குக்கு அனுப்பி வைக்கின்ற நீசத்தனம் நடந்த வண்ணமுள்ளன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகள் வேலையின்றி வெறுப்படைந்திருக்க, இங்கிருக்கின்ற அரச அமைப்புகளில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம் தரப்புக்குமே வேலைவாய்ப்பு என்றால் தமிழ் இளைஞர் யுவதிகள் என்னதான் செய்ய முடியும்.

இத்தகைய கொடுமைத்தனங்கள் கண்டும் நம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனமாகவே இருக்கின்றனர்.

சிலவேளைகளில் வடபகுதியில் நடக்கின்ற நியமனங்கள் கூட இவர்களுக்குத் தெரியுமா? என்று ஐயுற வேண்டியுள்ளது.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கென தற்போது நடைபெறவுள்ள கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கான நியமனத்தில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம் தரப்பினர் என்ற தகவல் எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் பறிபோகிறது என்பதைத்தான் கட்டியம் சொல்லி நிற்கிறது.

விஞ்ஞான பீடத்தில், சித்த மருத்துவத்தில், சட்டத்துறையில் என எல்லாவற்றிலும் தமிழ் மாணவர்கள் குறைந்து, ஏனைய இனத்தவர்கள் அதிகரித்து நிற்க, தற்போது யாழ். பல்கலைக்கழக கல்விசாரா உத்தியோகத்தர்களையும் சிங்கள, முஸ்லிம் தரப்பாக்கி விடுகின்ற சதித்திட்டம் நடக்கிறது.

இது கண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் மௌனம் காத்தால் அது தமிழினத்துக்குச் செய்கின்ற மிகப் பெரும் துரோகத்தனமாகும்.

எனவே அரசியல் நியமனங்களாயினும் நடப்பது நம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் என்பதால் எங்கள் எதிர்ப்பு வலுவாக இருக்க வேண்டும்.

# மதத்திற்கு முன்னுரிமை வழங்குவதால் இலங்கை தோல்வியடைகிறது – நஷீர்

(ஏறாவூர்)

மனங்களை வெல்லாது மதத்தை முன்னுரிமைப்படுத்தி வருவதால் தோல்வியடைந்த நாடாக இலங்கை மாறி வருவதாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஷீர் அஹமட் தெரிவித்தார்.

அத்தோடு, நாட்டில் அதிகாரபூர்வமற்ற அதிகாரிகளாக பேரின மதவாதிகள் செயற்பட இடமளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சாடினார்.

நாட்டின் சமகால நிலைமைகள் குறித்து அவர் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கடந்த 30 வருட காலமாக இடம்பெற்று வந்த ஆயுத மோதலை ஆட்சியாளர்கள் வெற்றிகொண்டிருந்தாலும் நாட்டிலுள்ள பல இனத்தவர்களினதும் மனங்களை வெல்லத் தவறிவிட்டனர்.

இதனாலேயே இப்பொழுது மதவாத நெருக்கடி அதிகரித்து நாளுக்கு நாள் புதுப் புது வடிவத்தில் விஸ்வரூபமெடுத்து வருகிறது. பேரினவாத மதவாதம் இந்த நாட்டைப் பிளவுபடுத்தியுள்ளது.

அதிகாரமளிக்கப்படாத ஆனால், அதிகாரத்தை செயற்படுத்தும் அதிகாரிகள் என மதவாதிகள் அறைகூவல் விடுத்து ஒரு சில இனவாதிகளை தவறாக வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

இந்த நிலைமையை ஆட்சியாளர்கள் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருப்பதை உற்றுக் கவனிக்கின்றபோது அதன இனவாத ஆபத்து ஒவ்வொரு வீட்டுக் கதவையும் தட்டும் என்றே எண்ணத்தோன்றுகிறது.

இதற்கும் மேலதிகமாக ஒருபடி மேலே சென்று 'இனி மேல் நாட்டில் தீர்க்கப்படாமல் இருக்கும் சகல பிரச்சினைகளுக்கும் சமயவாதிகளே தீர்வைப் பெற்றுத் தருவார்கள் என கடுங்கோட்பாட்டு பேரினவாத மதவாதிகள் அறைகூவல் விடுத்தனர். இது எங்கு சென்று முடியுமென அச்சம் ஏற்படுகிறது.

பேரினவாதமும் அயோக்கிய அரசியலும் ஒன்றிணைந்துள்ளதன் விளைவு இது வரை நடந்த அழிவுகளை விட இன்னமும் இந்த நாட்டை பேரழிவுக்கு இட்டுச் செல்லும். அவ்வாறு இல்லாமல் இருக்க சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களின் இன ஐக்கிய செயற்பாட்டாளர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மண்டைதீவில் சுற்றுலா மையத்தை துரிதகதியில் இயங்கவைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு எக்கோ சுற்றுலா மையத்தை துரிதகதியில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலகம் முன்னெடுக்கவேண்டும் என பிரதேச சபையால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை வேலணைப் பிரதேச செயலகம் ஏற்றுக்கொண்டு அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் அனுமதி வழங்கியது.

வேலணைப் பிரதேசத்திலுள்ள இயற்கை வளத்தைப் பயன்படுத்தி அங்கு ஓர் சுற்றுலா மையத்தை அமைக்க வேண்டும் என பிரதேச சபையால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அதற்கான அனுமதியும் பிரதேச செயலகத்திடமிருந்து கிடைக்கப்பெற்றது.

அதன்பிரகாரம் வேலணைப் பிரதேச சபையின் ஆளும் கட்சியான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியால் கொண்டுவரப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவும் பிரதேசத்தின் நலன்கருதியும் இந்தத் திட்டத்திற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதாக உபதவிசாளர் நடனசிகாமணி தெரிவித்தார்.

தீவக மக்களின் குறிப்பாக வேலணை பிரதேசத்தில் வாழுகின்ற மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்துவருகின்ற சுற்றுலா மையம் நிறுவுவது தொடர்பிலான அந்தப் பகுதி மக்களுடைய காத்திருப்புக்கு உரிய பலாபலன் கிடைத்துள்ளதாகவும் இதனூடாக அந்தப் பகுதி அபிவிருத்தியில் மேலோங்கும் அதே வேளை குறித்த பகுதிக்கான பொருளாதாரத்தையும் மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்களும் எட்டப்பட்டுள்ளதாகவும் துறைசார் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர். (இ-7)

## ராகஸ்வரத்தின் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

ராகஸ்வரம் கலை மன்றத்தின் ஏற்பாட்டில் எழுத்துத்துறை மற்றும் ஒளிப்படத்துறை சார் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி இல. 261/2 ஜோச் ஹோட்டலில் நடைபெறுமென ராகஸ்வரம் கலை மன்றத்தின் இயக்குநர் ஜோ.ஜெஸ்ரின் தெரிவித்துள்ளார். (5)

# மாணவர் மன்ற வருடாந்த ஒன்றுகூடல்

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர் மன்ற வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு பிரதான மண்டபத்தில் உயர்தர மாணவர் மன்ற தலைவர் செல்வி மதுரசா பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக பழைய மாணவியும் கண்டி போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி அர்ச்சனா நித்தியரூபன், கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜிகரன், கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக வர்த்தக பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் தி.சிவரூபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை மணிவரை யாழ். பிரதேசத்தில் மண்டைதீவு, பூம்புகார், மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்கும்பான் நீர்ப்பாசனம், வெண்புரவி நகர் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் செட்டிக்குளம் ஒரு பகுதி, முகத்தான்குளம், முதலியார்குளம், கப்பாச்சி, துட்டுவாகை, நேரியகுளம், சின்னசிப்பிகுளம், NW steel industries, இலுப்பைகுளம், கஜசிங்கபுர இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## விசேட அதிரடிப்படையினரின் வாகனம்மோதி முதியவர் காயம்

வவுனியா புகையிரத நிலைய வீதியில் நேற்றுக் காலை விசேட அதிரடிப் படையினரின் வாகனம் மோதியதில் முதியவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

புகையிரத நிலைய வீதியில் இலங்கை வங்கி அருகே தரித்து நின்ற விசேட அதிரடிப்படையினரின் வாகனம் வீதிக்கு ஏற முற்பட்ட சமயம் வவுனியா நகரிலிருந்து புகையிரத வீதி வழியாக பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீதுமோதி விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற முதியவர் காயமடைந்த நிலையில் ஆட்டோ மூலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு போக்குவரத்து பொலிஸார் வருவதற்கு முன்னர் விசேட அதிரடிப்படையினர் தமது வாகனத்தை எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு சென்றுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஓ)

## மஹோற்சவம்

மிருசுவில் கெற்பேலி கிழக்கு தரவைபம்பு ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலய (லிங்கேஸ்வரர் ஆரணியம்) 27 ஆவது வருட மஹோற்சவம் இன்று 19 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பன்னிரெண்டு நாட்கள் நடைபெறும்.

இம்மஹோற்சவத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை கடல் தீர்த்தமும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பட்டுத் தீர்த்தமும் இடம்பெறவுள்ளன. (5)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### அறிவே உயர்வுதரும்

✦ உலகில் மக்கள் செய்யும் பிழைகளுக்கெல்லாம் தலையாய பிழை அறிவு நூல்களைக் கற்காமல் இருப்பதே ஆகும். ஆனால், நல்ல நூல்களை வாசிப்பதை அன்றாடப் பணியாக்கிக் கொள்ளுங்கள்.

✦ மனிதனை உயர்த்துவது பணமன்று; பதவியன்று; குலமன்று பருமன் அன்று உயரம் அன்று. அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்த வல்லது.

✦ ஆண்டவனுக்கு பணக்காரன், இல்லாதவன் என்ற பேதங்கள் சிறிதும் கிடையாது. இறைவனின் சந்நிதியில் அனைவரும் சமம் என்ற உணர்வோடு வழிபாடு செய்யுங்கள்.

✦ குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் தினமும் ஒன்றுகூடி காலை அல்லது மாலை நேரத்தில் வழிபாடு செய்வதால் குடும்பத்தில் அமைதியும், அருளும் நிறைக்கும்.

✦ இனிமையான சொற்களைப் பேசுபவர்களுக்கு உலகில் எந்தத் துன்பமும் இல்லை. எமவாதனை உண்டாகாது. அவர் இருக்கும் இடத்தில் அருள் துலங்கும்.

✦ நாம் எந்தப் பாவத்தைச் செய்தாலும் தெய்வத்திடம் மன்னிப்பு பெற்று விடலாம். ஆனால், நன்றி மறந்த பாவத்தை தெய்வம் ஒருபோதும் மன்னிக்காது.

✦ தன்னுடைய புத்தகம், பெண், பணம் இவை பிறரிடம் கொடுத்தால் போனது போனது தான். ஒரு வேளை திரும்பி வந்தாலும் அது தன் தன்மையில் சிதையாமல் இருப்பது என்பது சந்தேகம்தான்.

# வவுனியா நெளுக்குளம் கலைமகளை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது சண்டிலிப்பாய் இந்து




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களிற்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

16 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 20:10 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. மூன்றாமிடத்தை கிளிநொச்சி மகா வித்தியாலய அணி பெற்றது. (க-60)

# உடுத்துறை செந்தமிழை வீழ்த்தி சம்பியனானது சுப்பராங் அணி



வடமாகாண ரீதியாக வடமராட்சிக் கிழக்கு ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டி கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்றது. வட மாகாணம் அடங்கலாக சுமார் 32 கழகங்கள் பங்குகொண்ட விளையாட்டிலிருந்து இறுதிப் போட்டிக்கு தெரிவான உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகமும் புதுக்குடியிருப்பு சுப்பராங் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின.

போட்டிகள் தொடங்கிய நேரத்தில் இருந்தே இரண்டு அணிகளும் கோல்களை போடுவதற்கான சந்தர்ப்பங்கள் பல இருந்தும் இடைவேளை வரை இரண்டு அணிகளும் எது விதமான கோல்களையும் போடவில்லை. தொடர்ந்து இடைவேளைக்கு பின்னரும் விளையாட்டின் போதும் எந்தவிதமான கோல்களையும் போடாது இரண்டு அணிகளும் சமநிலையில் காணப்பட்டன.

பின்னர் வெற்றியைத் தீர்மானிக்கும் தண்ட உதை மூலம் 5:4 என்ற கோல்கணக்கில் புதுக்குடியிருப்பு சுப்பராங் அணி வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், கேசவன் சயந்தன், பருத்தித்துறை பிரதி சபை தவிசாளர் அ.சா.அரியகுமார் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணியினருக்கு கிண்ணங்களை வழங்கி வைத்தனர். (க-64)

# வலைப்பந்தாட்டத்தில் மகுடம் சூடியது அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களிற்கான இறுதியாட்டங்கள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதியது.

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி ஆட்ட நேர முடிவில் 30:17 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. 3ம் இடத்தை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி அணி பெற்றது. (க-60)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# வளர்மதி தாச்சிச்சுற்றுப்போட்டி இளங்கதிர் அணி கிண்ணம்



கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்திய யாழ்.மாவட்ட ரீதியான தாச்சி சுற்றுப் போட்டியில் இளங்கதிர் அணி சம்பியனானது. வளர்மதி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளங்கதிர் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் இளங்கதிர் விளையாட்டுக் கழகம் 5:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றியது. (க)




# முத்துத் தம்பி மகாவித்திக்கு வெண்கலம்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான கரப்பந்தாட்டப் போட்டியில் முத்துத்தம்பி மகா வித்தியாலய அணி வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களிற்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் முத்துத்தம்பி மகா வித்தியாலய அணியை எதிர்த்து முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய முத்துத்தம்பி மகா வித்தியாலய அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியது. (க-60)

## வடக்கில் வறு...

நேரம், கிழக்கு மாகாணத்தில் சுமார் 36 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 1,52,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 4,47,164 வரை அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஆனையிறவு கடல் நீரேரியின் நீரமட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

இதனால், இந்த கடல் நீரேரியில் மீன்பிடியில் ஈடுபட்ட தட்டுவங்கொட்டி கிராமத்தை சேர்ந்த 100க்கும் அதிக குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளன.

மட்டக்களப்பு - கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட முறுத்தாணைக் கிராமத்தில் 113 குடும்பங்கள் குடிநீரைப் பெறுவதில் சிரமப்படுகின்றனர்.

முறுத்தாணை கிராமத்தில் காணப்படும் 4 கிணறுகளிலும் நீர் வற்றியுள்ளதுடன், அருகிலுள்ள ஆற்று நீரைப் பருகும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் அரச சார்பற்ற நிறுவனத்தினால் வழங்கப்பட்ட குடிநீர்த் திட்டம் செயலிழந்து பல வருடங்களாகின்றன.

மட்டக்களப்பு கிரான் கமநல சேவைப் பிரிவுக்குப்பட்ட மாவட்டுவான் கண்டத்தில் சுமார் 250 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் தொடர் வறட்சியால் மாவட்டுவான் கண்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 250 ஏக்கர் நெற்செய்கையும் முற்றுமுழுதாக அழிவடைந்துள்ளன. (ம)

## 60 கிலோ கேரள...

கைது செய்யப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

தொண்டைமானாறு கெருடாவில் பகுதியில் இருந்து கஞ்சா கடத்தப்படவுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை பொலிஸார் கெருடாவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றினை முற்றுகையிட்டனர் அப்போது வீட்டில் இருந்த 30 கிலோகிராம் கேரளக்கஞ்சா மீட்கப்பட்டது.

பொலிஸார் வருவதைக் கண்டு வீட்டில் இருந்து எடுத்துச் செல்ல முற்பட்ட 30 கிலோகிராம் கேரளக் கஞ்சா அருகில் உள்ள கிணற்றில் வீசப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் தப்பித்த நிலையில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தப்பித்த பிரதான சந்தேகநபரை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ம-10.60)

## சஹ்ரான் தீவிரவாத செயற்பாட்டை...

தெரிவித்துள்ளார்.

மேலும், சஹ்ரான் மற்றும் அவரது சகோதரர் ஆகியோர் காத்தான்குடியை விட்டு வெளியேறியதிலிருந்து அங்கு அமைதியான சூழலே நிலவியதாகவும் அவர் கூறினார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை சாட்சியம் வழங்கியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நான் கடமைகளை பொறுப்பேற்ற காலத்தில் காத்தான்குடியில் எந்தப் பிரச்சினைகளும் இடம்பெறவில்லை. ஆனால், அதற்கு முன்னரான காலத்தில், அதாவது சஹ்ரான் காத்தான்குடியில் வசிக்கும் காலத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காத்தான்குடியில் சில பிரச்சினைகள் இடம்பெற்றதை நான் அறிவேன்.

சஹ்ரான்தான் அந்தப் பிரச்சினைகளுக்குக் காரணமானவராவார். இன்னொரு பள்ளிவாசலுடன் ஏற்பட்ட முரண்பாட்டினால், 13 பேர் கைது செய்யப்பட்ட பின்னர், சஹ்ரான் காத்தான்குடியிலிருந்து வெளியேறிவிட்டார்.

பெற்றோல் குண்டொன்று மீட்கப்பட்டதையடுத்து, இரசாயண பகுப்பாய்வு அறிக்கைக்கு இணங்கவே இந்த விடயத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதாவது பீ அறிக்கைக்கு இணங்கவே இவர்கள் மீது வழங்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எனினும், சஹ்ரான் நீதிமன்றில் ஒருமுறைகூட ஆஜராகவில்லை. ஊருக்கும் வரவில்லை. ஒவ்வொரு தடவைகளும் கிராம சேவகர் மற்றும் அதிகாரிகள் ஊடாக நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டது.

எனினும், அந்த பள்ளிவாசல் சர்ச்சைக்குப் பின்னர் அவர் ஊரைவிட்டு சென்றதையடுத்து மீண்டும் வரவில்லை. அவர் வந்திருந்தால், நிச்சயமாக ஊர் மக்கள் பொலிஸில் அறிவித்திருப்பார்கள் என்பதையும் நான் இங்கு உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

இந்த விடயம் தொடர்பாக நாம் சில விசாரணைகளை மேற்கொண்டிருந்தோம். எனினும், சஹ்ரான் அப்போது எங்கே வசித்துவந்தார் என்பதை எம்மால் கண்டுபிடித்துக்கொள்ள முடியாது போய்விட்டது.

சஹ்ரானும் அவருடைய தம்பியும் தான் ஊரைவிட்டு சென்றிருந்தார்கள். எனினும், கைது செய்யப்பட்ட 13 பேரும் மாத இறுதியில் பொலிஸ் நிலையம் வந்து கையெழுத்திடுவார்கள்.

ஏப்ரல் 17 ஆம் திகதி, மோட்டார் சைக்கிளொன்றில் தீ விபத்து ஏற்பட்டதாக, குறித்த காணியின் உரிமையாளர் முறைப்பாடு அளித்தார்.

நானும், குற்றப்புலனாய்வு அதிகாரியும் அங்கு சென்று பார்வையிட்டபோது, அது வெடிப்பு என்று தெளிவாக தெரியவந்தது. நுவரெலிய மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களிலேயே அவர்கள் செயற்பட்டுள்ளார்கள். காத்தான்குடி பொலிஸ் வட்டாரத்தில் அவர்கள் செயற்படவில்லை என கூறினார். (ம)

## முஸ்லிம் பின்னணியில் அமெரிக்க...

தார்.

மேலும், அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக்பொம்பியோவின் இலங்கை விஜயமானது, நாட்டின் எதிர்க்காலத்திற்கே பாரிய ஆபத்தாக அமையும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏப்ரல் 21 ஆம் திகதி, முஸ்லிம் அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் நாடே தற்போது சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது. இதனால் பொருளாதாரம், ஐக்கியம், சுதந்திரம், தனி மனித உரிமை என அனைத்து விடயங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அடுத்தவாரம் அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். அவர் விசேடமாக திருகோணமலைக்கு செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, இலங்கை - அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தமான சோபா ஒப்பந்தத்துக்கு இணங்க, அமெரிக்கத் துருப்புக்களை இலங்கைக்குள் இறக்குவது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கிலேயே இந்த விஜயம் அமைந்துள்ளது.

அவ்வாறு அமெரிக்க இராணுவத்தினரை இலங்கைக்குள் இறக்குவதால் ஏற்படும் விளைவுகளை நாம் தொடர்ச்சியாக தெரிவித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

சோபா ஒப்பந்தத்துக்கு இணங்க, இலங்கையில் வந்திறங்கும் அமெரிக்கத் துருப்புகளை, இலங்கை சட்டத்திற்கு இணங்க கட்டுப்படுத்த முடியாது.

இது பாரதூரமான விளைவுகளை எதிர்க்காலத்தில் ஏற்படுத்திவிடும். இவ்வாறு நாட்டுக்கே அச்சுறுத்தலான விடயம் தொடர்பிலான செயற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவந்தாலும், அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காமல் வேடிக்கை மட்டும் தான் பார்த்துக்கொண்டிருக்கிறது.

இன்று அடிப்படைவாதம் நாட்டில் பாரியளவில் வளர்ந்து வருகிறது. கிழக்கில் மட்டும் பல இந்துக் கோயில்கள் உடைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் அடிப்படைவாதிகள், முழு கிழக்கையும் அரபு உலகமாக மாற்றவே முயற்சித்து வருகிறார்கள். வேறு எந்த சமயத்திற்கும் கிழக்கில் அனுமதியில்லாத நிலைமையே அங்கு தற்போது நிலவுகிறது.

இந்த அடிப்படைவாதம் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு இணங்கவே இடம்பெறுகிறது. இதனை சாதாரண ஒன்றாக எடுத்துக்கொள்ள முடியாது. எதிர்காலத்திற்கான அச்சுறுத்தல் தொடர்பிலேயே நாம் இன்று கதைத்துக் கொண்டிருக்கிறோம். அனைவருக்கும் சொந்தமான இந்த நாட்டின் எந்தவொரு அடிப்படைவாதத்துக்கும் அனுமதியளிக்க முடியாது என விமல் வீரவன்ச கூறினார். (ம)

## இன்று மதியம் வரை அவகாசம்...

டக்காரர்கள் நிராகரித்துள்ளனர்.

ரன்முத்துகல சங்கரத்ன தேரர் மற்றும் இந்துமத குரு, கல்முனை நகரசபை உறுப்பினர்கள் இந்த போராட்டத்தை நேற்று இரண்டாம் நாளாக முன்னெடுத்தனர்.

நேற்று மாலை போராட்ட இடத்திற்கு சென்ற அம்பாறை அரசாங்க அதிபர் பண்டாரநாயக்க, போராட்டத்தை கைவிடும்படி போராட்டக்காரர்களை கேட்டுக்கொண்டார்.

இன்று காலை அம்பாறை மாவட்ட செயலகத்தில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், போராட்டத்தை கைவிடும்படி அரச அதிபர் கேட்டுக்கொண்டார்.

எனினும், போராட்டக்காரர்கள் அந்த கோரிக்கையை நிராகரித்துள்ளனர். அப்படியொரு பேச்சுவார்த்தையை செய்வதென்றால், தமது போராட்ட இடத்திலேயே நடத்தும்படி தெரிவித்தனர்.

அரச அதிபர் இந்த விடயத்தில் ஏதாவது முடிவெடுப்பதென்றால் இன்று மதியம் 2 மணிக்குள் எடுக்கும்படியும், அதற்குள் முடிவொன்று எடுக்கப்படாவிட்டால், இன்று மதியம் 2 மணிக்கு செய்தியாளர் சந்திப்பை நடத்தி அதிரடி முடிவொன்றை அறிவிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (ம)

## எந்தக் கருத்...

தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று முன் தினம் மாலை அலரி மாளிகையில் இடம் பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம் பெற்ற இக்கலந்துரையாடலின் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கலந்துரையாடல் முடிவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பிரதமர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்ததாக தெரிவித்துள்ளார். (ம)

## 4 ரயில் சேவைகள் நாளை...

புனரமைப்பு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கிணங்க, மீனகயா கடுகதி ரயில், தலைமன்னார், காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கான இரவு நேர தபால் ரயில்கள் என்பனவும் இரத்து செய்யப்படவுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பொல்கஹவெலயில் இருந்து மஹவ சந்தி வரையில் சேவையில் ஈடுபடும் ரயில், கொழும்பு - கோட்டை முதல் கனேவத்தை மற்றும் காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு - கோட்டை வரை சேவையில் ஈடுபடும் கடுகதி ரயில்கள், மாத்திரம் நாளைவடக்கு ரயில் மார்க்கத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இதனிடையே, எதிர்வரும் 21ஆம் திகதி கனேவத்தயில் இருந்து கொழும்பு - கோட்டை வரை சேவையில் ஈடுபடும் ரயில் ஒரு மணித்தியாலம் தாமதமாக பயணத்தை ஆரம்பிக்கும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

## விமல் வீரவன்சவை பரிசோதிக்...



செவ்வாய்க்கிழமை உரையாற்றிய போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது, எனது தாயின் சகோதரர் ஒருவரின் மகள்தான் தெமடகொட தற்கொலை குண்டுதாரி என விமல் வீரவன்ச, நான் சபையில் இல்லாதவேளை தெரிவித்திருக்கின்றார்.

எனது தாய்க்கு சகோதரர் இல்லை, இதுபோன்ற பொய்யான பிரசாரங்களை இங்கு விமல் வீரவன்ச தொடர்ச்சியாக கூறிவருகின்றார்.

குண்டுகள் வெடித்த நாளிலிருந்து விமல் வீரவன்ச இவ்வாறான பொய்களை சொல்லி சொல்லி இனங்களுக்கிடையே குரோதத்தையும் பிரச்சினைகளையும் உருவாக்குவதில் முனைப்புடன் செயற்படுகின்றார்.

அவர் சொல்லுவது எல்லாம் அப்பட்டமான பொய்யாகும். எனவேதான் அவர் எனக்கு எதிராக எந்த விதமான முறைப்பாடுகளையும் பொலிஸில் இதுவரை செய்யவில்லை.

பாராளுமன்றில் சிறப்புரிமையை பயன்படுத்தி இவர் மேற்கொள்ளும் இவ்வாறான பொய் பிரசாரங்களை ஊடகங்களும் மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக கொண்டு செல்கின்றது.

எனது அம்மாவுக்கு எந்த சகோதரரும் இல்லை எனவும். இவ்வாறான சம்பவத்துடன் எந்த தொடர்பும் இல்லை எனவும் நான் பொறுப்புடன் இங்கு கூறவிரும்புகின்றேன்.

அது மாத்திரமின்றி இது தொடர்பிலான உண்மைகள் வெளிவர வேண்டும் எனவும் விரும்புகின்றேன் என அவர் கூறினார். (ம)









# நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில்...

பான தெரிவுக்குழு தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கடந்த வாரம் ஜனாதிபதியினால் அமைச்சரவை கூட்டம் நடத்தப்பட வில்லை. இந்த நிலையில் நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சரவை கூடியது.

இக்கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள்கலந்து கொண்டனர். கூட்டம்சுமார் ஒரு மணித்தியாலம் இடம் பெற்றது.

இதன்போது சர்ச்சைக் குரிய விடயங்கள் குறித்து எந்த வொரு கருத்தையும் ஜனாதிபதி முன்வைக்க வில்லை என்று அமைச்சர்கள் தெரிவித்தனர்.

வழமையாக அமைச் சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படுவதைப் போல, அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பாகவே ஆலோ சிக்கப்பட்டதாக அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

விசேடமாக எந்தவொரு விடயம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட வில்லை என்றும் அமைச்சரவை பத்திரங்கள் தொடர்பில் உரிய அமைச்சர்களினால் விளக்கங்கள் அளிக்கப்பட்டதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர்களான லகி ஜயவர்த்தன, அனோமா கமகே மற்றும் காமினி ஜயவிக்கிரம ஆகியோரும் நேற்றைய அமைச்சர வைக்கூட்டத்தில் முக்கியமாக எதுவும் கலந்துரையாடப்பட வில்லையென தெரிவித்தனர். (ம)


## பெண் வேலையாள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் பிளாஸ் ரிக் உபகரணங்கள் விற்பனை நிலை யத்திற்கு பெண் வேலையாள் தேவை.

(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)

தொடர்புகளுக்கு :
077 311 7875

(9207)


# வீடு, வாகனத்தை...

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

இதன் காரணமாகவே தான் எதிர்க் கட்சி தலைவருக்கான வாக னத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்ததாகவும் அவர் கூறினார்.

நேற்றைய பாராளுமன்ற அமர் வின் போது, மகிந்த ராஜபக்ஷ விற்கும் சில அமைச்சர்களுக்கும் வாகனங்களை கொள்வனவு செய்வ தற்காக 57.54 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் பாராளு மன்றில் முன்வைக்கப்பட்டது. இதுதொடர்பாக பாராளுமன்றில் பெரும் சர்ச்சை ஏற்பட்ட போது, கருத்து தெரிவித்த மகிந்த ராஜ பக்ஷ, எதிர்க்கட்சி தலைவருக்கான வீடு, வாகனம் என்பவற்றை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மீண்டும் கையளிக்கவில்லை. இந்நிலை யிலேயே தான் குறித்த கோரிக் கையை விடுத்ததாக தெரிவித் தார். (ம)

# பதவிகளை மீள...

லும் இறுதியான ஒரு முடிவு எட்டப் படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் தெரி வித்துள்ளார்.

நேற்று பிற்பகல் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் பதவிகளை இராஜினாமா செய்த அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


## CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT

(C-6727)



July 2019 க்கான புதிய பிரிவு ஆரம்பம்

G.C.E O/L உடன்

TUTION FEE 30,000/- ONLY

CTHI

CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE
1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA
0771041923 | 0213146171


# அரச கொள்கையையே நாட்டில் நடைமுறைப் படுத்த...

ஆட்சியாளர்கள் மகாசங்கத்தினரின் ஆலோசனைகளை ஏற்று அதற்கமைய செயற்படுவார்களாயின் நாடு ஒருபோதும் தவறான பாதையில் பயணிக்காதென ஜனாதி பதி தெரிவித்தார்.

பௌத்த கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அரச கொள்கையையே நாட்டில் நடை முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், பல உலக நாடுகளின் தற்போதைய அசாதா ரண நிலைமைகளை கவனத்திற்கொள் ளும்போது எமது நாட்டில் சகல இனத்தவர் களும் மதத்தவர்களும் சுதந்திரமாக வாழக் கூடிய சூழலொன்று கட்டியெழுப்பப்பட்டுள்ள மைக்கு பௌத்த கோட்பாடுகளின் அடிப்படை யிலான மனிதநேய வழிகாட்டுதல்களே காரண மாகுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

அங்குரங்கெத்த, மாதன்வல ரஜமகா விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ள தூபியில் புனித சின்னங்களை பிரதிஷ்டை செய்யும் புண்ணிய நிகழ்வில் நேற்று பிற்பகல் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

வரலாற்று ரீதியான பல சிறப்புக்களைக்கொண்ட மாதன் வல ரஜமகா விகாரைக்கு நேற்று பிற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதி முதலில் சமய அனுஷ்டானங்களில் ஈடுபட்டு ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்ட தன் பின்னர் புதிதாக நிர்மாணிக் கப்பட்ட தூபியில் புனித சின்னங்களை பிரதிஷ்டை செய்யும் புண்ணிய நிகழ்வில் கலந்துகொண்டார். (ம)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623

(9208)

## பணிநிலை வேண்டுகை

யாழ் நல்லூர் பகுதியில் இயங்கும் விற்பனை நிறுவனம் ஒன்றுக்கு கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கணக்கு பதிவுகள் மேற்கொள் வதற்கு பெண் ஒருவர் தேவை. வயதெல்லை : 21 - 35 வரை, தகைமை கள் : க.பொ.த. (உயர்தரம்) சம்பளம் நேரில் பேசித்தீர்க்கப்படும்.

யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு : 076 986 5238

(9210)

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

(C-6711)



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல 401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413

Inner Circle

பிரசித்திபெற்ற தகவல் தொடர்பு நிறுவனத்திற்கு இணைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் உட்பட மேலும் பல பணியிடங்களிற்காக

## ஆட்சேர்ப்பு நடாத்தப்படுகிறது

- அடிப்படைச் சம்பளத்துடன் நிரந்தர தொழில் (EPF, ETF)
- பயிற்சி காலத்தின் போது ரூபா 45,000 க்கு அதிக வருமானம்
- இலவசக் காப்புறுதி
- போக்குவரத்து வசதி / தொலைபேசி கொடுப்பனவு
- வெளிநாட்டு சுற்றுலா
- தொழில்சார் மட்ட ஆலோசனைகள் மற்றும்கல்வி வாய்ப்புக்கள்
- தென் ஆசியாவின் உயர்மட்ட தொலைத்தொடர்பு வலைப் பின்னலின் அதிகாரபூர்வ பிரதிநிதித்துவம்.

நீங்களும் குறிக்கோளுக்காக உயர் மட்டத்தில் அர்ப்பணிப்பை செய் யக்கூடிய நல்ல தொடர்பாடல் திறன் மற்றும் க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு தோற்றி 18க்கும் 29க்கும் இடைப்பட்ட வயதெல்லையை கொண்டவராயின்...

எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் :
077 999 4807, 076 770 7759

(9209)

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L சித்தியடைந்தவர்கள் விரும்பத்தக்கது



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

(C-6728)

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0768226243
v2vacancies@gmail.com

## FLC FRENCH LANGUAGE CENTRE



பிரெஞ்ச்

(C-6659)

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, அரியாலை. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 22.06.2019 சனி காலை 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 24.06.19 3.30 pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

(C-6532)

0768226240

மானிப்பாய், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS

## ஓர் நற்செய்தி

## HOTEL LUX ETOILES

தனது வியாபாரத்தை கடந்த 10 மாத காலமாக குத்தகைக்கு கொடுத்திருந்ததையும் அக்குத்தகையை இம்மாதம் 01ஆம் திகதியிலிருந்து அதை மீளப் பெற்றுக்கொண்டதையும் மகிழ்ச்சியுடன் யாளர்களுக்கு பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு :
- தங்கும் அறை, கல்யாண மண்டபம் என்பன வற்றுக்கு 30% விலைக்கழிவு வழங்கப்படும்.
- கடல், இறைச்சி உணவுகள் என்பன 6 மாதகாலங்களுக்கு 30% விலைக்கழி வுடன் பரிமாறப்படும் என்பதை பெருமை யுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

HOTEL LUX ETOILES
34, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொலைபேசி இல. : 021 222 3966

(C-6723)

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

இப்பொழுது!!!!
- குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- மேலதிக கட்டணம் எதுவும் இல்லை.

UK - 350/=
France, Germany, Italy, Denmark - 500/=

(9192)

திருமுருகன் கொம்நெற்
திருநெல்வேலி, நெல்லியடி. 321, K.K.S.Road, Jaffna. 0777 554 528

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION

070 330 5500

அன்னா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை

## சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.

UK - 525.00, Germany - 675.00, France - 830.00

நிபந்தனைகள் எதுவும் இல்லை

அருள்

இல.1, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576

(C-6615)

# முதலீட்டாளர் கருத்துக்களம் - யாழ்ப்பாணம்

எதிர்வரும் ஜுன் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் 11.30 வரை

Tilko Jaffna City Hotel- Jaffna

பங்குச் சந்தை முதலீட்டு நிபுணர்களின் கருத்துப்பரிமாற்றங்களுடன் கூடிய முதலீட்டு ஆலோசகர்கள் சந்திப்பு.

அனுமதி இலவசம்

முன்பதிவுகளுக்கு:- 021 222 1455 / 0777 822 014 / 0777 105 205

CSE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
செல்வம் மற்றும் வெகுமதியின் பிறப்பிடம்

(C-6601)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## பகுதி-I

## மேல்மாகாணம்

❖ மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக
படத்திற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




1. 1. அழகானது, தூய்மையானது, குளிர்ச்சியானது.
   2. நிறங்களுடையது, அழகானது, மணமுடையது.
   3. வாடாது, நிறமுடையது, மென்மையானது.




2. 1. வடிவம், புடைவை, பலகை.
   2. மழை,பிள்ளை,கைப்பிடி.
   3.வெயில், மழை, கைப் பிடி.

3.முதலிலுள்ள உருவை C யிலிருந்து நோக்கும் போது தோன்றும் தோற்றம் யாது?



4.




5."கற்பகம்" என்ற சொல் ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டிருந்தது. அது எழுதப்பட்டிருந்த சரியான ஒழுங்கைத் தெரிவு செய்க?

1. RSPQP  2.PRSQP  3.PQRPS

6.வினா இலக்கம் 05 இன் ஆங்கில எழுத்தமைப்பிற்கேற்ப "கற்பூரம்" என்ற சொல்லைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள் எவை?


1. PQSTC  2.PQTCS  3.PTCQS

2.பின்வரும் கோலத்தை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க?




1) 7
2) 9
3) 8

7.



1) 50
2) 35
3) 30

8. முதல் இரு உருக்களையும் ஒன்றன் மேல் ஒன்று வைக்கும் போது தோன்றும் உரு?



❖ பின்வரும் சொற்கள் குறிக்கும் தனிச்சொல் யாது?

9. இரும்பு, செம்பு,தங்கம்,............. (உலோகம், ஈயம்,பலம்)


10. கிளி, கொண்டைக்குருவி, மஞ்சட்குருவி,............... (மாமிச உண்ணி, பட்சி, விலங்கு)

❖ கட்டமிடப்பட்டுள்ள இலக்கத்திற்குரிய பொருத்தமான பெறுமானத்தை தெரிவு செய்க

11. [40+5] ×2=16  1)2×4  2)10-5  3)20×2

12.75÷ [4+1]=15  1)3×2  2)15÷3  3)20-14


13. முதலாவதும், இரண்டாவதும் தராசுகளிலுள்ள பொருட்களின் நிறையின் கூட்டுத் தொகையை அனுமானித்து மூன்றாவது தராசின் நிறையின் கீழ்க் கோடிடுக.




1)5Kg  2)9Kg  3)13Kg

கீழே உள்ளது ஒவ்வொரு எழுத்துக்குரிய கோல அமைப்பாகும். அதன்படி பின் தரப்பட்டுள்ள கோல அமைப்பிற்கேற்ப சொற்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| வ | க | பு |
| ட் | த | னு |
| ச | ட | ம் |



15) ..........................................
16) ..........................................
17) ..........................................

1

A. பாடசாலை செல்வதற்கு தாமதம் அடைந்தேன்.
B. மனிதர்கள் மரங்களை வெட்டி அகற்றுகிறார்கள்.
C. மழையுடன் கடுங்காற்று வீசியது.
D. பேருந்திற்கு வரமுடியாமல் இருந்தது.
E. ஆலமரமொன்று வீதிக்குக் குறுக்காக விழுந்திருந்தது.

1. DECBA  2.CEDBA  3.ABDCE

19. தம்பியிடம் 3 வகையான 8 நாணயங்கள் உள்ளன. அதன் கூட்டுத் தொகை ரூபாய் 20.00 ஆக இருந்தால் அவரிடம் உள்ள நாணயங்கள்.


1. ரூபாய் 5 நாணயங்கள் 2+ ரூபாய் 2 நாணயங்கள் 4+ரூபாய் 1 நாணயங்கள் 2
2.ரூபாய் 5 நாணயங்கள் 2+ ரூபாய் 2 நாணயங்கள் 2+ரூபாய் 1 நாணயங்கள் 2
3.ரூபாய் 2 நாணயங்கள் 5+ ரூபாய் 5 நாணயங்கள் 1+ரூபாய் 1 நாணயங்கள் 4

❖ கீறிட்ட இடத்திற்கு பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக

குருவிக் ............. மரப்பொந்தினுள் இருந்தன. ஒரு நாள் கடுங்காற்றுக் காரணமாக மரப் பொந்தில் இருந்த .............. தூரத்திற்கு அடித்துச் செல்லப்பட்டன. பெண் குருவி கத்திக் கொண்டு எல்லா இடமும் பறந்து .............

20. 1)குஞ்சு  2)குஞ்சுகள்  3)குட்டி
21. 1)குருவி  2)குருவிகள்  3)குஞ்சு
22. 1)சென்றது  2)சென்றன  3)செல்லும்

❖ கீழே உள்ள படத்தை அவதானித்து விடையின் கீழ்க் கோடிடுக.




23.கமால் கோயிலிலிருந்து வீட்டுக்குச் செல்லும் போது இடது பக்கமாகத் திரும்பும் தடவைகள் எத்தனை ?

1)3  2)2  3)4

24.தேசிய கீதத்தின் போது நிற்கும் நிலை யாது?

1)கவனமாய் நிற்றல்  2)இலகுவாய் நிற்றல்  3)சுயாதீனமாய் நிற்றல்

25.2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி வியாழக்கிழமை எனின் 2017 ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி என்ன கிழமை?

1)செவ்வாய்  2)திங்கள்  3)ஞாயிறு

26. 21 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்திற்குரிய ஆண்டு?

1)2008  2)2016  3)2102

❖ பின்வரும் கோட்பாடுகளின் உதவியுடன் 27 ஆம் 28 ஆம் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து கோடிடுக.




27.கொய்யாப்பழம் ஒன்றின் விலை யாது?

1)ரூ.12.00  2)ரூ11.50  3)ரூ12.50

28.கொய்யாப்பழம் 3 இனதும் அப்பிள் பழம் 4 இனதும் மொத்த விலை யாது?

1)ரூ.134.50  2)ரூ.150.00  3)ரூ.134.00

29)பெருக்கல் × அடையாளத்தின் மூலமும் பிரித்தல் ÷ அடையாளத்தின் காட்டப்பட்டிருந்தால் பின்வரும் கணக்கை சுருக்கினால் வரும் விடை?

9×4÷ 6 =

1)6  2)7  3)8

30. ஒரு பண்ணையிலுள்ள ஆடுகளினதும் கோழிகளினதும் எண்ணிக்கை 20 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 64 ஆகும்.அங்குள்ள ஆடுகளின் எண்ணிக்கை யாது?


1)8  2)12  3)10

31.விருந்துபசாரமொன்றில் 10 பேர் கலந்து கொண்டனர். அவர்கள் தங்களுக்குள் மாறி மாறி கை குலுக்கிக் கொண்டனர். அங்கு இடம்பெற்ற மொத்த கை குலுக்கல்கள் எத்தனை?

1)50  2)60  3)45

❖ பின்வரும் உருவை அவதானித்து 32,33 வினாக்களுக்கு விடை தருக.

32.இதிலுள்ள சதுரங்கள் எத்தனை?



1)12  2)10  3)14

33.இதிலுள்ள முக்கோணங்கள் எத்தனை?

1)9  2)19  3)17

❖ இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

34.முதியவர் ,வயோதிபர் , இளைஞன்,பிள்ளை...................

1)குழந்தை  2) பேரன்  3)சிறுவன்

35.நிறைவுடலி , கூட்டுப்புழு , குடம்பி ,...................

1)வட்டம்  2)முட்டை  3)குளம்

36.ஒரு சிறுவன் பிரயாணத்தில் 1/4 பங்கை நடந்து சென்றும் இன்னும் 48 தூரத்தை பஸ்ஸிலும் பிரயாணம் செய்தான். அவன் சென்ற முழுப் பிரயாணத் தூரம் எவ்வளவு?

1)75km  2)50km  3)64km

37.அப்பா 12 பழ மரக்கன்றுகளையும் மாங்கன்றுகள் 5 உம் நாறங்கன்றுகள் 4 உம் கொண்டு வந்தார். அப்பா கொண்டு வந்த மொத்த கன்றுகள் எத்தனை?

1)22  2)27  3)31

38. ஒரு காகிதத்தாளை 4 ஆக மடித்து வெட்டப்பட்டுள்ள முறை கீழே காட்டப்பட்டுள்ளது. சரியான விடையைத் தெரிவு செய்க.



39. அமரின் தற்போதைய வயது 7 அவரின் அப்பா அவரை விட 4 மடங்கு வயதில் கூடியவர். இன்னும் 4 வருடங்களில் இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

1)32  2)36  3)43

40. ஒரு மைதானத்தைச் சுற்றி நீலம், மஞ்சள் ,சிவப்பு நிறக் கொடிகள் முறையே நடப்பட்டுள்ள 25 ஆவது கொடியின் நிறம் யாது?

1)மஞ்சள்  2)நீலம்  3)சிவப்பு

# தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## பகுதி-II மேல்மாகாணம்

❖ பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

சுத்தமே என்றும் சுகம் அளிக்கும் - தீய
சோம்பலை ஓட்டித் துரத்தும் –அம்மா
இத்தரை வாழ்வைப் பெருக்கும் அம்மா அதற்கு
ஈடேதும் இல்லையான் சொன்னேன்–அம்மா!

கந்தையானலும் கசக்கியுடு– என்னும்
கற்பனை போற்றி நடப்பாய் அம்மா!
சுந்தர மேனியுண்டாகும் அம்மா! இந்தச்
சுத்தத்தின் நன்மை சிறிதோ அம்மா!

1.இப்பாடல் எதனை வலியுறுத்துகின்றது?
................................................................
2.'சுந்தர மேனி' என்பதனால் கருதப்படுவது யாது?
................................................................
3.'சோம்பலை' என்பதன் எதிர்ப்பதம் யாது?
................................................................
4.'சுத்தம்' பற்றிய பழமொழி ஒன்றினை குறிப்பிடுக?
................................................................
5.பிரித்தெழுதுக. அ.கந்தையானாலும் - ...............................
ஆ.மேனியுண்டாகும் - ...............................
6.அடைமொழி ஒன்று தருக...............................

❖ பின்வரும் தொடர்மொழிக்குப் பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக?
7.முனிவர் வாழுமிடம்....................................
8.வழக்கைத் தாக்கல் செய்பவன்..........................

❖ பின்வரும் வாக்கியங்களின் இடைவெளிக்குப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.
9.பறவைகள் பறந்து ............................... (சென்றன/சென்றது)
10.நான் அப்பாவுடன் கடைக்குச் ............................ (சென்றேன்/சென்றோம்)

❖ பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்துக்களை எழுதுக?
11.நட்டாற்றில் விடுதல்–.........................................
12.தோள் கொடுத்தல்–............................................

❖ பின்வரும் வாக்கியங்களில் உள்ள குறியீடுகளின் பெயர்களை எழுதுக?
13."அறம்செய விரும்பு" என்றார் ஔவைப்பாட்டி..................................
14. திருக்குறளை இயற்றியவர் யார்?.........................

❖ பின்வரும் பாடலின் அடுத்த வரியை எழுதுக.
15.ஈசன் நாமத்தை அனுதினம்
......................................................

❖ இடைவெளிக்குப் பொருத்தமான விடையை எழுதுக.
16.

This is a ................


17."தபாற் கந்தோர்" எனும் சொல்லின் ஆங்கிலக் கருத்தை எழுதுக.............................


❖ பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
18.நான் தண்ணீரைக் குடிக்கின்றேன்........................


❖ பின்வரும் 19 ஆம், 20 ஆம் வினாக்களுக்குரிய சிங்களக் கருத்தைத் தமிழில் எழுதுக?
19 .தாத்தா ஆவத?.................................
20.குருதுமா எய்த?........................
21."அதோ ஆசிரியர் வருகின்றார்" என்பதன் கருத்தினை சிங்களத்தில் உச்சரிக்கும் விதத்தை தமிழில் எழுதுக?
......................................................................

❖ மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
22. நான்கு இதழ்களைக் கொண்ட பூ எது?.
1)பவளமல்லிகை 2)நாகமலர் 3)ரோசா 4)அல்லி
23) பச்சயம் இல்லாத தாவரம்
1)வல்லாரை 2)கீரை 3)காளான் 4)வாழை
24.இலங்கைக்கே உரிய பறவை எது?
1)நீலப்புள் 2)குயில் 3) கொக்கு 4)கிளி
25.எமக்கு இலவசமாகக்கிடைக்கின்ற சேவையாக அமைவது
1)பருவச்சீட்டு 2)நீர் 3)மின்சாரம் 4)கல்வி
26.மின்சாரத்தை சிக்கனமாகப் பாவிப்பதற்கு செய்யக்கூடியது.
1) CFL மின்குமிழ் பாவித்தல் 2)அவசியமான இடத்துக்கு மட்டும் பாவித்தல்
3)தேவையற்ற இடங்களிலுள்ள மின்குமிழை அணைத்தல்
4)மேற்குறிப்பிட்ட யாவும்
27. சந்தையின் பொருட்களுக்கான சர்வதேச தரச்சான்றிதழ்
1.SLS 2.OIS 3.ISO 4.WPC
28.எமக்கு இலவசமாகவும் குறைந்த விலையிலும் சேவைகளை வழங்குவோர்.
1) அரசாங்கம் 2)நாட்டுமக்கள் 3)உலக வங்கி 4) வெளிநாட்டில் வேலைபுரிவோர்
29.முலையூட்டி விலங்கு
1)பல்லி 2)ஓணான் 3) உடும்பு 4)கீரி
30. தண்டின் மூலம் நாற்றுக்களை பெறக்கூடியது.
1)மிளகாய் 2)மரவள்ளி 3)வெண்டி 4)புடோல்
31.இந்தப் படத்தில் காணப்படுபவர் யார்?

1)திரு.S.W.R.D.பண்டாரநாயக்க 2)கலாநிதி C.W.W. கன்னங்கர
3)திரு.பொன்னம்பலம் இராமநாதன் 4)திரு. வில்லியம் கோபல்லாவ.
32. படத்தில் காணும் உபகரணத்தை பயன்படுத்துவோர்.

1) விவசாயத்தொழில் புரிவோர் 2)தச்சுத் தொழில் புரிவோர்
3)மீன் பிடிப்போர் 4)கட்டடத் தொழில் புரிவோர்
33. கண்ணாடிக்குவளையொன்றில் சிறிதளவு மண்ணெண்ணெய் விட்ட பின்னர் காணப்படும் விதம்.

1. 2. 3. 4.

34.பொதி செய்யப்பட்ட உணவுகளைக் கொள்வனவு செய்யும் முன் மிகக்கவனத்தில் கொள்ள வேண்டியது.
1)உற்பத்தித் திகதி 2)உள்ளக்கப்பட்ட நிறை
3)காலாவதியாகும் திகதி 4)உள்ளக்கப்பட்டுள்ளவை
35.குடிநீர் போத்தலில் காணப்படும் குறியீடு


36.உலர் மின்கலங்கள் 2, மின்குமிழ் 1,வயர்துண்டு 3 என்பவற்றை இணைப்பதன் மூலம் பெறப்படும் மின்சுற்றின் கீழ் கோடிடுக.


37.தேசியக்கொடியில் முஸ்லிம் மக்களை குறிக்கும் நிறம்.
1)பச்சை 2)செம்மஞ்சள் 3)மஞ்சள் 4)சிவப்பு
38. அரச இலட்சினையில் நெற்கதிர் குறிப்பிடுவது?
1)சௌபாக்கியம் 2)தன்னிறைவு 3)தர்மம் 4.)தூய்மை
39. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த ஆண்டாவது?
1)கி.பி 1505 2)கி.பி 1658 3)கி.பி 1796 4)கி.பி 1815
40.விகாரையில் வாயிற் கோபுரத்திற்கு முன்னால் கதவுகளில் காணப்படும் கலைப் படைப்புக்கள் எவை?
1)கற்றூண் 2)சந்திரவட்டக்கல் 3)சித்திர வேலைப்பாடுகள் 4)யாப்பகூவ சிங்கம்
41.இந்தப்படத்தில் காணப்படுவது.

1)அவுக்கண புத்தர் சிலை 2)புத்தரின் சயன நிலை
3)கல்விகாரை புத்தர் சிலை 4)பராக்கிரமபாகு சிலை
42.இந்தக்குறியீட்டினால் கருதப்படுவது.


1)இந்தப்பக்கம் மேலே 2)கவனமாகக் கையாளக்கூடியது
3)நொறுங்கக்கூடியது 4)தீப்பற்றக்கூடியது.
43. உவர் நீர் எனப்படுவது
1)கடல் நீர் 2)வாவி நீர் 3)ஆற்று நீர் 4)ஏரி நீர்
44. விவசாயிகளுக்கு நன்மை செய்யும் பிராணி
1)ஈ 2)கபரயன் 3)நத்தை 4)மண்புழு
45.கந்தளாய் குளத்தைக் கட்டிய மன்னன்
1)முதலாம் மகாசேனன் 2)தாதுசேனன் 3)இரண்டாம் அக்போ 4)முதலாம் அக்போ
46.எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் எங்கு அமைந்துள்ளது?
1)பொலநறுவை 2)நாத்தாண்டிய 3)சபுகஸ்கந்த 4)யக்கல
47. தோட்டச் செய்கையின் போது முதலில் செய்யவேண்டியது
1)நீர் ஊற்றுதல் 2)பூஞ்செடிகளை வெட்டுதல்
3)குப்பைகளை சேகரித்தல் 4) மண்ணைக் கிளறுதல்
48.நீரில் நனைந்த துணியிலிருந்து நீரை அகற்றும் விதமாவது.
1) சூடாக்குதல் 2)பிழிதல் 3) காற்றில் காயவிடல் 4) மேற்கூறிய யாவும்.
49.வாயு அடுப்பை பாவிக்கும் போது கவனிக்க வேண்டியவை
1)காற்றோட்டமுள்ள இடத்தில் வைத்து இயக்குதல்
2)கதவு ஜன்னல் இல்லாத இடத்தில் வைத்தல்
3)மஞ்சள் நிறமான சுவாலையுடைய அடுப்பை பாவித்தல்
4)பிளாஸ்ரிக் உபகரணங்களில் உணவைத் தயாரித்தல்.
50.இயற்கை அழிவு அல்லாதது.
1)பூமி நடுக்கம் 2)புகையிரத விபத்து 3)சுழற்காற்று 4)இடிமுழக்கம்
51. எண்பதாயிரத்து இருநூற்று ஐந்து என்பதை இலக்கத்தில் எழுதுக.......
52. 60,130 என்பதை சொற்களில் எழுதுக. ..................... ................
53. 8763 உடன் 702 ஐ கூட்டுக............
54.7027 இலிருந்து 528 ஐக் கழிக்க.....................
55.ரவியிடம் 12நெல்லிக்காய்கள் உள்ளன. அவன் அதில் பாதியை தம்பிக்கு கொடுத்தான் தம்பிக்கு கிடைத்த நெல்லிக்காய்கள் எத்தனை?..................
56.

நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?.............
57.

படத்தில் நிழற்றப்பட்ட பகுதியை தசமத்தில் தருக.
58.

கடிகாரத்தில் முகத்தில் காணப்படும் நேரம் யாது?
59. மூன்று நண்பர்கள் 45 நிமிடங்களுக்கு ஒருவர் வீதம் மண்டபத்தை விட்டு வெளியேறினர். கடைசி நண்பர் வெளியேறிய நேரம் 1.15 ஆகும். அப்படியாயின் முதல் நண்பர் வெளியேறிய நேரம் யாது...............
60. இவ்வுருவின் பெயர் என்ன?.........

செவ்வக முகங்கள் எத்தனை?.........

6.கீழ்வரும் படங்களைப் பயன்படுத்தி கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக

1)பிள்ளையின் வடக்குப் பகுதியில் உள்ளது எது?..........
2)சைக்கிளுக்கு ஈசான மூலையில் இருப்பது என்ன.....
3)பந்து இருப்பது கிணற்றுக்கு எத்திசையில்.?

64)அதிகளவில் விற்பனை செய்யப்பட்ட மரக்கறி எது?
65)கரட் 1 Kg 45.00ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டால் கிடைக்கும் பணத்தொகை எவ்வளவு?
66)கரட்டின் இரு மடங்கு கோவா விற்பனை செய்யப்படுமாயின் அதனை வரைபில் குறித்துக் காட்டுக.



'எனது அம்மா மேன்மையானவர்' என்ற தலைப்பில்5 சொற்களுக்கு குறையாது மூன்று வாக்கியங்கள் எழுதுக.